# சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை

ஜனவரி 01 - 07, 2014 பக்கம் - 24 30/-


# அம்பலமானது கடத்தல் நாடகம்



Happy New Year 2014

சுடர் ஒளி வாசகர்கள், விளம்பரதாரர்கள், விற்பனையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.





இப் பண்டிகை காலத்தில், வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகளை வாழ்த்திட மிகச் சிறந்த IDD கட்டணங்கள் அடங்கிய மொபிடெல் IDD அட்டைகள்

| ரீலோட் / ரீசார்ஜ் பெறுமதி | கிடைக்கப் பெறும் IDD அழைப்புகளின் பெறுமதி | கிடைக்கப் பெறும் சர்வதேச SMS பெறுமதி | கிடைக்கப் பெறும் மொத்தப் பெறுமதி |
|---|---|---|---|
| ரூ. 189 | ரூ. 300 | ரூ. 100 | ரூ. 400 |
| ரூ. 589 | ரூ. 900 | ரூ. 400 | ரூ. 1,300 |

Sri Lanka Telecom
Mobitel
உங்களுடனே, என்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

விடுதலைப்புலிகளின் ஆரம்ப கால உறுப்பினர்களில் ஒருவரான பேபி சுப்பிர மணியமும் அவரோடு கூட வந்திருந்தார். பிரபாகரனைச் சந்திப்பதற்கு முன், நாள் முழுவதும் அந்த மோசமான அறைக்குள் வியர்வையில் தெப்பமாக நனைந்து, சென்னைக்கு உரித்தான வியர்வை ஈரக் கசிவோடு காத்திருந்தோம். தலைமறைவு வாழ்க்கையில் ஈடுபட்டவர்கள், எதற்கும் இருளும் வரை காத்திருக்க வேண்டும் என்பது, சூதுவாதற்ற கன்றுக் குட்டிகளான எமக்கு முதலில் தெரியாது. இருண்ட பின்னரும், தாமதமாகவே தான் சந்திப்புக்களும் நிகழும் என்பது கூட அப்போது தெரியாது. பிரபாகரன் அவர்களைப் பொறுத்தவரையில் அவர் பாதுகாப்பைக் கூர்மையாகக் கடைப் பிடிப்பவர். இருண்ட பிறகே நடமாட வேண்டும் என்பதை தேவையைக் கருதி, பழக்கத்தில் கொண்டுவந்தார். தமது அர்ப்பணிப்பையும் இலட்சியத்தையும் அவர் எவ்வளவு தீவிரமாகக் கருதினார் என்பதை, பாதுகாப்புப் போன்ற பிரச்சினைகளில்க் கூட அவர் காட்டிய அக்கறை புலப்படுத் தியது. எனக்கும் அது உடன்பாடானதே. அவருடைய பதினாறு வயதில் இருந்து கடந்த ஏழு ஆண்டுகளாகத் தேடப்பட்டு வருபவர். விடுதலைப் போராட்டத்தில் அர்ப்பணிப்போடு ஈடுபட்டவர்களை ஒழித்துக் கட்டத் தயங்காதவர்கள் நடமாடிய ஒரு சூழலிலே தமது பாதுகாப்பில் அவர் கவனமாக இருந்தது நியாயம் தானே? போராட்டம் என்பது அவரைப் பொறுத்த வரையிலே ஒரு பொறுப்பு வாய்ந்த காரியமாகும்.

இரண்டு இளைஞர்கள் நன்றாக இருட்டியபின் ஆரவாரம் எதுவும் இல்லாமல் வாயிலில் வந்து அமைதியாக நின்றார்கள். ஒருவர் வெள்ளை வேட்டி கட்டி நாட்டு உடையில்; மற்றவர் நீளக் காற்சட்டையும் வெளிறிய நிறச் சேட்டும். இவ்வளவு இளமையானஅப்பாவிகளான அந்த 'இரண்டு பயங்கரவாதிகளைப்' பார்த்த போது நான் திகைத்துப் போனேன். அவர்களுடைய தோற்றம் அவர்களுக்குச் சூட்டப்பட்டிருந்த பெயருக்கு ஈடாகவேயில்லை. இரண்டு பேரும் உயரம் குறைந்தவர்கள். துப்பரவாக காணப்பட்டார்கள். அவர்களுடைய பெயருக்கும், புகழுக்கும் ஏற்றதாக தோற்றம் அமையவில்லை. மிகவும் மென்மையான இதயத்தைக் கொண்ட அப்பாவிகள் போன்ற தோற்றம் .

பேபிசுப்பிரமணியத்திடம் எப்போதும் ஒரு பை. அதில் வெவ்வேறு பத்திரங் களும் அரசியல் பிரசுரங்களும் நிரம்பி இருக்கும். பேபிசுப்பிரமணியத்தை எப்போது நினைத் தாலும், நாட்டு உடையுடன், வெள்ளை வேட்டி, சுமக்கமுடியாத சுமை கொண்ட அந்த உப்பிப் போன தூக்குப் பையோடு தோன்றும் குள்ளமான, சற்றுக் குண்டான மனிதரே நினைவுக்கு வரும். இப்படியான சுமைகளோடு பிரபாகரன் அவர்களைப் பார்க்கமுடியாது. அவருடைய பாணியே வேறு. அவரு டைய அணிகலன் கச்சிதமாக இருக்கும். ஆடை புனைவது பிரபாகரன் அவர்களுக்கு ஒரு நிகழ்வு. அவதி அவதியாக ஆடை அணிந்து வேகமாக வெளிக்கிட வேண்டும் என்ற அவசரத்தை அவரிடம் காணமுடியாது.

பிரபாகரனுடைய இளம் முகம் தெளிவானதாக, பிரகாசமாக இருக்கும். அவரு டைய அகன்ற கண்விழிகளில் ஊடுரு வும் பார்வை, உள்ளே ஊடறுத்து ஆத்மாவை உற்றுப் பார்ப்பது போன்ற உணர்வவே மற்றவருக்கு ஏற்படும். அவருடைய கண்களின் ஆழமே அவரது மனதையும் சிந்தனையையும் பிரதிபலித்துக் காட்டும். மற்றவருடைய முகத்தை நுணுக்கமாக அளவையிடுவது ஒருபொதுவான நிகழ்வு. மற்றவருடைய ஒவ்வொரு வார்த்தையையும் அவரது பார்வை ஊடறுக்கும் போது உரையாடலில் எவ்வித பொய்களோ அன்றி ஏமாற்றுக்களோ நுழைவது என்பது இயலாத காரியம்.

எமது முதல் சந்திப்பு பல மணி நேரம் நள்ளிரவிலிருந்து விடியும் வரை நீண்டது. பிரபாகரன் அவர்களுடைய விசாரணை எல்லாம் பாலாவின் தனிப்பட்ட வரலாறு பற்றியும், குறிப்பாக தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் தொடர்பான பாலாவின் கருத்துப் பற்றியே இருந்ததாகப் பாலா



விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 16



பின்னர் என்னிடம் தெரிவித்தார். பாலாவின் அரசியல் எழுத்துக்களையும், சேகுவேரா, மாவோ சேதுங் ஆகியோரின் கெரில்லாப் போர் முறை பற்றிய பாலாவின் மொழி பெயர்ப்புக்களையும் 'தம்பி' ஏற்கனவே படித்திருந்தார். ஆனாலும் பாலாவுடையதும் என்னுடையதும் போராட்ட உறுதிப்பாடு பற்றி பிரபாகரன் நம்பிக்கை வைப்பதற்கு இவை போதுமானவையாக இருக்கவில்லை. இலண் டனில் உள்ள ஆட்கள் பற்றி, போராட்டம் மட்டில் அவர்களுடைய ஈடுபாடு உண்மை யானதா, தன்னியல்பானதா, நீடித்ததா என்பது பற்றி அவர் விரிவாக அறிய விரும்பி னார். ஆயுதப் புரட்சிப் போராட்டம் ஒன்றை முன் நகர்த்த அரசியல் கோட்பாடும் செயற்பாடும் எவ்வளவு அவசியம் என்பதைத் 'தம்பிக்கு' உணர்த்த பாலா முற்பட்டார். சந்திப்பு வெற்றிகரமாக நடந்தது. எடுத்த எடுப்பிலேயே ஒருவரை ஒருவருக்குப் பிடித்திருந்ததாலும் அவர்களி டையே ஓர் ஆழமான புரிந்துணர்வின் அடிப்படையில் தனித்துவமான நட்பை வளர்த்தெடுக்க பல ஆண்டுகள் பிடித்தன. என க்கும் பிரபாகரன் அவர் களைப் பிடித் திருந்தது.

என்மீது என்றுமே அவர் சந்தேகம் கொண்டதில்லை. என்னை எப்படி அழைப்பது என்பது அவருக்குப் பிரச்சனையாகப் பட்டது. தமிழ்க் கலாசாரத்தில் திருவாளர் என்றோ, திருவாட்டி என்றோ பொதுவாக நேராக அழைப்பதில்லை. சமூகப்படிநிலை, சமூக உறவுகள், குடும்ப உறவுகள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே அவர்கள் கூப்பிடுவார்கள். எங்கள் உறவு குடும்ப உறவுமல்ல; பழகி வந்த உறவுமல்ல. ஆகவே என்னை அவர் 'அக்கா' என்று கூப்பிட முடியவில்லை. அதே சமயம் திருமதி பாலசிங்கம் என்றும் அழைக்க முடியவில்லை. நான் அவரை விட வயது கூடியவள் என்பதால் என்னைப் பெயர் சொல்லிக் கூப்பிடவும் முடியவில்லை. இந்தப் பிரச்சனைக்கு 'தம் பியே' ஒரு சமரசத் தீர்வு கண்டார். பாசத் தோடும், சுருக்க மாகவும் 'அன்ரி' என்று கூப்பிட்டார். பாலாவையும் வேறு ஒன்றிரண்டு பேரையும் வயது வித்தியாசமின்றி ஏனைய தமிழ்மக்களுக்கு 'அன்ரி' என்றே அறிமுகம் ஆனேன். அன்ரி என்றே எல்லோரும் அழைத்தார்கள். பலருக்கு எனது இயற்பெயர் தெரியாது என்றே நினைக்கின்றேன்.

முதல் நாள் சந்திப்புக்குப் பின் , கூடு தலான வசதிகள் கொண்ட வேறு விடுதியிலே சேர்க் கப்பட்டோம். அதையடுத்து, தம்பி தம்முடன் ஒருவரையோ, கூடுதலான போரா ளிகளை யோ கூட்டிக் கொண்டு கிரமமாக வந்தார். உரையாடல் விடியும் வரை நடக்கும். பாலா விடம் பேசுவதற்கு தம்பியிடம் நிறைய இருந் தது; தம்பியோடு விவா திக்க பாலாவிடம் நிறைய இருந்தது. தமிழ் நாட்டில் இருந்த

(பதிவுதொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடற்றவனின் பிரார்த்தனை

பூமுகன்

**மே**கம் மந்தமாகவே இருக்கிறது. மழைக்காலம் முடிந்து குளிர்காலம் தொடங்கி விட்டதைப் போல் கால நிலை தென்படுகிறது. கிணறுகள் வற்றியபடியே இருக்கின்றன. குளங்களில் கலங்கிய நீர் கொஞ்சம் சேர்ந்து இருக்கின்றது. புற்தரைகளில் பச்சைப் புல்கள் தென்படுகின்றன.

ஆனால் மழை பொழிந்தற்கான எந்த ஆதாரங்களும் இல்லை. காரணம் மாரிக் காலத்தில் வெயில் கொட்டித் தீர்க்கின்றது. பனி பொழிந்து தள்ளுகின்றது. பயிர்ச்செடிகளை நாட்டியவன் வானத்தை தினமும் அண்ணாந்து பார்த்தபடியே இருக்கிறான்.

காலநிலை மாற்றம் மனித வாழ்வின் இருப்பை மெல்ல மெல்ல குலைத்து கொண்டே இருக்கிறது. இல்லை மனிதன் இயற்கை சூழலை உருக்குலைத்துக் கொண்டு இருக்கிறான் அது மனிதனுக்கு எதிராக தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது என்றுதான் கூற வேண்டும்.

பொதுவாக இந்த நாள்கள் மழைக்குரியவை. வெளியே செல்வது என்றால் மழை அங்கிகளோடு செல்ல வேண்டிய நாட்கள். வீதிகளில் வெள்ளம் பாய்ந்தோடும் வளவு வாய்க்காலில் வெள்ளம் நிரம்பியிருக்கும். ஆனால் இந்த ஆண்டின் மழைக்காலம் பொய்த்து போய் இருக்கிறது. விவசாயிகளுக்கு கொடை வழங்கும் குளக்கடவுள்கள் கையை விரித்தபடியே இருக்கினறன. வானத்தின் சூரியன் தெள்ளத் தெளிவாக சிரித்தபடியே தெரிகிறான்.

காலம் கலிகாலம் ஆகிப் போய்விட்டது என்ற



உணர்வுடன் மனிதன் தனது நாளாந்த காரியத்தை செய்து கொண்டிருக்கின்றான்.

### ஒரு தொகுதி மகிழ்ச்சி

மழை வேண்டி ஒருவன் அழுதுகொண்டு இருக்கையில் இன்னும் இருவன் மழை வேண்டாம் எனக் கடவுளிடம் வேண்டுகைப் பாடல் பாடிக்கொண்டிருக்கின்றான். இவர்களது மழை மீதான வெறுப்பும் தேவை நியாயமாகவே இருக்கின்றன.

கடந்துபோன வெப்ப காலத்தில் உக்கி உலர்ந்து போய் இருக்கும் கூரை அவன் இருக்கும் குடிசையின் உள்ளிருந்து வானத்தை காட்டிக் கொண்டு இருக்கிறது. மழைத் தூறல் அந்தக் குடிசையின் இருப்பை கொச்சைப்படுத்திக் கொண்டு இருக்கிறது.

இதனால் மழையிடத்திலிருந்து குடிசையை காப்பாற்ற அதற்கு சொந்தக்காரன் கடவுளிடம் மன்றாடிக் கொண்டிருக்கின்றான். இதனால் கடவுள் யாருக்கு இரங்குவது என்ற சங்கட நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றான்.

போருக்குப் பின்னர் இடம்பெயர்ந்து மீள் குடியமர்த்தப்பட்ட மக்களின் பெரும்பாலானவர்கள் இன்றளவும் வீடற்றவர்களாகவே இருக்கின்றனர். ஆரம்ப உதவிகளுக்கு அப்பால் அவர்கள் எந்த சலுகைகளையும் பெற்றுவிடவில்லை.

அரசின் அதிரடி அறிவிப்புக்களால் எங்களுக்கும் ஒரு கல் வீடு வரும் என்ற எதிர்பார்ப்பு அந்த ஏழைக் குடிசைக்காரன் மனதில் தொங்கிக் கொண்டிருக்கிறது. இப்படியே அந்தக் குடிசைக்காரன் நான்கு வருடங்களை கனவோடு கழித்துவிட்டான்.

பதிவுகள், புள்ளியிடல்கள், பெயர் வெளியீடுகள் என்று எல்லாவற்றிலும் பார்த்துப் பார்த்து மனதுக்குள் அத்திவாரம் இட்டு வீடு கட்டத் தொடங்கிய அவனது ஏழ்மை இப்போது மழையில் கரைந்துபோகும் நிலையில் இருக்கிறது. ஆதலால் அந்தக் கரைதலில் இருந்த தன்னை பாதுகாக்க மழை மீது கோபமாய் இருக்கிறான் அவன்.

அடிப்படை வசதிகள் ஏதுமற்ற பொருளாதார பூஜ்ய நிலை கொண்ட மக்களுக்கு இன்றளவும் அரசின் சலுகைகள் முற்றாக கிடைக்கவில்லை. இந்த உண்மையை வன்னியில் ஒரு மீளாய்வு நடத்தினால் புரிந்து கொள்ள முடியும்.

### அதிகாரக் கூலிகள்

தமக்கு இருக்கும் செல்வாக்கையும் அதிகாரங்களையும் அவப்போது பயன்படுத்திக் கொள்பவர்கள் வாழ்க்கையில் வென்று விடுகின்றனர். உதாரணத்துக்கு வன்னியில் பல நிரந்தர வீடுகள் ஆள்களற்றுக் கிடக்கின்றனர். இவ்வாறு பயனற்றுக் கிடக்கும் வீடுகளுக்கு சொந்தக்காரர்கள் வேறு இடங்களில் சுகபோகம் கொள்கின்றனர்.

ஆனால் உண்மையில் வீடு தேவையான ஆள்களின் எண்ணிக்கை அதிகம் கொண்ட குடும்பங்கள் குடிசைக்குள் உறங்க இடமின்றி நாளும் பொழுதும் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். இதை அதிகாரிகள் அறியாமல் இல்லை.

ஆரம்பத்தில் ஆவண ரீதியாக விடுக்கப்பட்ட தவறுகள் மக்களையம் அதிகாரிகளையும் பாதிதிருக்கின்றனர். குறிப்பாக காணி உரிமம் தொடர்பான பத்திரங்களைச் சரிவர கொண்டிராத குடும்பங்களுக்கு உதவித் திட்டங்களுக்கான பரிந்துரை நிறுத்தப்பட்டது. ஆனால் சில குறுக்கு வழி மனிதர்கள் அந்த நலத் திட்டங்களைத் தந்திரமாகப் பெற்றனர் என்பதை எவரும் மறுக்க முடியாது.

இந்திய வீட்டுத் திட்டம் மற்றும் இதர வீட்டுத் திட்ட பணிகள் தற்போது கிடப்பில் போடப்பட்டுள்ளன. மக்கள் தேவை குறித்து அதிகாரிகளின் அசமந்தப் போக்கு இந்த நிலைக்கு காரணமாகிருக்கிறது. மக்களின் துன்ப துயரங்களைச் சரிவர எடுத்துக் கூறுவதற்கோ அவர்களின் எதிர்காலம் பற்றி நியாயமாகச் சிந்திப்பதற்கோ எந்த அதிகாரிகளும்தயாராகஇல்லை அரசியல் வாதிகளும் அதே நிலைப்பாடுதான்.

இவர்கள் தமது பதவிகளுக்காவும் இருப்புக்காகத் தாம் சார்ந்த கட்டமைப்புகளில் தங்கியிருக்கின்றனர். அந்தக் கட்டமைப்பின் தரகு வேலைகளை மட்டுமே இவர்களால் முன்னெடுக்க முடிகின்றது. மாறாக மக்கள் தேவை குறித்துச் சுட்டிக்காட்டி அவர்களுக்கு தேவையானவற்றை பெற்றுக் கொடுக்க இவர்களால் முடியவில்லை.

கடந்த வருடத்தில் ஏற்பட்ட மழை காரணமாக பெருமளவு குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தங்கி இருக்க வேண்டிய நிலையேற்பட்டது. தற்போது மழை பெய்யாவிட்டாலும் அடுத்து வரும் மாதங்களில் இந்த நிலை நீடிக்கும் என்று கூற முடியாது. அடுத்து வரும் மாதங்களில் மழை பெய்யுமானால் மக்கள் மீண்டும் இடப்பெயர வேண்டிய நிலை ஏற்படும். இதற்கும் மாவட்டங்களின் அனார்த்த முகாமைத்துவ குழு அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளதாக அறிவிக்கப்படும். இது வெள்ளம் வந்த பின் அணை கட்டும் முயற்சியே.

மக்கள் வெள்ள நிவாரணங்களையோ இத்துப்போகும் தறப்பாள்களையோ பருவத்துக்கு பருவம் எதிர்பார்க்க வில்லை. சிலருக்கு கிடைத்தது போல தமக்கும் நிரந்தர வீடு கிடைக்க வேண்டும். அதில் நிம்மதியாக படுத்துறங்க வேண்டும் என்பதையே எதிர்பார்க்கின்றனர்.

இதற்கு விடை கூறுவதற்கு அதிகாரிகள் தயார் இல்லை. அவர்களது விளக்கம் - விரைவில் வரும் என்பதே.

மழை வேண்டிப் பிரார்த்தனை செய்ய வேண்டிய நாளில் அது வேண்டாம் எமக்கு என்று மக்கள் நோன்பிருக்கும் அவலம் ஏற்பட்டிருப்பதை அதிகாரிகள் உணர வேண்டும். பருவங்களுக்கு பருவம் அவரவர் தமக்கான கடமைகளைச் சரிவரச் செய்தால் இடர் கால ஏற்பாடுகள் வீண் விரயங்களைக் குறைக்கலாம் என்பதை இன்னும் எவருமே புரிந்துவிடவில்லை. இயற்கையய நோவதை விடுத்து செயலில் நாம் சரியாக இருந்தால் எந்த வில்லங்கமும் ஏற்படாது அல்லவா?.


Cow & Gate

## பொதுமக்களுக்கான அறிவித்தல்

இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் அனைத்துத் தொகுதி Cow & Gate தயாரிப்புகளும் DCD எனப்படும் இரசாயனப்பொருள் உள்ளடங்கவில்லை என்பதனை, இலங்கை கைத்தொழில் தொழினுட்ப நிறுவனத்தினால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறித்து இத்தால் சகல பொதுமக்களுக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

எமது பண்டகசாலையிலிருந்து வெளியேறும் ஒவ்வொரு Cow & Gate பக்கட்டுகளும், (கீழே குறிப்பிட்டுள்ளது போல) DCD இரசாயனப்பொருள் உள்ளடங்கவில்லை என்பதை உறுதிப்படுத்தும் முகமாக, சுகாதார அமைச்சினால் கட்டாயமாக்கப்பட்டுள்ள ஸ்டிக்கர் ஒன்றினைத் தாங்கி வரும்.

இது 2013 செப்டெம்பர் 4ம் திகதி சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட PA/EOH/FCAU/42/2013 இலக்க திருத்தியமைக்கப்பட்ட பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்படுகின்றது.

ඩී.සී.ඩී රසායනිකය අඩංගු නොවන බවට තහවුරු කරන ලදී.
டி.சி.டி. எனும் இரசாயணப் பொருள் அடங்கவில்லையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
Batch No:

IMAGE

இது பற்றிய மேலதிக விளக்கங்களுக்கு அழையுங்கள் 0773-290183 அல்லது 0773-290160


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புடினின் வல்லரசுக் கனவு

நீலன்

ரஷ்ய உளவுத்துறையான கே.ஜி.பியில் தனது வாழ்க்கையை ஆரம்பித்தவர் தான் தற்போதைய ரஷ்ய அதிபராக இருக்கும் விளாடிமிர் புடின். இவர் உளவுத்துறையில் இருக்கும் போதே ரஷ்யா உலகத்திலேயே பெரிய நாடு என்ற கொள்கையுடையவராக இருந்தவர். இன்றும் அதே கொள்கையைத் தொடர்கிறார் என்கின்றனர் சில ஆய்வாளர்கள்.

ரஷ்யாவை மீண்டும் உலக அரங்கில் ஆதிக்கம் செலுத்த வைக்க புடின் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

சோவியத் ஒன்றியம் போல் பல நாடுகளை ரஷ்யாவுடன் ஏதோ ஒரு வகையில் இணைத்து, உலெகங்கும் ரஷ்யாவின் ஆதிக்கத்தை நிலை நாட்ட முயல்கிறார்.

2000 இல் ரஷ்ய அதிபரான புடின், ரஷ்யப் படைத்துறைக்கு மீண்டும் புத்துயிர் ஊட்டினார். ரஷ்யாவின் எரிவாயு உற்பத்தி அதிகரிப்பும், உலகச் சந்தையில் எரிபொருள் விலை அதிகரிப்பும் ரஷ்யாவின் பொருளாதாரத்தை மேம்படுத்த உதவின.

விளாடிமிர் புடினின் உளவுத்துறை அனுபவமும் பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கையில் முக்கியத்துவம் வகித்த அனுபவமும் ஒருங்கு சேர்ந்து அவருக்கு பன்னாட்டு அரசியலில் பெரும் சக்தியைக் கொடுத்துள்ளது.

இந்த அனுபவம் தான் அமெரிக்காவின் உளவுத்துறையில் பணியாற்றிப் பின்னர்




உண்மைகளை உரக்கச் சொன்ன எட்வேட் ஸ்நோடனை ரஷ்யாவுக்குள் கொண்டு போய்ச் சேர்த்து அமெரிக்காவின் கண்ணுக்குள் விரல் விட்டு ஆட்டும் பணியை செய்ய வைத்தது.

தற்போது ரஷ்யாவின் பாதுகாப்புச் செலவீனம் 90 பில்லியன் அமெரிக்க டொலராக உயர்ந்துள்ளது. மேற்கு நாடுகள் ரஷ்யாவை போரில் தோற்கடிக்கப்பட்ட ஒரு நாடு போல் நினைப்பது நீண்ட நாள்களாகவே புடினை ஆத்திரப்படுத்திக் கொண்டிருக்கிறது.

அண்மைக் காலங்களாக ரஷ்ய அரசு சார்ந்த அதிகாரிகள் ஜப்பான், தென்கொரியா, இந்தியா போன்ற நாடுகளுக்கு அடிக்கடி பயணங்களை மேற்கொண்டு இருதரப்பு வர்த்தகங்களையும் உறவுகளையும் மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இந்த நூற்றாண்டில் உலகப் பொருளாதாரத்தின் சூழல் மையம் ஆசியாவே என்பதை அமெரிக்கா மட்டுமல்ல, ரஷ்யாவும் நன்குணர்ந்துள்ளது.

மத்திய ஆசியாவில் சீனாவின் போட்டியை ரஷ்யா எதிர்கொள்ளலாம். ஆனால் இரு நாடுகளும் பிரேஸில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா ஆகியவற்றைக் கொண்ட பிரிக்ஸ் நாடுகள் கூட்டமைப்பின் மூலமும் ஷாங்காய் ஒத்துழைப்பு நாடுகள் மூலமும் பிரச்சினைகளைத் தங்களுக்கிடையில் தீர்த்துக் கொள்ளும் வாய்ப்பு உண்டு.

இதேவேளை உலக அரங்கில் ரஷ்யாவின் மீள் வருகையைப் பகிரங்கப்படுத்த புடினிற்குக் கிடைத்த அரிய வாய்ப்பு சிரியாவின் இரசாயனக் குண்டு வீச்சுக்கு எதிராக அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா முன்னெடுத்த நடவடிக்கைதான். அதை வெற்றிகரமாக முறியடித்தார் விளாடிமிர் புடின். இரசாயனக் குண்டு பாவித்தால் அது சிரியாவின் முடிவுக்கு வழி வகுக்கும் என எச்சரித்திருந்த ஒபாமாவால் எதையும் செய்ய முடியவில்லை. ஐ.நா.வின் பாதுகாப்புச் சபையில் சிரியாவிற்கு எதிராகத் தீர்மானம் கொண்டு வந்தால் அதை வீட்டோ அதிகாரம் மூலம் இரத்துச் செய்வேன் என்று சொல்லித் தீர்மானம் கொண்டு வருவதைத் தடுத்தார் புடின்.

அவர் அத்துடன் நின்றுவிடவில்லை. சிரியா மீது தாக்குதல் நடத்தினால், அமெரிக்க நட்பு நாடான சவூதி அரேபியாவின் மீது ரஷ்யா தாக்குதலை நடத்துமென புடின் மிரட்டினார். இவை யாவும் ரஷ்யாவின் சென்.பீட்டர்ஸ் போர்கில் நடந்த ஜி.20 நாடுகளின் மாநாட்டில் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவுடன் நடத்திய 20 நிமிடப் பேச்சுவார்த்தையில் கூறப்பட்டன. அத்துடன் நின்றுவிடாது, அமெரிக்க நடாளுமன்றத்தின் கீழ் அவையான காங்கிரஸின் தீர்மானங்களில் ரஷ்யா செல்வாக்குச் செலுத்தும் அளவுக்கு புடினின் நடவடிக்கைகள் அமைந்திருந்தன.

லிபியாவின் முன்னாள் ஆட்சியாளர் மும்மர் கடாபி, எகிப்தின் கமால் அப்துல் நாஸார், சிரியாவின் ஹ பீஸ் அஸாத் ஆகியோருடன் நெருங்கிய உறவை வைத்திருந்த ரஷ்யா, மத்திய கிழக்கில் எண்பதுகள் வரை பெரும் ஆதிக்கம் செலுத்தி வந்தது. அதை மீண்டும் நிலை நிறுத்த புடின் பெரும் முயற்சி எடுக்கின்றார். எகிப்துடன் மீளவும் உறவைப் புதுப்பிக்கின்றார். சவூதி அரேபியாவுடன் உறவைச் சீர்ப்படுத்துகிறார். ஈரானைப் பொருளாதாரத் தடையில் இருந்து காப்பாற்ற முயற்சிக்கின்றார். துருக்கியுடன் வர்த்தக உறவை மேம்படுத்து கிறார். ஈராக் உள்ளிட்ட பல நாடுகளுக்கு நிறையவே படைக்கலன்களை விற்பனை செய் கின்றார்.

ரஷ்யாவின் படைக்கலன் உற்பத்தித்துறை ஐக்கிய அமெரிக்காவுடன் ஒப்பிடுகையில் மிகவும் பின்தங்கி விட்டது என்ற நினைப்பில் இருந்தவர்களுக்கு அண்மைக் காலங்களாக ரஷ்யா உற்பத்தி செய்து காட்சிப்படுத்திய படைக்கலன்கள் பேரிடியாக அமைந் தன. ரஷ்யாவில் உற்பத்தி செய்யப்பட்ட பி எம் பிரி 72 டாங்கிகள் பலரது கவ னத்தையும் ஈர்த்துள்ளன.

ரஷ்யா அடுத்த பத்து ஆண்டுகளில் 755 பில்லியன் அமெரிக்க டொலரைத் தனது படைக்கலன் உற்பத்திக்குச் செலவிடவுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. 2012 இல் ரஷ்யா தனது பாதுகாப்புச் செலவை 25 வீதத்தால் அதிகரித்தது. அதுவே இந்த ஆண்டில் ஜப்பானையும், பிரிட்டனையும் விஞ்சிவிடும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

ரஷ்யாவின் பாதுகாப்புத்துறை வலிமைதான் அதன் மதிப்பை மீண்டும் உலக அரங்கில் உயர்த்தும் என புடின் நம்புகிறார்.

ரஷ்யாவின் எஸ்.350 எனப்படும் விமான எதிர்ப்பு முறைமை அமெரிக்காவின் பேற்றியோர்ரிக் முறைமையிலும் பார்க்கச் சிறந்தது எனப் படைத்துறை நிபுணர்கள் கருதுகின்றனர். ரஷ்யாவிற்கு எந்த ஒரு நாட்டிலும் இருந்து தாக்குதல் நிகழும் அச்சம் இல்லை. ஆனால் தனது நாட்டின் படை வலிமையை மேம்படுத்த புடின் எப்பொழுதும் தன் எதிரிகளால் சூழப்பட்டது போலவும் தாக்குதலுக்கு உள்ளாகப் போவது போலவும் தனது நாட்டு மக்களுக்கு பூச்சாண்டி காட்டிக் கொண்டேயிருப்பார்.

போல்ரிக் நாடுகளான எஸ்தோனியா, லத்துவியா, லித்துவேனியா ஆகியவை ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்தமை ரஷ்யாவை ஆத்திரப்படுத்தியது. மேலும் 01.07.2013 இல் இருந்து குரோஷியாவும் 28 ஆவது நாடாக ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்தது.

1991 இன் இறுதியில் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியின் பின்னர் ரஷ்யாவுக்கும், ஐரோப்பாவுக்கும் இடையிலான எல்லைக் கோடு மாற்றி அமைக்கப்பட்டுவிட்டது. அத்துடன் சோவியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் போல்ரிக் நாடுகள் சுதந்திரப் பிரகடனம் செய்த போது ஜேர்மனி முந்திக் கொண்டு அவற்றை அங்கீகரித்தது. அது மட்டுமன்றி அவை ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்குரிய உகந்த பொருளாதாரச் சூழ்நிலை அந்த நாடுகளில் உருவாக்கவும் ஜேர்மனி பெரிதும் உதவியது. 1994 இல் ரஷ்யப் படைகள் போல்ரிக் நாடுகளில் இருந்து வெளியேறுவதற்கும் ஜேர்மனியே உதவியது.

போல்ரிக் நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்தவுடன் ரஷ்யா, அந்த நாடுகளுக்கு தான் விற்பனை செய்யும் எரிவாயுக்களின் விலைகளைக் கண்டபடி உயர்த்திற்று. மேலும் பல நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணையாமலிருக்க சுங்க ஒன்றியத்தை ரஷ்யா உருவாக்கியது. இப்போது அது மத்திய ஆசிய நாடுகளையும் இணைத்து யூரோ - ஆசிய ஒன்றியம் எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் உக்ரேன் நாட்டை ஐரோப்பிய ஒன்றியத்தில் இணையாமல் ரஷ்ய பலத்த எதிர்ப்புக்களுக்கு மத்தியில் தடுத்தது. யூரோ- ஏசியன் ஒன்றியத்தில் ரஷ்யாவுடன் பெலாரசும், கஜகஸ்தானும் இணைந்துள்ளன. துருக்கியும், இந்தியாவும் இதில் இணைய வாய்ப்புண்டு. உக்ரேனும் இணைகின்றது.

உலக அரங்கில் ரஷ்யாவின் ஆதிக்கத்தை தனது கனவின்படி அதிகரிக்கச் செய்வதற்கு ஊடகங்கள் மீதான தனது பிடியை இறுகச் செய்ய வேண்டும் என எண்ணிய விளாடிமிர் புடின் தனது நாட்டின் பிரதான ஊடகங்களை அரசுடைமையாக்கியுள்ளார். மேற்கு நாடுகள் ரஷ்யாவில் சுதந்திரமாக இயங்கும் ஊடகங்களைப் பாவித்து தனக்கு எதிரான பரப்புரையை மேற்கொள்ளும் என்பதை உணர்ந்த புடின் பிரதான ஊடகங்களை அரச உடைமையாக்கி தனக்கு நம்பிக்கையானவர்களிடம் ஒப்படைத்துள்ளார்.

உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்தமையைத் தொடர்ந்து ரஷ்யப் பொருளாதாரம் சீரடைந்துள்ளது. சீனாவின் எரிபொருள் இறக்குமதி அதிகரிப்பு, மத்திய கிழக்கில் அரபு வசந்தத்தைத் தொடர்ந்து உருவான திடமற்ற நிலை, ஈரானுக்கு எதிரான பொருளாதாரத்தடை ஆகியன கடந்த சில ஆண்டுகளாக எரிபொருள் விலையை உயர்த்திக் கொண்டே இருந்தன.

அமெரிக்காவிலும் கனடாவிலும் கண்டுபிடிக்கப்பட்ட பெரும் எரிபொருள் இருப்பும் ஈரானுக்கு எதிரான பொருளாதாரத் தடை நீக்கமும் உலகச் சந்தையில் எரிபொருளின் விலையை மீண்டும் விழச் செய்யலாம்.

உலகச் சந்தையில் மசகு எண்ணெயின் விலை பீப்பாய் ஒன்றிற்கு நூறு டொலரால் குறையும் போது ரஷ்யப் பொருளாதாரம் ஆட்டம் காணலாம். அத்துடன் ரஷ்யாவின் பிறப்பு வீதம் ஐரோப்பாவைப் போல் குறைவானதாகவும் இறப்பு வீதம் ஆபிரிக்காவைப் போல் அதிகமானதாகவும் இருக்கிறது. படித்த ரஷ்ய இளைஞர்கள் பலர் ரஷ்யாவை விட்டு வெளியேறுகிறார்கள். ஒரு பொருளாதாரம் மேம்படுவதற்கு அதிக மக்கள் தொகை அவசியமானது. அமெரிக்கா, சீனா, ஜப்பான் போன்றவற்றின் பொருளாதாரத்துக்கு அந்த நாடுகளின் மக்கள் தொகையே சிறந்த தூணாக உள்ளது. மக்கள் தொகை குறைந்த நாடுகளே ஐரோப்பிய ஒன்றியம் ,ஆசியான் என்று விதவிதமான பெயர்களைச் சூடி ஒன்றாகக் கூடி தமது பொருளாதாரத்தை மேம்படுத்துகின்றன.

இந்த நிலையில் குறைந்து கொண்டு செல்லும் மக்கள் தொகையும், அதிகரிக்கும் வயோதிபர்களின் எண்ணிக்கையும்

ரஷ்யாவின் பொருளாதாரத்துக்குப் பெரும் சுமையாக அமையப் போகிறது .இதனால் அரச செலவீனங்கள் அதிகரித்து புடினின் வல்லரசுக் கனவு பலிக்காமலே போய்விடவும் கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பலமானது கடத்தல் நாடகம்

குறுக்காலபோவான்
+ ஹரிஸ்

"வழமையாக அவன் தமக்கை வீட்டிலை தான் படுக்கிறவன். அண்டைக்கு இரவும் எங்கட வீட்ட சாப்பிட்டுட்டு அங்க போட்டான். வீட்டில இருந்தவ அடுத்தநாள் சுனாமி நினைவு நாளுக்காண்டி மருதங்கேணிக்கு போட்டினம். இவனுக்கும் கை ஏலாது. அதால விடிய தொழிலுக்கும் போகேல்ல. இவன்ர கூட்டாளிமார் வந்து சாமான்களை எடுத்துக் கொண்டு இவனுக்கும் சொல்லிப் போட்டு தொழிலுக்கு போனாங்கள். அதுக்குப் பிறகு தான் விடிய 6.45 போல நான் முற்றத்தைக் கூட்டிக் கொண்டு நிற்கேக்கை மூன்றாவது மகள் ஓடி வந்தா.

"அப்பா தம்பி ஒரு எஸ்.எம்.எஸ் போட்டிருக்கிறான்" எண்டு போனை நீட்டினா. அதில " அப்பா நான் அமுதன். என்னை இனந்தெரியாத நாலு பேர் கடத்திக் கொண்டு போறாங்கள். அவங்கள் பிஸ்ரல் வைச்சிருக்கிறாங்கள். அதில ஒருத்தன் தமிழ் கதைக்கிறான். மற்றவங்கள் சிங்கள ஆக்கள். என்ர போனை பறிச்சுப் போட்டாங்கள். இப்ப தமிழ் கதைக்கிறவன் தான் போனைத் தந்து வீட்டை மெசேச் போடச் சொன்னவன்". இது தான் அந்த எஸ்.எம். எஸ். பார்த்த உடனேயே நான் அழத் தொடங்கிட்டன். பிறகு ஈ.பி.டி.பி பொறுப்பாளர் தெய்வேந்திரத்துக்குச் சொன்னன். அவர் அமைச்சர் டக்ளசிட்ட தெரியப்படுத்திறதாகச் சொன்னார். அதுக்குப் பிறகு நானே அமைச்சருக்கு போன் பண்ணி விசயத்தைச் சொன்னன். அதுக்கு அவர் " நீங்கள் பொலிஸில முறைப்பாட்டைக் குடுங்கோ. மிச்சத்தை நான் பார்த்துக் கொள்ளுறன்'' எண்டு சொன்னார். நானும் பொலிஸ்ரேசனுக்கு முறைப்பாடு குடுக்கப் போனன். அங்க இருந்த ஒரு பொம்பிளைப் பொலிஸ் " இப்பிடி கனபேர் கடத்தப்பட்ட மாதிரி பொய் முறைப்பாடு குடுத்து, அந்த முறைப்பாட்டுக் கொப்பியை வெளிநாட்டில கொண்டு போய் காட்டி சிற்றிசன் எடுக்கிறவை. அதுக்குத் தான் நீங்களும் வந்தனீங்களோ ?" எண்டு கேட்டா.

"நாங்கள் அப்பிடி நாடகம் ஆடுற ஆக்கள் இல்ல." எண்டு சொன்னன். அண்டைக்கு பொலிஸ் பெரியவர் இல்லை. இரண்டாவது பெரியவர்தான் நிண்டார். அவர் என்னைக் கண்டபாட்டுக்கு ஏசினார். "இங்க இப்ப சிவில் நிர்வாகம் நடக்குது. இந்தச் சமாதான காலத்தில பிஸ்டலை கண்டனீங்களோ? எப்படி அவங்கள் பிஸ்டலோட வந்தவங்கள் எண்டு நீ சொல்லுவாய்?" எண்டு கேட்டார். நான் மகன் அனுப்பின எஸ்.எம்.எஸ்ஸை அவரிட்ட காட்டினன். உடன அவர் மற்றப் பொலிஸ்காரரைப் பாத்து " ஆளின்ட அட்ரஸ், போன் நம்பர் எல்லாம் எடுத்துக்கொண்டு முறைப்பாட்டைப் பதியுங்கோ. பொய் முறைப்பாடா இருந்தால் ஆளை அரஸ்ட்பண்ண வேணும்." எண்டு ஓடர் போட்டார்.

பிறகு குற்றத்தடுப்புப்பிரிவில முறைப்பாடு எடுக்க கூட்டிக்கொண்டு போய்ச்சினம். அப்ப என்ர மகன் (கடத்தப்பட்டதாகக் கூறப்பட்டவர்)கோல் எடுத்தார். அப்ப என்ர போன் பொலிஸிட்டத்தான் இருந்தது. பொலிஸ்காரர் எடுத்து மகனோடகதைச்சார்.

"எங்க இருக்கிறீர்? வடிவாப் பார். உனக்கு இடம் தெரியும். நாங்கள் பொலிஸ். அரிவரி படிச்சுப்போட்டு வேலைக்கு வரேல. எல்லா ரெயினிங்கும் எடுத்துப்போட்டுத்தான் வந்திருக்கிறம். இந்தப்போன் ஆற்ரை? அவனிட்ட போனைக்குடு." எண்டு அவர் சொல்ல போன் 'கட்'டாபோச்சு. அதுக்குப்பிறகும் பொலிஸ்காரர் நம்பேலை.

"உன்ர மகனுக்கு லவ் இருக்கா?"

" அவனுக்கு கடன் இருக்கா?"

"உன்ர பெடியனுக்கு ஒரு பிள்ளை இருக்கெண்டு உனக்குத் தெரியுமோ?"

எண்டு நிறைய விசாரணை. அவங்கள் முறைப்பாடு செய்த துண்டு கூட தரேல்லை. அதுக்குப் பிறகு மனித உரிமை ஆணைக்குழுவிட்ட போனன். அவை முறைப்பாட்டுத் துண்டை கேட்டிச்சினம். நான் நடந்ததைச் சொன்னன். பிறகு அவை பொலிசுக்கு கோல் எடுத்து,

"இது மனித உரிமை மீறல். நீங்கள் முறைப்பாட்டுத் துண்டை குடுக்காட்டி நாங்கள் பொலிஸ் மேலநடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும்" எண்டு சொல்லிச்சினம்."



இப்படி வடமராட்சியைச் சேர்ந்த சூரியகுமாரன் என்பவர் தனது 22 வயது மகனான தமிழமுதன் கடத்தப்பட்ட (?) கதையை கடந்த சனிக்கிழமை மாலை5.30க்கு எங்களுக்கு சொல்லிக் கொண்டிருந்தார். அதே சமயத்தில் தான் கடத்தப்பட்டதாக நாடகமாடிய அவரது மகன் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார் என்பது முரண்நகை.

கடந்த 25ஆம் திகதி தமிழமுதன் கடத்தப்பட்ட செய்தியால் வடமராட்சி இன்பருட்டியில் ஒரே பரபரப்பு. மீனவர் சங்க பிரதிநிதியான சூரியகுமாரின் மகன் என்பதால் எல்லோருக்கும் அமுதனை (கடத்தப்பட்டதாக நாடகமாடியவரின் சுருக்கப் பெயர்) நன்றாகத் தெரிந்திருந்தது. திடீரென எந்தவித காரணங்களுமின்றி அவர் இனந் தெரியாதவர்களால் கடத்தப்பட்டார் என்ற செய்தி அப்பகுதி மக்களிடையே இனம் புரியாத ஓர் அச்ச உணர்வை ஏற்படுத்தியிருந்தது.

### தன்னைத்தானே ஏன் கடத்தினார்?

ஆனால் உண்மையில் நடந்ததோ வேறு . பொலிஸில் சரணடைந்த பின்னர் அமுதன் அக்கு வேறு ஆணி வேறாக உண்மையை கொட்டி விட்டார்.

அமுதனுக்கு நீண்டகாலமாகவே வெளிநாடு செல்ல வேண்டும் என்று ஆசை. ஆனால் இப்போது வெளிநாடு செல்வதென்பது முயற்கொம்பான விடயம். அப்படியும் கெட்டித்தனமாக படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்கோ அல்லது மாணவர் விசாவில் இலண்டனுக்கோ அல்லது முகவர் மூலம் பிரான்சுக்கோ சென்றாலும் கூட நிரந்தர குடியுரிமையை பெற்றுக் கொள்ள பெரும் பாடு பட வேண்டியிருக்கிறது. பலர் திருப்பியனுப்பப் பட்டும் வருகிறார்கள். இலங்கைக்கு வருவது உண்மையிலேயே அவர்களுக்கு உயிர் அச்சுறுத்தலான விடயம் என்று அந்தநாட்டு அதிகாரிகள் உறுதியாக நம்பினால் மாத்திரமே நிரந்தர குடியுரிமையோ அல்லது வேலை செய்வதற்கான அனுமதியோ கிடைக்கும். இல்லாத பட்சத்தில் ஒளித்து ஒளித்து வேலை செய்து விட்டு அதிகாரிகளிடம் பிடிபடும் ஓர் நாளில் இலங்கைக்கு திரும்ப வேண்டியிருக்கும்.

இவற்றையெல்லாம் நன்கு அறிந்திருந்த அமுதன் வேறு ஒரு திட்டம் போட்டார். தனக்கு உண்மையிலேயே உயிர் அச்சுறுத்தல் இருக்கின்றது என்று எல்லோரையும் நம்ப வைப்பதற்காக தன்னைத்தானே அவர் கடத்தினார்.

26 ஆம் திகதி அதிகாலை அவருடைய கூட்டாளிகள் கடலுக்குச் செல்ல இவர் யாருக்கும் தெரியாமல் மினிபஸ்ஸில் ஏறி முல்லைத் தீவுக்கு வந்துவிட்டார். ஏற்கனவே கைவசம் இருந்த வேறு ஒரு 'சிம்'மை பயன்படுத்தி தான் கடத்தப்படுவதாக தந்தைக்கு ஒரு குறுஞ் செய்தியை அனுப்பியிருக்கிறார். பின்னர் அந்த சிம்மை செயலிழக்கச் செய்து விட்டு தனது நண்பர் ஒருவரின் வீட்டில் தலைமறைவாகி விட்டார்.

### திட்டமும் ஓட்டைகளும்

இவ்வாறு அமுதன் ஆடிய கடத்தல் நாடகம் அவரது குடும்பத்தாருக்கும் தெரிந்திருக்க வேண்டும். ஏனெனில் தனது மகன் கடத்தப்பட்டது குறித்து ஒரு தந்தை அடைந்திருக்க வேண்டிய பதற்றம்



(21 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி.01 – 07, 2014
sudarolijaffna@gmail.com

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

# காலுக்கு அளவாகத் தேடுங்கள் செருப்பை

"கூட்டமைப்பின் வசம் உள்ள உள்ளூராட்சி சபைகளின் பட்ஜெட்டுக்கு எதிராக வாக்களிக்கும் கூட்டமைப்பு உறுப்பினர்களின் பதவி பறிக்கப்படும்" என்ற அறிவிப்பை கூட்டமைப்பு வெளியிட்டுள்ளது.

உண்மையில் இத்தகைய அறிவிப்பு ஒரு ஜனநாயகக் கட்சிக்கு பொருத்தப்பாடு உடையது அல்ல என்பதே மக்களின் கருத்து. மக்களின் நலனுக்காகக் கொண்டு வரப்படும் வரவு - செலவுத் திட்டங்கள் தோற்கடிக்கப்படுவதன் மூலம் குறித்த உள்ளூராட்சி சபைக்குள் அடங்கும் பிரதேச அபிவிருத்திகள் முடங்கிப் போகும் அபாயம் உண்டுதான்.

ஆனால் அதற்காகத் தமது கட்சி சமர்ப்பிக்கிறது என்பதற்காக மக்கள் நலனுக்கு விரோதமான அல்லது மக்கள் நலனைக் கவனத்தில் கொள்ளாத வரவு - செலவுத் திட்டங்களுக்கு கண்ணை மூடிக்கொண்டு கையை உயர்த்த வேண்டும் என்று கூட்டமைப்பு தனது உறுப்பினர்களுக்குச் சொல்வது நியாயம்தானா?

தெற்கில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் இருக்கும் உள்ளூராட்சி சபைகள் பலவற்றினதும் பட்ஜெட்டை அந்தக் கட்சி உறுப்பினர்களே தோற்கடித்து வருகின்றனர். பிரதேச அபிவிருத்திக்கு ஒவ்வாதவை என்று கூறியே இந்த வரவு - செலவுத் திட்டங்களை அவர்கள் நிராகரித்துள்ளார்கள். இவ்வாறு தங்கள் கட்சிக்காரர்களே தங்கள் கண்ணைக் குத்தியதால் ஆத்திரம் கொண்டு அவசரப்பட்டு, சர்வ வல்லமை பொருந்திய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷகூட "எங்களுடைய பட்ஜெட்டை எதிர்ப்பவர்களை பதவியில் இருந்து தூக்கி விடுவேன்" என்று அதிகாரத் தொனியோடு எச்சரிக்கவில்லை.

ஆனால் நாட்டில் ஜனநாயகம் நிலவவில்லை, மக்கள் நலன் பேணப்படவில்லை என்று கூறிக் கொள்ளும் கூட்டமைப்பு உட்கட்சி ஜனநாயகத்தை மறுதலித்து தனது உறுப்பினர்கள் கண்டிப்பாக கூட்டமைப்பின் வசமுள்ள உள்ளூராட்சி சபை பட்ஜெட்டை எதிர்க்கக் கூடாது என்று கட்டளையிடுவது பொருத்தமற்றது.

ஆயிரம் பூக்கள் மலர்வதும் நூறாயிரம் கருத்துக்கள் எழுவதும் ஜனநாயகத்துக்கு பலமூட்டக்கூடியவை. எங்களுக்குப் பிடிக்காத பூவையும், பிடிக்காத கருத்துக்களையும் சகித்துச் செல்வதே ஜனநாயகம். அதை விடுத்து நாங்கள் சொல்வது போலவே பூக்கள் மலரவேண்டும் என்று நினைப்பதோ எங்கள் குரலைப்போலவே மற்றவர்களின் குரலும் இருக்கவேண்டும் என எதிர்பார்ப்பதோ உலகியலுக்கு மாறானதாகும்.

வரவு - செலவுத் திட்டத்தை பெரும்பான்மையான உறுப்பினர்கள் எதிர்க்கிறார்கள் என்றால் அதற்கான மூலகாரணம் என்ன என்பதை கண்டுபிடிக்க வேண்டும். அதைவிடுத்து உறுப்பினர்கள் மீது பாய்வது ஆரோக்கியமான அரசியல் ஆகாது. பிரச்சினைக்கான மூலகாரணத்தைத் தீர்த்துவிட்டால் எல்லாமே சரியாகிவிடும். செருப்புக்கு அளவாகக் காலை வெட்டும் அரசியலை விடுத்து காலுக்கு அளவாக செருப்பைக் கண்டறியும் முறையிலேயே கூட்டமைப்பு பயணிக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு ஆகும்.

# குழியில் இருந்து தப்பித்தல்

ஹரீஸ்

தெரிவுக்குழு பற்றிய வாதப்பிரதிவாதங்கள் அரச தரப்புக்குள்ளேயே எழத் தொடங்கிவிட்டன. அதனால் நாடாளுமன்றத் தெரிவுக்குழு சூடு பிடிக்கும் விவகாரமாக மாறி வருகின்றது. இலங்கை இனப்பிரச்சினையை பற்றி ஆராய்ந்து தீர்வொன்றை எட்டுவதற்காக உருவாக்கிறோம் என்ற பெயரில் காலத்தை இழுத்தடிக்க ராஜதந்திர அரசியல் சதி வலைக்குள் இருந்து கூட்டமைப்பு புத்திசாலித்தனமாக தப்பித்திருக்கின்றது என்றே அரசியல் விமர்சகர்களால் தொடர்ச்சியாகத் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.



இலங்கை சுதந்திரமடைந்த காலப்பகுதியிலிருந்தே இனப்பிரச்சினை என்பது இலங்கைத்தீவில் துளிர்விட்டு விட்டது. பிரித்தானியர்கள் பெரும்பான்மையினரிடம் ஆட்சியை ஒப்படைத்த மறுகணமே அடக்குமுறையும் அதிகாரத் திமிர்த்தனங்களும் சிங்கள ஆட்சியாளர்களிடம் ஊற்றெடுக்கத் தொடங்கிவிட்டன. பின்னர், காலத்துக்குக் காலம் ஆட்சிக்கு வந்த பேரினவாதிகள் எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போன்ற செயற்றிட்டங்களை முழு மூச்சாக முன்னெடுத்தனர். இத்தகைய இனவாதப் போக்கே தமிழ் இளைஞர்களின் கைகளில் ஆயுதங்களைத் திணிக்கும் ஒரு சூழ்நிலையைத் தவிர்க்க முடியாமல் ஏற்படுத்தியிருந்தது. தனிச் சிங்கள சட்டம் தொடங்கி பல்கலைக்கழகத் தரப்படுத்தல் வரை ஆட்சிக்கு வந்த சிங்கள மேலதிகார திமிர்த்தன ஆட்சியாளர்களின் செயற்பாடுகளும் நடவடிக்கைகளும் இலங்கைத்தீவின் அமைதிக்கு ஆப்பு வைத்தன என்பது கடந்தகால அரசியல் வரலாற்றை மேலோட்டம் கிடைக்கும் போதே வெளிப்படும் உண்மை.

இந்த நிலையில் தமிழர்கள் தங்கள் உரிமையை வென்றெடுப்பதற்காக மேற்கொண்ட அஹிம்சைப் போராட்டத்தின் போதும், ஆயுதப் போராட்டத்தின் போதும் பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைகள் சிங்கள அரசால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டன. இந்தப் பேச்சுவார்த்தைகள் இலங்கை இனப்பிரச்சினையின் உண்மையான கோணத்தை நோக்கி நகராமல் வெறும் சந்திப்புக்களாகவே - அரசின் கால இழுத்தடிப்பு நாடகங்களாகவே - அரங்கேறின. திம்பு தொடங்கி ஒஸ்லோ வரை நீண்ட பேச்சுவார்த்தை மேசைகளில் இரு தரப்புகளும் சந்தித்திருக்கின்றன. ஆனால் அதில் ஒன்று கூட தமிழர்களுக்கென்று எந்த விடிவையாவது பெற்றுத் தந்ததா? என்பதை ஆராய்ந்தால் அதற்கு எதிர்மறையான பதிலே கிடைக்கும்.

இந்தப்பேச்சுக்களின் போதெல்லாம் பேரினவாதிகள் தமிழர்களை அடக்கியாண்டு இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழ நிர்ப்பந்தித்தார்களே தவிர வேறு எந்த உருப்படியான செயல்களிலும் ஈடுபட்டதாக வரலாற்றுப் பதிவுகளில் கிடையாது. எப்போதும் தமிழர்களை அழிப்பதை மட்டுமே மனதிற்கொண்டு கண்ணை மூடியபடி அவற்றை செயற்படுத்தும் அதிகார இயந்திரத்துக்கு திடீரெனத் தமிழர்கள் மீது பாசம் பொங்கி வழிந்து, பேச்சுவார்த்தை என்ற ஒன்றை நடத்தவேண்டும் என்ற ஞானோதயம் எப்படி வருகின்றது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதற்குப் பின்னால் தான் பேரினத்தின் மகத்தான சாணக்கியம் ஒளிந்துள்ளது.

எப்போதெல்லாம் தமிழர்களின் கைகள் ஓங்கத்தொடங்குகின்றனவோ அப்போதெல்லாம் இந்தப்பேச்சுவார்த்தை என்ற மந்திரத்தை சிங்கள் அரசுகள் உச்சாடனம் செய்யத்தொடங்கிவிடும்.

தமிழர்களின் குரல் வளையை நசுக்கும் நோக்குடன் ஜயசிக்குறு என்ற மாபெரும் சமர் ஒன்றை வன்னியில் இராணுவம் தொடங்கியது. ஆரம்பத்தில் புலிகள் இழப்புகள் ஏற்பட பின்னோக்கி நகரத்தொடங்கினர். இதனால் உற்சாகமடைந்த சிங்களப்படை வன்னிக்குள் அகலக்கால் பதித்தது. இன்னும் சிலநாள்களில் வன்னி முற்றுமுழுதாக தம் வசம் வந்துவிடும் என்ற கனவில் சிங்களம் மிதந்துகொண்டிருந்த தருணத்தில் தான் புலிகள் ஓயாத அலைகள் நடவடிக்கையை முன்னெடுத்தார்கள். வந்த இராணுவம் தப்பினோம் பிழைத்தோம் என்று இழப்புகளோடு ஓடியது. அத்தோடு விடவில்லை புலிகள்

கட்டுநாயக்க விமானத்தளத்தில் கரும்புலிகள் அணியொன்று உட்புகுந்து அங்கிருந்த விமானங்களை வேட்டையாடியது. யாழ்ப்பாணத்துக்கும் வன்னிக்குமான கழுத்துப்பகுதியை இறுக்கி அழுத்திக் கொண்டிருந்த ஆனையிறவுப் பெருந்தளத்தையும் தகர்த்துக் கொண்டு, யாழ்ப்பாணத்தின் முகப்பு வரை புலிகள் முன்னேறினர்.


இவ்வாறு இராணுவச் சமநிலையில் புலிகளின் கை ஓங்கிய காலத்தில் தான் இனப்பிரச்சினையைப் பேசித்தீர்க்க வேண்டும் என்ற நினைப்பு ஆட்சியாளர்களுக்கு வந்தது. இப்படி பேச்சு மேசைக்கு புலிகளை அல்லது தமிழர் தரப்பைக் கொண்டு வந்து காலத்தைக் கடத்தி தன்னைப் பலப்படுத்திக் கொண்ட பின்னர்- தனக்குச் சாதகமான சூழலை தோற்றுவித்து விட்டு- எப்படியாவது பேச்சை குழப்பிவிடும் அரசு. சில சந்தர்ப்பங்களில் வேண்டுமென்றே தமிழர் தரப்புக்குச் சினமூட்டி அவர்களாகவே பேச்சிலிருந்து விலகிச்செல்லக் கூடியநிலையையும் அது கெட்டித்தனமாக உருவாக்கிவிடும். இவ்வாறு குயுக்தி கொண்டதாக இந்தப்பேச்சுகள் இருந்ததால் தான் அவை ஒன்றுக்கும் உதவாத செல்லாக்காசுகளாகிப் போயின.

பண்டாரநாயக்க, டட்லி சேனநாயக்க என்று இழுபட்ட இனப்பிரச்சினையை ஜே.ஆர் மிக மோசமான நிலைக்கு இட்டுச் சென்றார். இந்திய இராணுவத்தை களமிறக்கி, தமிழர்களும் இந்தியாவும் மோதிக் கொள்வதை வேடிக்கை பார்த்தார். அவருக்குப் பின்னர் வந்த பிரமேதாஸ இந்திய இராணுவத்தை வெளியேற்ற புலிகளுடன் கைகோர்த்தார். பின்னர் அவரும் மல்லுக்கட்டிக் கொண்டு சண்டைக்கு வந்தார். அதன் பின்னர் துப்பாக்கி வேட்டுக்கு கணவரைப் பறிகொடுத்த சந்திரிக்கா சமாதானத்தேவதையாக ஆட்சி பீடமேறினார். அவரின் ஆட்சிக் காலத்திலும் இலங்கை இனப்பிரச்சினையை ஆராய கொண்டு வரப்பட்ட வட்ட மேசை மாநாடு தமிழர்களை திசை திருப்பி, கொஞ்சக்கால அவகாசத்தில் போரரசியாக மாறி, இனவாத வாளைக் கையில் ஏந்தி இரத்த ஆற்றை தமிழர்பகுதிகளில் ஓட வைத்தார்.

சந்திரிகாவின் விலகலுக்குப் பின்னர் வந்தவர்தான் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ. பேச்சுகளை நடத்திக் கொண்டே மாவிலாற்றை சாட்டாக வைத்து அங்கு போரைத் தொடக்கி முள்ளிவாய்க்காலில் மாபெரும் மனிதப்பேரவலத்தோடு அதனை இனிதே முடித்து வைத்தார்.

சர்வதேசத்தை ஏமாற்றவென அவர் கொண்டு வந்த அனைத்துக் கட்சிக்குழு உருப்படியாக எதையும் சாதிக்கவில்லை. காலத்தை விழுங்கியதும் வெட்டித்தன பேச்சுக்களை நடத்தியதும்தான் பேராசிரியரும் அமைச்சருமான திஸ்ஸ விதாரண தலைமையிலான இந்தகுழுவினர் மேற்கொண்ட செயற்பாடுகள். ஆரம்பத்தில் இந்த கபட வலைக்குள் கூட்டமைப்பு விழுந்தது.ஆயினும் பின்னர் சுதாகரித்துக் கொண்டு மேலெழுந்தது. ஏராளமான அமர்வுகளை நடத்திவிட்டு இலங்கையில் இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லவே இல்லை என அறிக்கையிட்ட பெருமை அனைத்துக் கட்சிக் குழுவையே சாரும். இந்தக்குழுக்களும் கூட்டங்களும் ஏன் நடத்தப்பட்டது என்ற கேள்விக்கான பதிலாக காலத்தை இழுத்தடிக்கவே என்பதைத் தவிர வேறெதுவும் இருக்க முடியாது. அதன் பின் சர்வதேசத்தின் கண்டனக்குரலைச் சமாளிக்க அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்காக கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைத்தார் மஹிந்த. ஏதோ கதை கேட்க வந்தவர்களைப் போல் நல்லிணக்க ஆணைக்குழு உறுப்பினர்கள் நாடியில் கைவைத்து மேடைகளில் உட்கார்ந்திருக்க, அவர்களுக்கு முன்னால் மக்கள் கண்ணீர் சுமந்த கதைகளைக் கொட்டினர். சில சமயங்களில் இந்தக் கதைகளை காதில் வாங்கிக் கொள்ளாமல் ஆணைக்குழு உறுப்பினர்கள் எல்லோருக்கும் முன்னால் தூங்கி எழுந்த சம்பவங்களும் உண்டு. இவ்வாறு அக்கறையோடு செயற்பட்ட நல்லிணக்க ஆணைக் குழுவின் உருப்படியற்ற சில பரிந்துரைகளை, கடந்த ஜெனிவா அமர்வின் போது சமர்ப்பித்து தன் மீதான சர்வதேச அழுத்தங்களைக் தற்காலிகமாகத் தடுத்தது அரசு. ஆனாலும் 2014 மார்ச் மாதத்துக்குள் அந்தப்பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாவிட்டால், சர்வதேச விசாரணை நடத்தப்படும் என்று அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் மிரட்டியதால் இன்னொரு குழுவை அமைக்க வேண்டிய கட்டாயம் அரசுக்கு.

இந்த நிலையில்தான் இந்த முறை ஜெனிவா அமர்வை ஏமாற்ற நாடாளுமன்றத் தெரிவுக்குழு, உண்மை ஆணைக்குழு என்பவற்றை அமைக்க அரசு முயன்று வருகிறது. இதில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கான பணிகளை அரசு ஏற்கனவே தொடங்கிவிட்டது. இந்தத் தெரிவுக்குழுவுக்குள் வரும்படி கூட்டமைப்பை மிரட்டியும் கெஞ்சியும் பார்த்தது அரசு. ஆனால் ஒரு போதும் தெரிவுக்குழுவுக்குள் வரமாட்டோம் என்ற மறுப்பை தெரிவித்து அதிகாரத்தின் முகத்தில் ஓங்கி செருப்பால் அடித்திருக்கிறது கூட்டமைப்பு. இந்த முடிவே அனைத்துத் தமிழ்த் தேசிய வாதிகளிடம் மகிழ்ச்சியையும் நிம்மதியையும் தந்திருக்கின்றது. சம்பந்தன் -ஜனாதிபதி சந்திப்பு ஜனாதிபதியின் வேண்டுகோளை எடுத்தபடியாக நிராகரிக்க முடியாது என கூட்டமைப்பின் வட்டாரங்கள் தெரிவிப்பு என்பன போன்ற செய்திகளும் கருத்துக்களும் கூட்டமைப்பும் தெரிவுக்குழுவுக்குள் வீழ்ந்து விடுமா என்ற அச்சத்தை தவிர்க்க முடியாமல் ஏற்படுத்தியிருந்தது. ஆனால் வவுனியாக் கூட்டத்தின் பின் கூட்டமைப்பு இது விடயத்தில் வெளியிட்ட பகிரங்க அறிவிப்பு தமிழ் மக்களிடையே கூட்டமைப்பு மீதான அபிமானத்தை அதிகமாக்கியிருக்கிறது. இது தொடர்பான பாராட்டுக்கள் கூட்டமைப்புக்கு வந்து குவிந்த வண்ணமே இருக்கின்றன. ஜெனிவாவை இலக்குவைத்து மஹிந்த அரசு வெட்டிய குழிக்குள் கண்ணை மூடிக்கொண்டு விழாமல் கூட்டமைப்பு தப்பித்திருக்கிறது என



தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்.

ஆனால் இந்த நிராகரிப்பைக் கண்டு அரசு ஓய்ந்துவிடப்போவதில்லை. அது சர்வதேசத்தின் கவனத்தை திசைதிருப்ப எத்தனை ஆணைக்குழுக்களை நியமிக்க முடியுமோ, எத்தனை தெரிவுக்குழுக்களை அமைக்க முடியுமோ அவற்றையெல்லாம் அமைக்க படாதபாடுபடும். சில சமயங்களில் தன்னுடைய பிரித்தாளும் தந்திரத்தின் மூலம் கூட்டமைப்பை பிளவுபடுத்தி அதில் தன்சார்பாக சிலரை வளைத்து, தெரிவுக்குழுவுக்குள் உள்ளிழுத்து, கூட்டமைப்பு தெரிவுக்குழுவுக்குள் வந்துவிட்டது என்ற மாயையை உருவாக்கவும் முனையலாம். எனவே தமிழர்களும், கூட்டமைப்பும் ஒற்றுமையோடும் கவனத்தோடும் செயற்பட வேண்டிய கால மிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்

## ஆழம் தேடும் காதல்



அழகிய அவளின்
அங்கம் பார்த்து
அன்பை உள்ளத்தில்
பெருக்கிக் கொண்டேன்
இன்பம் தரும் சுதந்திர
முகத்தாள் எண்ணம்
போல உரைத்துக்
கொண்டாள்

கற்பனை அன்பை
தந்தவள் என்னுள்
கலைவான அழகை
கலையாக காண்பித்தாள்

தேடல் கொள்ளும்
இன்ப உள்ளத்தில்
ஓடறாகி ஒளிந்து கொண்டாள்
மெல்லினப் பார்வை
என்னோடு மோதி
தென்றலாய் கொஞ்சி
பேசி பார்த்தாள்

உலக அழகியல்
விம்பமகத்தினை
ஊர்வசியாய் உலவியே
மெய்யை மெய்ப்பித்தாள்

இடையுலகில் இயற்கை இன்
பத்தை படைப்புலகில்
பயணிக்க வைத்தாள்

மோகம் கொள்ளும் தாபம்
ககண்டு
வெண்மேகம் துளியாய்
மழையைப் பொழியும்

கன்னி மீது காணும் யோகம்
காதலாய் கவிதை எழுதி
கொள்ளும்

இரசிக்கும் மனதை
ஆழ்ந்து சிந்தித்து
சிந்தனை பூக்கள்
சிறகடித்து பறக்கும்

ஓசை தேடும்
மனதின் வெளிச்சமும்
தங்க தேடல்களை
தனதாக்கிக் கொள்ளும்

வாழ்ந்து பார்த்து
புலரும் காதல்
மனதால் மயங்கி
ஆழம் தேடும்

வே.வே.அகிலேஸ்வரன்,
மருதங்கேணியூர்

## உறவு

வாகீசன்,
இணுவில்.

உறவுகளகலாம் உனக்குப் பலர்
ஆனால் உனக்கென்று உறவு
நீயே

சொந்தமென்று சேர்வதெல்லாம்
செந்தமுமல்ல -இல்லை என்று
சொல்வதெல்லாம்
உண்மையுமல்ல

உறவுகள் தரும் சிறகுகள்
வேண்டாம்
உன் சிறகுகள் போதும்
உறவென்பது ஒரு கானல் நீர்

உதவாது உன் தாகத்திற்கு
தேவைக்கு நீ உரிமைக்குயாரோ
உன்தேவை உனக்கே
செந்தமென்று சேரும்
பணமிருந்தால்-அது
இல்லையென்றால் வைது விட்டு
செல்லும்

பணமிருந்தால் கூடு விட்டு
சென்றாலும் சொந்தமே
இல்லையேல் உயிரிருந்தும்
வாராதேயுறவு

சிலுவைகள் நீ சுமக்கலாம்-
ஆனால்
நீ ஓர் யேசுவாக மாட்டாய்.

## எனது பொழுதுகள்

சுகமற்ற சூழலில்
தொடர்கிறது
மீதமுள்ள வாழ்வும்
நிம்மதியற்றதாய்...
உறவு என்று உரிமை
கொள்ளவும்
பாசம் கொண்டு
பேசிக் கொள்ளவும்
அவஸ்தை சொல்லி
ஆறுதல் கொள்ளவும்
அருகில் துணை
ஆருமில்லை

நன்மை செய்ய
நினைப்பவரும்
நாம் என்று நடப்பவரும்
இங்கில்லை
தன்னலனே பெரிதென்று
சுயநலத்தின் கூட்டுக்குள்
சுருங்கி வாழ்கிறது
சுயங்கள்
இங்கே

சிரிப்பைப் பார்த்து
சிநேகம் கொள்ள
முகமூடி கழட்டி
முறைக்கிறது முகங்கள்...
இருக்கும் போது
ஒட்டிக் கொள்ளவும்
பழகிப் போனவராய்
உடன்பாடு இல்லாத
முரண்பாடுகளால்
மூச்சுத்திணறி
விம்முகிறதென் நாளாந்தம்

கு. தவசீலன்.
பளை.

## பற்றுக்காய்...

நெற்றிப் பூவாய்
நித்திலமும் உனைச் சுமந்த
என் மீது
உனக்குப் பற்றில்லாத போது -என்
பற்றுக்கள் எல்லாமே
பற்றிப் போயின தீயில்...
இதனால்
வெற்றுத் தாளாய்
இங்கே ஒரு வீதியில்
ஏங்கிக் கிடக்கிறேன்...
எப்போதாவது
உன் கையெழுத்தல்ல...
காலடியாவது
பதியட்டுமென்று....

திரு. த. பருத்திதாசன்

## இனியும் வாழ்வதா....!

இதயம் நேசிப்பது-என்
இறப்பை மட்டும் தான்
பிறப்புக்கு அர்த்தமில்லாத-
என்
இவ் உலக வாழ்வில்
நிதமும் வலிகளைச் சுமந்து
விழிகள் கசிவதை விட
வலி தெரியா
இறப்பிருந்தால்
வழி கொடுக்கின்றேன்
என் விழிகள்

வேல்மகள்,
புளியம்பொக்கணை.


## உலகின் நியதி

வேரோடு சாய்ந்ததென
மார் தட்டி அழுதாலும்
மாண்டவர்கள் எப்போதும்
மீண்டிட்ட போவதில்லை

மானிடமே மரணம் என்பது
மறுக்க முடியாத உண்மை
நியதிகளை யாராலும்
நிர்ப்பந்தித்தும் மாற்றமுடியாது

இன்பமும் துன்பமும்
இணைந்ததே வாழ்க்கையென்று
உணர்ந்து நடைபோடுங்கள்
உங்களாலும் வாழ முடியும்

வேல்மகள்,
புளியம்பொக்கணை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிழக்கில் குடும்பி மலையை ஒட்டியிருந்த காட்டுப்பகுதியில் புலிகள் பயிற்சி பெற்று வருவதாக அரச சார் ஊடகங்களில் செய்திகள் கசிந்தன. இந்தச் செய்திகளை அரசாங்கம் மறுக்கவில்லை. அதே

# எ புலியும்

நேரம் அப்படிப் பயிற்சி நடப்பதாகவும் ஒத்துக்கொள்ளவில்லை. இந்த அசாத்திய மௌனம் பலரிடையே சந்தேகத்தை ஏற்படுத்தியது. புலிகளின் கோட்டையாக விளங்கிய வன்னிக்காட்டை ஊடறுத்து அவர்களின் கதைக்கு முள்ளிவாய்க்காலில் முற்றுப்புள்ளி வைக்க முடிந்த அரசால் ஏன் சாதாரணமான குடும்பிமலைக்காட்டில் உள்ள புலிகளின் புதிய பயிற்சி முகாமை துவம்சம் பண்ண முடியவில்லை? என்ற கேள்வி பெரிதாக எழுந்தது.

வலிந்து தான் உருவாக்கிய புலிகளின் புதிய பயிற்சி முகாம் என்ற கதையை நம்பச் செய்ய இந்தியாவில் இருந்து மணிகட்டிய ஒரு மாட்டை அரசு இறக்குமதி செய்தது. ஏற்கனவே இலங்கை சார்பான கொள்கை கொண்ட அந்த ஊடகவியலாளரும் மட்டக்களப்புக்குச் சென்று அங்கு குடும்பி மலைக்காட்டில் புலிகளின் பயிற்சி முகாம் என்று சொல்லப்படும் இடத்தில் இருந்தவர்களோடு உரையாடிவிட்டு அடுத்த வாரமே பரபரப்பான கட்டுரைகளை புகைப்படங்களோடு இந்தியாவுக்குப் போய் எழுதித்தள்ளினார். அவற்றை ஆதாரமாகக் கொண்டு இலங்கையில் உள்ள அரச ஊடகங்களும் இந்தச் செய்தியை முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்தன. ஆனால் அதன் பின்னர் நாலா திசைகளில் இருந்தும் எழுந்த கேள்விகளை குறித்த அரச சார் ஊடகங்களாலும் சமாளிக்க முடியவில்லை.

*இலங்கை ஊடகவியலாளர்களோ அல்லது இராணுவத்தினரோ செல்ல முடியாத புலிகளின் பயிற்சி முகாமுக்கு ஒரு இந்திய ஊடகவியலாளர் எப்படிச் செல்ல முடிந்தது?

* ஒரு ஊடகத்துக்கு நேர்காணல் கொடுக்கும் அளவுக்கு சுதந்திரமாக புலிகளின் அந்த அணியை அரசு ஏன் நடமாடவிட்டுள்ளது?

*சுற்றிவர உள்ள பகுதிகள் எல்லாம் படையினரின் வசமாக இருக்க இந்தக் காட்டில் உள்ள புலிகளுக்கான உணவு ஆயுத விநியோகங்கள் எப்படி இடம்பெறுகின்றன?

*இந்திய ஊடகரால் சுலபமாக செல்ல முடிந்த இடத்துக்கு ஏன் இராணுவம் செல்லவில்லை?

* இங்கிருந்து இந்தியாவரை புலிகளின் பயிற்சி பற்றிய தகவல்கள் சென்றுள்ளன. அதுவரை இலங்கையின் புலனாய்வுத்துறை என்ன செய்துகொண்டிருந்தது?

*ஒரு துப்பாக்கி வேட்டைக்கூட



தீர்க்காத ஆயுத அமைப்பொன்று துணிச்சலாக தன் முகத்தை வெளிப்படுத்துமா?

*புதிய ஆயுதக்குழுவை நேர்காணச் சென்ற ஊடகவியலாளருக்கு அரசு ஏன் பாதுகாப்புக் கொடுத்தது?

இதுபோன்ற அடுக்கடுக்கான கேள்விகளால் நிலைகுலைந்து போனது அரசு. அதனால் தானே உருவாக்கிய புலிகளின் மீள் உருவாக்கம் பற்றிய கதைகளை தானே மறக்கடிக்கச் செய்தது.

அதன் பின்னர் நிகழ்ந்த வடமாகாண சபைத் தேர்தல் புலிகளின் மீள் உருவாக்க அவசியத்தை அரசுக்கு உணர்த்தியது. முதன்முறையாக கடந்த வருடம் வடக்கு மாகாணசபைத் தேர்தல் நடைபெற்ற போது, தமிழ்த் தேசியக் கொள்கையோடு களமிறங்கிய கூட்டமைப்பு விடுதலை பற்றிய கருத்துக்களை மக்களிடம் எடுத்துச் சென்றது. கூட்டமைப்பின் பொதுக்கூட்டங்கள் நிகழ்ந்த இடங்களில் பட்டொளி வீசிப் பறந்த சிவப்பு மஞ்சள் கொடிகள், ஒலிபெருக்கியில் பரவிய புரட்சிப் பாடல்களும் புலிகளின் காலத்தை மக்களுக்கு நினைவூட்டின அத்தோடு மக்களின் விடுதலை பற்றி புலிகள் என்ன கனவைக் கொண்டிருந்தார்களோ அவற்றை எல்லாம் கூட்டமைப்பு வேட்பாளர்களும் தங்களுடைய இலட்சியங்களாக மேடைகளில் பிரகடனப் படுத்திக் கொண்டார்கள்.

கிட்டத்தட்ட புலிகளின் வெற்றிடங்களை இந்த அரசியல் புலிகள்(?) நிரப்புவது போன்ற பிரமையை மக்களிடத்தே ஏற்படுத்தினார்கள். தேர்தலும் நடந்தது. வரலாறு காணாத வெற்றியை கூட்டமைப்பு தனதாக்கிக் கொண்டது. பெருமெடுப்பிலான பரப்புரை, பில்லியன் கணக்கிலான அபிவிருத்தித் திட்டங்கள், தமிழ்க் கட்சி ஒன்றுடனான கூட்டு என்ற ஏகப்பட்ட வியூகங்கள் அமைத்தும் படுதோல்வி அடைந்த அரசு அதற்கான காரணங்களை உடனடியாகவே ஆராயத்தொடங்கியது.

ஒரு காலத்தில் ஆயுதக்குழுவாகவும் பின்னர் அரசியல் போர்வைக்குள் ஒளிந்துகொண்ட ஒட்டுக்குழு மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்துவிட்டதை அரசு துல்லியமாக எடைபோட்டது. இனி அந்தக் குழு ஆயுதம் எடுத்து பழைய படி மக்களை வெருட்டினாலும் கூட அவர்கள் அசர மாட்டார்கள் என்பது அதற்குப் புரிந்து போயிற்று. ஆகவே மாற்று வழிகள் ஊடாக தன்னுடைய செல்வாக்கை நிலைநிறுத்துதல் அல்லது கூட்டமைப்பின் வாக்கு வங்கியை உடைத்தல் என்ற திட்டத்தோடு களமிறங்கியது.

இந்த நிலையில் போர்க் குற்ற விசாரணைகள் குறித்து சர்வதேசமும் கிடுக்குப் பிடி போட்டது. இதனால் இனிவரும் காலங்களினாலான அரசியல் பழிவாங்கல் கொலைகளைச் செய்துவிட்டு தனது கரம் சுத்தமானது என்று அரசு கூறிக்கொள்ள முடியாது. அத்தோடு தமிழர் பகுதிகளில் உள்ள படைகளையும் உடனடியாக விலக்கச் சொல்லி உலகமே ஒன்று திரண்டு உரக்கச் சொல்லி வருகிறது. ஆகவே அடுத்த கட்டமாக படைகளையும் அகற்ற வேண்டிய நிலை ஏற்படும். அப்படியான ஒரு சூழல் அமைந்தால் வடக்கும் கிழக்கும் முற்றுமுழுதாக தனது கையை விட்டு போய்விடும் என்று ஆட்சியாளர்கள் அஞ்சுகிறார்கள். வழக்கம் போல புலிகள் இருந்தால் அவர்களை ஒடுக்குவதற்கு படைப்பிரசன்னம் அவசியம் என்று கூறிவிட்டுப் பேசாமல் இருந்திருக்கலாம்.

இப்படி பல வழிகளில் புலிகளின் மீள் உருவாக்கத்தால் ஏற்படப்போகும் நன்மைகளை கூட்டிக்கழித்துப் பார்த்த பின்னர் இரண்டாவது தடவையாக புலிகளுக்கு உயிர் கொடுக்க அரசு தயாரானது. ஆனால் இந்த முறை மிகக் கவனமாக அந்தக் காரியத்தில் இறங்கியது. ஏற்கனவே இறுதிப்போரில் பிடிபட்டு பின்னர் தங்களின் கையாள் ஆக மாறிவிட்ட பதுமன் தலைமையில் இந்த உருவாக்கம் நிகழ்ந்தது. பதுமனை அரசு தெரிவு செய்ததற்கு நிறையக் காரணங்கள் உண்டு?

கருணாவைப் போலவோ, பிள்ளையானைப் போலவோ, கே.பியைப் போலவோ பதுமனுக்கு மக்களிடம் கெட்ட பெயர் இல்லை. விடுதலைப் போராட்டத்துக்கு எதிரானவர்கள் பட்டியலில் அவர் விடுபட்டிருந்தார். அப்படிப்பட்ட ஒருவரை வைத்தே புலிகள் போன்ற ஒரு மாயையை உருவாக்க முடியும். எனவேதான் அவசர அவசரமாக ஒரு தளபதியாக இருந்த பதுமன் எந்தக் குற்றமும் செய்யாத நிரபராதி என்று தீர்ப்பளித்து நீதிமன்றத்தின் மூலம் விடுவிக்கப்பட்டார்.

பலவந்தமாகப் போராட்டத்தில் இணைக்கப்பட்டவர்களும், எல்லைப்படையில் இருந்தவர்களும் கூட இன்னமும் விடுவிக்கப்படாமல் தடுப்பிலேயே இருக்க பதுமன் மாத்திரம் புனிதராகப் பிரகடனப் படுத்தப்பட்டார். சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை. பதுமன் தலைமையில் ஒரு ஆயுதக்குழுவை உருவாக்கி, அதுவே புலிகள் மறுபிறப்பு என்று நம்ப வைப்பதற்கான சகல முயற்சிகளும் முடுக்கிவிடப்பட்டன.

இந்தப் புதிய ஆயுதக்குழுவுக்கு எப்படி ஆட்சேர்ப்பு நிகழ்ந்தது? பயிற்சிகள் எங்கே வழங்கப்பட்டன? இந்தக் குழுவில் தாக்குதல் இலக்கு யார்? **(அடுத்த வாரம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோபல் பரிசு வென்ற இலக்கிய மூதாட்டி

கடந்த சில ஆண்டுகளாக நோபல் பரிசு வாங்கக் கூடியவர்கள் எனும் யூகப் பட்டியலில் இடம்பெற்றுவந்த அலைஸ் மன்றோ, தற்போதுநோபல் பரிசு வாங்கியவர்களின் பட்டியலுக்கு இடம் மாறி விட்டார். இங்கிலாந்தின் சிறப்பு மிக்க கவர்னர்' விருதும், கனடாவின் உயரிய இலக்கிய விருதான 'புக்கர்' விருது பெற்ற உலகின் சிறந்த பெண் எழுத்தாளர்.

2013-ஆம் ஆண்டின் இலக்கியத்துக்கான நோபல் பரிசாளர் என்பதையும் தாண்டி, கட்டை விரலை உயர்த்தி வெற்றிக்குறி காட்ட அலைஸ் மன்றோவுக்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. நோபல் பரிசு பெறும் கனடா தேசத்து முதல் பெண் எழுத்தாளர் என்பது ஒன்று. அடுத்தது சிறுகதைப் பிரிவில் நோபல் பரிசு வென்ற முதல் எழுத்தாளர்.

ஜூலை 10, 1931-இல் கனடாவின் ஆன்டோரியா மாகாணம் வின்காமில் பிறந்தவர் அலைஸ். தந்தை ராபர்ட் எரிக், நரி மற்றும் கீரிப்பண்ணை உரிமையாளர். தாய் அன்னி கிளார்க் பள்ளி ஆசிரியை.

வெஸ்டர்ன் ஆன்டோரியே பல்கலைக் கழகத்தில் பத்திரிகையியல் படிக்க வந்த அலைஸ், படிப்பை முடிக்கும் முன்னே அங்கே அறிமுகமான ஜேம்ஸ் மன்றோவை திருமணம் செய்துகொண்டார்.

கணவருடன் வான்கோவருக்கு இடம் பெயர்ந்த அலைஸ், 1963-இல் பிரிட்டிஷ் கொலம்பிய பகுதியான விக்டோரியாவுக்கு மாறியபோது, கணவருடன் சேர்ந்து, மன்றோ புக்ஸ்' கடையைத் தொடங்கினார். அது இன்றளவும் இயங்கி வருகிறது. ஆனால் ஜேம்ஸ் - மன்றோ திருமண வாழ்வு 1972-இல் முற்றுப் புள்ளியைச் சந்தித்தது. எனினும், அலைஸ் விரைவிலேயே தனக்கு அறிமுகமான ஜெரால் - ஃப்ரெம்லுனை திருமணம் செய்துகொண்டார்.

தனது இளம்வயதிலேயே அலைஸ் சிறுகதைகள் எழுதத்தொடங்கிவிட்டார். அவரது சிறுகதைகள் 1950- களிலேயே பல்வேறு பத்திரிகைகளில் இடம்பெறத் தொடங்கின. அச்சில் வெளிவந்த அலைஸின் முதல் சிறுகதை நிழல்களின் பரிமாணங்கள்' (The Dimensions of Shadows).. அவரது முதல் சிறுகதைத் தொகுதியான ஆனந்த நிழல்களின் நடனம்' (Dance of Happy Shades) 1968 இல் வெளியாகி, கனடாவில் பரவலான கவனத்தைப் பெற்றது.

மன்றோவின் கதைமொழி நேர்த்தியானது. நாவல்கள் எழுதியுள்ளபோதும், சிறுகதைகளே இவருக்கு பெயர் பெற்றுத் தந்தன. விமர்சகர்கள் இவரை கனடாவின் செக்காவ்' என பாராட்டுகிறார்கள். மன்றோவின் பெரும்பாலான கதைகள் சிறுநகரப் பின்னணியில் அமைந்தவை.

சமூக அங்கீகாரத்துக்கான ஏக்கமும், அதனால் அமையும் விரும்பாத உறவுகளும், ஒழுக்க மீறல்களும், தலைமுறை இடைவெளியில் எழும் பிரச்சினைகளும் வாழ்க்கை லட்சியங்களின் மோதல்களும் இவரது பெரும்பாலான கதைகளின் மைய கருவாக அமைபவை.

### புகழ்பெற்ற படைப்புகள்

Who Do you Think you Are? The Moons of Jupiter, Runaway, The view from Castle Rock, Too much Happiness போன்ற இவரின் படைப்புகள் குறிப்பிடத்தக்கவை. Dear Life (2012) இவரது சமீபத்திய படைப்பாகும்.

இவரது கதையைத் தழுவி தொலைக் காட்சியில் நிறைய கதைப்படங்கள் வெளிவந்திருக்கின்றன. சாரா போலி இயக்கிய அவளிடமிருந்து தூரத்தில் (Away from her) திரைப்படம் மற்றும் 1984-இல் குறும் படத்துக்கான ஒஸ்கார் விருது வென்ற போய்ஸ் அண்ட் கேர்ள்ஸ் (Boys And Girls) குறும்படம் இவற்றின் மூலக்கதை அலைஸ் மன்றோவினுடையது ஆகும்.

மன்றோவின் சிறுகதைகள் நாவல்களுக்கான இலக்கிய அடர்த்தியைக் கொண்டவை என விமர்சனங் களால் பாராட்டப்படுகின்றன.

அலைஸின் படைப்புகள் இருபது மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. 2005இல் டைம்' பத்திரிகை பெரிதும் செல்வாக்கு வாய்ந்த 100 நபர்களின் பட்டியலைத் தயாரித்தது. அதில் அலைஸ் மன்றோவின் பெயரும் இடம் பெற்றிருந்தது. நோபல் பரிசை வென்ற பிறகு அலைஸின் புகழ் வெளிச்சம் இன்னும் நூறு வோட்ஸ் அதிகரித்திருக்கிறது. பாவம் அலைஸ், 82 வயதில் இன்னும் முப்பது நாற்பது நேர்காணல்களுக்காவது தன்னை ஆயத்தம் செய்து கொள்ள வேண்டியிருக்கும்!


ஹரே கிருஷ்ணா

**ISKCON ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்**
**சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகம்**

(ஸ்தாபக ஆச்சாரியார்: அருட்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா)

**ரூபா.3,000/-**

**ஒரு செங்கல்லுக்காக செலுத்தி**




இல. 188, புதுசெட்டித்தெரு, கொட்டாஞ்சேனையில் நிர்மாணித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலய திருப்பணிக்கு உங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

செங்கல்லின் முன்புறம் உங்கள் பெயரும், மறுபுறத்தில் ஹரே கிருஷ்ண நாமமும் பதிவு செய்யப்படும். இதனால் ஆலய கட்டடத்தில் உங்கள் பெயரும் இரண்டறக் கலந்து என்றென்றும் நிலைத்திருக்கும்.

**உங்களின் பெயரில் அர்ச்சனையும் செய்யப்படும்.**

அத்துடன் உங்களுக்கும் உங்கள் சந்ததிக்கும் பகவானின் பரிபூரண திருவருட் கடாட்ஷம் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

**வங்கி விபரங்கள்**

Hatton National Bank, Kotahena
A/C name: ISKCON
A/C No : 207010000891

Commercial bank, Kotahena
A/C Name: ISKCON Temple Fund
A/C No. : 1120017042

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:
ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்
171, புதுசெட்டித்தெரு, கொழும்பு-13.
தொலைபேசி: 2433325
பெக்ஸ்: 2471099
ஈ-மெயில்: iskcon@slt.lk
www.iskcon.lk





## இராசி பலன் 01.01.2014 - 07.01.2014




### அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

இந்தவாரம், உங்கள் ராசிக்கு செவ்வாய், சந்திரன் நற்பலன் தருகின்றனர். ஜனவரி 2,3,4ம் தேதிகளில், புதன் சிறப்பான பலன் வழங்குகிறார். எந்த செயலையும் பரிசீலித்து மேற்கொள்வதால் மட்டுமே, உரியபலன் கிடைக்கும். குடும்பத் தேவை நிறைவேற்றுவதில், தாமதம் இருக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர் மனதில் தைரியம் வளர ஆலோசனை, உதவி வழங்குவீர்கள். எதிரியால் உருவாகிற தொல்லை விலகும். இல்லறத்துணையின் கருத்துக்கு, உரிய மதிப்பு தருவது குடும்ப ஒற்றுமை வளர உதவும்.




### கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்

இந்த வாரம், உங்கள் ராசிக்கு குரு சனி, ராகு, புதன், சுக்கிரன் அளப்பரிய நற்பலன் வழங்குகின்றனர். எவரிடமும் உள்ளன்புடன் பழகுவீர்கள். திட்டமிட்ட பணிகளில், முழு அளவிலான நன்மை கிடைக்கும். ஆதாய பணவரவில், குடும்பத்தின் அத்தியாவசியத் தேவை பூர்த்தி செய்வீர்கள். சமூகத்தில் பெறுகிற கவுரவம் கூடும். வாகனத்தில் கூடுதல் பயன்பாட்டு வசதி பெற, மாற்றம் செய்வீர்கள். புத்திரர் படிப்பு, வேலை வாய்ப்பில் முன்னேற்றம் பெறுவர்.




### மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

இந்த வாரம், உங்கள் ராசிக்கு பூர்வ, புண்ணிய சுப விரயஸ்தான அதிபதி சுக்கிரனும் மற்றும் கேதுவும் நற்பலன் தருகின்றனர். கடந்த கால நிகழ்வுகளின் அனுபவத்தை, பாடமாக எண்ணி செயல்படுவீர்கள். சிரமம் குறைந்து, புதிய நல்வழி வாழ்வு வளம் பெற உருவாகும். உடன் பிறந்தவரின் உதவி ஓரளவு உண்டு. வாகனத்தில் பராமரிப்பு பணி செய்வதால், பயணம் எளிதாகும். புத்திரர் கேட்ட பொருள் வாங்கித் தர, பணவசதி துணை நிற்கும். ஒவ்வாத உணவு வகை உண்பது தவிர்த்து, உடல் நலம் பேணுவீர்கள்.




### புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

இந்த வாரம், உங்கள் ராசிக்கு செவ்வாய், சூரியன், புதன் நற்பலன் தருகின்றனர். ஆடம்பர செயல்களை தவிர்ப்பதால், நேரம், பணம் மிச்சமாகும். புதிய நிகழ்வுகளை அனுபவித்து, மனதில் எதிர்கால வாழ்வில் நம்பிக்கை பெறுவீர்கள். உடன் பிறந்தவர்களின் கூடுதல் அன்பு, பாசம் மனம் நெகிழ வைக்கும். வீடு, வாகனத்தில் தகுந்த பாதுகாப்பு பின்பற்ற வேண்டும். புத்திரர், உங்களின் சொல்கேட்டு, நடந்து பெருமை தேடித் தருவர். எதிரியால் வருகிற சிரமத்தை, சமயோசிதமாக சரி செய்வீர்கள். இல்லறத் துணை மனக்கிலேசத்துடன் பேசுகிற நிலை உண்டு.




### மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்

இந்த வாரம், உங்கள் ராசிக்கு மூன்றாம் இடத்தில் உள்ள சனி, ராகு, தினகதி சுழற்சி கிரகம் சந்திரன் மற்றும் குரு நற்பலன் வழங்குகின்றனர். நண்பரின் உதவி, எதிர்பார்த்த வகையில் கிடைக்கும். பேச்சு, செயலில் அதிக நிதானம் பின்பற்றுவது, சிரமம் வராமல் தவிர்க்க உதவும். புத்திரரின் அவசரகதியிலான பணிகளை சரி செய்வதில், உதவுவீர்கள். பூர்வ சொத்தில் கூடுதல் பணவரவு கிடைக்கும். உடல்நலம் ஆரோக்கியம் பெற மருத்துவ சிகிச்சை, சீரான ஓய்வு அவசியம். இல்லறத்துணை வழி சார்ந்த உறவினர்களின் மனக்கிலேசம் தவிர்க்கும் வகையில் பேசுவது நல்லது.




### உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்

இந்த வாரம், உங்கள் ராசிக்கு சுக்கிரன், புதன் நற்பலன் தருகின்றனர். மனம், செயலில் உருவாகிற தடுமாற்றம் சரி செய்வதால், பணி குறித்த காலத்தில் நிறைவேறும். உங்கள் சொல்லுக்கு வரவேற்பு தருபவர்களிடம் மட்டுமே பேசுவது நல்லது. வீடு, வாகனத்தில் பயன்பாட்டு வசதி, சீரான அளவில் கிடைக்கும். புத்திரர் நற்குண, நற்செயல்களால் வீட்டில் மகிழ்ச்சியை உருவாக்குவர். ஒவ்வாத உணவு வகை தவிர்ப்பதால், உடல்நல ஆரோக்கியம் சீராகும். இல்லறத்துணை, உங்களின் அருமை, பெருமை போற்றி மகிழ்வார். தொழிலில் வளர்ச்சி பெற, புதிய வாய்ப்பு உருவாகி உதவும்.




### சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

இந்த வாரம், உங்கள் ராசிக்கு சூரியன், சுக்கிரன், குருவின் நல்லருள் பலமாக உள்ளது. மனதில் புத்துணர்வும், செயல்களில் புதிய பரிமளிப்பும் பெறுவீர்கள். தாமதமான பணிகளை உத்வேகத்துடன் செயல்படுத்தி, முழு அளவில் நன்மை பெறுவீர்கள். சமூகத்தில் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். புத்திரரின் நியாயமான தேவை நிறைவேற உதவுவீர்கள். எதிரி இடம் மாறிப்போகிற நன்னிலை உண்டு. இல்லறத்துணையின் கூடுதல் அன்பு, பாசம் மனதில் நெகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரம் செழிக்க, சீர்திருத்த நடைமுறை மேற்கொள்வீர்கள்.




### விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை

இந்தவாரம், உங்கள் ராசிக்கு மூன்றில் சுக்கிரன், ஆறில் கேது, பதினொன்றில் செவ்வாய் அமர்வு பெற்று, நற்பலன் வழங்குகின்றனர். மற்ற கிரகங்கள் எதிர்மறையாக செயல்படுகின்றனர். உங்களை அவமானப்படுத்தும் வகையில், பேசுபவரிடம் விலகி, சுயகவுரவம் பாதுகாத்திடுவீர்கள். நிலுவைப்பணம் எளிய முயற்சியால் கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரரின் உடல்நலத்திற்கு, சிகிச்சை உதவும், இல்லறத்துணை உங்களின் பணிகள் சிறக்க, தேவையான ஆலோசனை சொல்வர். தொழில், வியாபாரத்தில் அரசின் சட்டதிட்டம் மதித்து செயல்பட வேண்டும். குடும்ப பெண்கள், சிக்கன பணச்செலவில் சராசரி வாழ்வை அமைத்துக் கொள்வர்.




### மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்

இந்த வாரம், உங்கள் ராசிக்கு சுக்கிரன், குரு, சனி, ராகு கூடுதல் அளவில் நற்பலன் வழங்குகின்றனர். சுயமுயற்சியால் பெறவேண்டிய நற்பலன்களை, முழுஅளவில் பெறுவீர்கள். அக்கம், பக்கத்தவருடன் இனிய வார்த்தை பேசி, அன்பை வளர்த்திடுவீர்கள். வீடு, வாகனத்தில் உரிய பயன்பாட்டு வசதி கிடைக்கும். சொத்து ஆவணம் பிறர் பொறுப்பில் தர வேண்டாம். புத்திரரின் சேர்க்கை சகவாசம் அறிந்து, நல்வழி நடத்துவீர்கள்.




### உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்

இந்த வாரம், உங்கள் ராசிக்கு சுக்கிரன், சந்திரன் மட்டுமே நற்பலன் தருகின்றனர். குடும்ப பெரியவர்களின் ஆலோசனைப்படி நடப்பதால், பணி இலகுவாக நிறைவேறி நற்பெயரை பெற்றுத் தரும். வழக்கத்திற்கு அதிகமான வகையில், குடும்பத்திற்கான பணச்செலவு அதிகரிக்கும். அறிமுகம் இல்லாதவருக்கு வீடு, வாகனத்தில் இடம் தர வேண்டாம். மகளின் ஜாதக யோக பலன், குடும்பத்தில் மங்கல நிகழ்வு உருவாக உதவும்.




### அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்

இந்த வாரம், உங்கள் ராசிக்கு கேது, குரு, சூரியன், புதன், சுக்கிரன் அளப்பரிய நற்பலன் வழங்குகின்றனர். மனதில் உத்வேகமும், செயல்களில் முன்னேற்றமும் உருவாகும். தொழிலில் பணவரவு அதிகம் பெறுவதற்கான, புதிய வாய்ப்பு ஏற்படும். இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள். தம்பி, தங்கைக்கான மங்கல நிகழ்ச்சி நடத்த அனுகூலம் வளரும். உறவினர் வருகை, வீட்டில் மகிழ்ச்சியை அதிகரிக்கும். புத்திரரின் நல்லறிவு செயல் திறனை பாராட்டுவீர்கள். இல்லறத்துணை விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.




### பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

இந்த வாரம், உங்கள் ராசிக்கு சூரியன், புதன், சுக்கிரன், நற்பலன் தரும் இட அமர்வில் உள்ளனர். கடந்த கால உழைப்புக்கு, உரிய அனுகூலம் தேடி வரும். உங்கள் சொல், செயலுக்கு நண்பரிடம் கூடுதல் வரவேற்பு கிடைக்கும். மனதில் இருந்த தாழ்வு மனப்பான்மை விலகும். சமூகப் பணியில் ஆர்வம் கொள்வீர்கள். வீட்டில் உறவினர்களின் வருகையால், மகிழ்ச்சி ஏற்படும். புத்திரர் ஞாபகத் திறன் வளர்ந்து, படிப்பில் முன்னேற்றம் காண்பர். எதிரியினால் தொந்தரவு அணுகாத சமூக வாழ்வு உருவாகும். இல்லறத்துணை கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டு

தொகுப்பு : வரு

## கலீஸின் ஆசை நிறைவேறுமா?




இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியுடன் டெஸ்ட் போட்டி களிலிருந்து தனது ஓய்வை அறிவித்திருக்கின்றார் தென்னா பிரிக்க கிரிக்கெட் அணியின் சகலதுறைவீரர் ஜாக்ஸ் கலீஸ். இவர், தனதுஓய்வு குறித்த முடிவை திடீரென அறிவித் திருந்தமை கிரிக்கெட் விரும்பிகள் பலருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி யிருந்தாலும், தற்போது 38 வயதுகளில் இருக்கும் கலீஸ் எடுத்த முடிவு சரியானதே!

சச்சினின் ஓய்வுக்கு பின்பு தற்போது விளையாடிக்கொண்டு இருக்கும் பிரபல கிரிக்கெட் வீரர்களில் மேற்கிந்தியத் தீவுகளின் சிவ்நரைன் சந்திரபோலுக்கு (1994இல் அறிமுகம்) அடுத்தாக அதிக ஆண்டுகள் விளையாடிக்கொண்டு இருப்பவர் கலீஸ். 1995ம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமாகி தொடர்ந்து 18ஆண்டுகள் தென்னாபிரிக்க அணி யின் தூணாக விளங்கியவர். தனது சகலதுறை பெறுபேறுகளின் மூலம் கலீஸ் சர்வதேச கிரிக்கெட்டில் படைத்த சாதனைகள் ஏராளம்.

பொபெக்ட் ஆல்ரவுண்டா என்றால் அது கலீஸ் தான் எனக் கூறும் அளவிற்கு ஐ.சி.சி.யின் சகலதுறை வீரர் களுக்கான தரவரிசையில் பலதடவைகள் முதலி டத்தை வகித்தவர். தற்போது கூட, டெஸ்ட் போட்டிகளுக்கான தரவரிசையில் மூன்றாமிடத்தில் உள்ளார். டெஸ்ட்டில் சகீர்கான்,ராகுல் ட்ராவிட் ஆகிய இருவரும் சேர்ந்தால் போல் இருப்பவருக்கு இணையானவர் எனச் சிலாகிக்கப் படுகின்றார். இதுவரை 165 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று 13,174 ஓட்டங்களையும், 292 விக்கெட்டு களையும் எடுத்துள்ளார். தவிர, 199பிடிகளையும் எடுத்துள்ளார்.

கலீஸ்,சமீபகாலமாக சில தொடர் களில் மட்டும் பங்கேற்று வந்தார். கடைசியாக பங்கேற்ற 9 டெஸ்டில் ஒருசதம் கூட அடிக்கவில்லை. தவிர, 8 இன்னிங்சில் ஒற்றை இலக்க ஓட்டங்களில் வெளியேறினார். தென்னாபிரிக்க அணிக்குள் இளம் வீரர்களின் வருகை யும் சேர்ந்து கொள்ள, கலீஸிற்கு கூடுதல் நெருக்கடி ஏற்பட்டது. உச்சத்தில் இருக்கும் போதே ஓய்வு பெற நினைத்து, முதலில் டெஸ்ட், முதல் தரப் போட்டி களில் இருந்து ஓய்வு பெறுவதாக கடந்தவாரம் அறிவித்தார்.

டெஸ்ட் அரங்கில் அதிக சதம் அடித்தடாப்-10 வீரர்களில் இந்தியாவின் சச்சின் டெண்டுல்காருக்கு (51)அடுத்தபடியாக கலீஸ்(44) உள்ளார். சச்சினை விட 35 போட்டிகள் குறைவாக விளையாடியுள்ள கலீஸ், சச்சினின் சாதனையை முறியடிப்பார் என்றே பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. இவர்களுக்கு அடுத்தபடியாக ரிக்கி பொண்டிங் (41),டிராவிட் (36),லாரா (34),கவாஸ்கர (34),சங்கக்கரா (33), ஸ்டீவ் வோக் (32),ஜெயவர்தனா (31) ஆகியோர் உள்ளனர். இவர்களில், இலங்கையணியின் சங்கமற்றும் மஹேல ஆகியோரே தற்போது சர்வதேச போட்டிகளில் விளையாடி வருகின்றார்.

கடந்த 2003ஆம் ஆண்டு, தென்னாபிரிக்க அணித் தலைவர் பதவியில் இருந்து ஷோன் பொலக் விலக, அந்த இடத்திற்கு கலீஸ் நியமிக்கப்படுவார் என்றே பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனால்,அன்று புதுமுகவீரராக இருந்த கிரைம் ஸ்மித்துக்கு அப்பதவி வழங்கப்பட்டது. இடையிடையே துணைத்தலைவராக கலீஸ் கடமையாற்றிய போதும், அணித்தலைவர் பதவிமட்டும் அவருக்கு அவ்வளவாக வாய்க்க வில்லை. கலீஸின் இறுதி டெஸ்ட்டில் அவரைக் கௌரவிக்க எண்ணிய தென்னாபிரிக்க கிரிக்கட் சபை,கௌரவதலைவர் பதவியை வழங்கியது.

தான் விளையாடும் காலத்தில் தென்னாபிரிக்க அணி உலகக் கோப்பையை வெல்ல வேண்டும் என்பது கலீஸின் ஆசை. அது இன்று வரை நிறைவேறாத ஆசையாகவே உள்ளது.' டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வை அறிவித்துள்ள இவர்,ஒருநாள் போட்டிகளில் ஒருந்து ஓய்வை அறிவிக்க வில்லை. 2015இல் இடம் பெறவுள்ள உலகக்கிண்ண போட்டிகள் வரை விளையாட கலீஸ் விரும்பம் தெரிவித்துள்ளார்.ஆனால் உலகக்கோப்பை போட்டிகளில் தென்னாபிரிக்க அணியின் துரதிஷ்ட வரலாறு தொடர்ந்து கொண்டே இருக்கிறது.பார்போம் 2015 இல் ஆவது கலீஸின் ஆசை நிறைவேறுக்கின்றதா என்பதை!.

## மீண்டும் அணிக்குள் மஹேல!

பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரைப் பறிகொடுத்த இலங்கை யணி, தொடர்ந்து வரும் டெஸ்ட் தொடரை வென்று ஆசிய உப கண்ட நாடுகளில் தனது பலத்தை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின் றது. முதல் டெஸ்ட் டிசம்பர் 31இல் அபுதாபியில் தொடங்குகிறது. அடுத்த இரண்டுபோட்டிகள் துபாய் (ஜனவரி 8-12), சாரஜாவில் (ஜனவரி 16-20) நடக்கவுள்ளன. இடைவரிசை துடுப் பாட்ட வீரர்கள் சிறந்த இணைப்பாட்டம் ஒன்றைப் புரியாததன் காரணமாகவே பாகிஸ் தானுக்கு எதிரான ஒரு நாள் தொடரை இலங்கை இழந்தது. இந்த வேளையில், மஹேல ஜெயவர்த்தனவின் தேவை அணிக்குள் உணரப் பட்டிருக்கும்.'



தனது சொந்த தேவைக்காக ஓய் வெடுத்துக் கொண்ட முன்னாள் அணித் தலைவர் மஹேல , டெஸ்ட் போட்டிகளுக்கான குழாமில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார். கடைசியாக இவர்,கடந்த ஜனவரிமாதம் சிட்னி யில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்டில் விளையாடினார். சுமார் 11 மாதங்களுக்குபின்,மீண்டும் அணியில் இடம் பிடித்துள்ளார். பாகிஸ்தானுக்கு எதிராக இவர் அசத்தும் பட்சத்தில்,டெஸ்ட் அரங்கில் 11 ஆயிரம் ஓட்டங் களைப் பதிவு செய்யலாம். இவருக்கு இன்னும் 194 ஓட்டங்கள் மட்டுமே தேவைப் படுகின்றன. இதுவரை இவர், 138 டெஸ்டில் 31 சதம், 45 அரைசதம் உட்பட 10,806 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

தவிர, இலங்கை டெஸ்ட் அணியில் இளம் வேகப்பந்து வீச்சாளர் விஷ்வா பெர்ணான்டோ அறிமுகவீரராக இடம் பெற்றுள்ளார். இதேபோல, 7 ஒருநாள் போட்டிகளில் மட்டும் விளையாடிய சகலதுறைவீரர் டில்ருவான் பெரேரா, டெஸ்ட் போட்டிக்கு முதன் முறையாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

## ஸ்வானின் திடீர் ஓய்வு

கடந்தவாரம் இன்னொரு கிரிக்கெட் வீரரின் ஓய்வு அறிவிப்பும் ரசிகர்களி டையே அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இங்கிலாந்து அணியின் அனுபவ சுழற் பந்துவீச்சாளர் ஸ்வான் (வயது34). கடந்த 2008 இல் இந்தியாவுக்கு எதிரான டெஸ்டில் அறிமுக மானார். இவர் இங்கிலாந்து அணிக் காக இதுவரை 60 டெஸ்ட் (255 விக்கெட்), 79 ஒரு நாள் (104 விக்கெட்) போட்டிகளில் பங்கேற் றுள்ளார். தற்போது நடந்து வரும் ஆஷஸ் தொடரில் ஸ்வான் செயல்பாடு திருப்தி அளிக்கவில்லை. இதில், 3 போட்டிகளில் 7 விக்கெட்டுக்களை மட்டுமே கைப்பற்றினார். இதையடுத்து, கிரிக்கெட் அரங்கில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். ஓய்வு குறித்து அவர் அளித்துள்ள பேட்டி, ஏனைய வீரர்களுக்கு சிறந்த முன்னுதாரணமாகும். என் உடல் டெஸ்ட் போட்டிக்கு ஒத்துழைக்க மறுக்கிறது. ஒரு சுழற்பந்து வீச்சாளர் அணிக்கு வெற்றி தேடித் தருவது தான் முக்கியம். பெயர் அளவிற்கு அணியில் இடம் பெறுவதால் எந்த பயனும் இல்லை. என்னை பொறுத்த வரை யில் இங்கிலாந்து அணிக்குவெற்றி பெற்றுத் தருவதே இலக்கு. இதை சிறந்த முறையில் செய்ய முடியவில்லை. அணியில் சுயநலமாக இடம் பெறுவதில் எனக்கு உடன்பாடு கிடை யாது. எல்லா வீரர்களும் என்றாவது ஒரு நாள் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறத்தான் வேண்டும். தற்போது சர்வ தேச போட்டிகள் மற்றும் முதல் தரப் போட்டிகளில் இருந்து உடன டியாக ஓய்வு பெறுகி றேன் என்று ஸ்வான் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 கோடிக்குச் சம்மதம்

திருப்பதி பிரதர்ஸ் சார்பில் லிங்குசாமி தயாரிக்கும் படம் 'உத்தம வில்லன்'.கமல் நாயகனாக நடிக்கும் இந்தப் படத்தை ரமேஷ் அரவிந்த் இயக்குகிறார்.அனுஷ்காவை நாயகியாக நடிக்க வைக்கலாம் என்றுதான் முதலில் படக்குழு திட்டமிட்டது. சரித்திரப் பின்னணியில் உருவாகும் தெலுங்குப் படங்களில் அனுஷ்கா தீவிரமாக இருப்பதால், காஜல் அகர்வாலை நடிக்க வைக்க முயற்சித்தனர்.''தெலுங்கில் நான் வயதான நடிகர்களுடன் நடிப்பதில்லை. அதற்கு மாறாக தமிழில் நடித்தால் தெலுங்கில் பிரச்சினை எழும்'' என்று சொல்லி மறுத்துவிட்டார்காஜல்.

அதற்குப் பிறகு, லிங்குசாமி காஜலிடம் பேச, ''கண்டிப்பாக நடிக்கிறேன்'' என்று காஜல் ஒப்புக்கொண்டார். உண்மையில் , காஜல் ஒப்புக் கொண்டதற்குக் காரணம் சம்பளம்தானாம். லிங்குசாமி 2 கோடி சம்பளம் தருவதாகச் சொன்னது தானாம்.

## தேவால

பாண்டிய நாடு பட வெற்றிக்குப்
'சிகப்பு மனிதன்'.திரு இயக்கத்தி
கடந்து ஒரு மாதமாக தொடர்ந்து ந
வரும் ஒரு பாடலை ஜி.வி.பிரகாஷ்
என ஐந்து நிறங்களை வைத்து
முட்டுக்காடு அருகில் கடல் தண்ண
தேவாலயம் போன்று செயற்கை
'பருத்திவீரன்', 'ஆடுகளம்' படங்க
திடீரென உருவா
கூடிவிட்டார்கள்.
அப்படியே விட்டு
நடனம் அமைக்க
ஆகியோர் தேவாலய



## வீரத்துக்கு பாராட்டு

சிறுத்தை சிவா' இயக்கத்தில் அஜித், தமன்னா இணைந்து நடிக்கும் 'வீரம்' படம் ஜனவரி 10இல் வெளியாகிறது. இந்தப்படத்தில் விதார்த், சந்தானம், நாசர், அப்புக்குட்டி உள்ளிட்ட பிரபலங்கள் நடிக்கிறார்கள். தேவிஸ்ரீபிரசாத் இசையமைத்திருக்கிறார்.

'வீரம்' படத்துக்கு 1800 பிரதிகள் போடப்படுகின்றன.அஜித் படத்துக்கு இதுவரை இல்லாத அளவுக்கு அதிகமான பிரதிகள் இந்தப் படத்துக்குத்தான் என்பது குறிப்பிடத்தக்கது .டிசம்பர் 20இல் வெளியான 'வீரம்' இசை பட்டி தொட்டி எங்கும் பட்டையைக் கிளப்பிக் கொண்டிருக்கிறது.தணிக்கைக் குழுவினர் 'வீரம்' படத்துக்கு 'யு' சான்றிதழ் அளித்ததோடு, படத்தையும் பாராட்டி இருக்கிறார்கள்.



## அமெரிக்காவில் ஹன்சிகா

விடுமுறையைக் கொண்டாட அமெரிக்கா சென்றுள்ளாராம் ஹன்சிகா. அரண்மனை, மான் கராத்தே ஆகிய படங்களின் படப்பிடிப்புகளை முடித்துவிட்ட ஹன்சிகா தற்போது அமெரிக்காவில் முகாமிட்டுள்ளாராம். எவ்வளவு தீவிரமான படப்பிடிப்பாக இருந்தாலும் ஒவ்வொரு வருடமும் அங்கே இருக்கும் தன் தோழிகளைச் சந்திப்பதை தவறாமல் கடைப்பிடித்து வருகிறாராம் ஹன்சிகா.

தற்போது அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் தங்கி இருக்கும் ஹன்சிகா இன்னும் இரண்டு நாட்களில் அங்கிருந்து லொஸ் ஏஞ்சல்ஸ் செல்கிறாராம்.

## ஹிந்தி பீட்சாவில் பார்வதி ஓமனக்குட்டன்



கடந்த வருடம் கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் வெளியான 'பீட்சா' வின் வெற்றி ஹிந்திப்பட உலகையும் திரும்பிப்பார்க்க வைத்தது.

இதன் கன்னட, தெலுங்கு ரீமேக் உரிமை மட்டும் ஒரு கோடிக்கு மேல் சம்பாதித்து தந்தது.

இதன் ஹிந்தி மொழியாக்க உரிமையை அப்போதே ஒரு கோடிக்கு பிஜாய் நம்பியார் வாங்கியிருந்தார்.

இவர் விக்ரம், ஜீவாவை வைத்து 'டேவிட்' என்ற படத்தை இயக்கியவர்.

தற்போது இந்தப் படம் தொடர்பான வேலைகளை ஆரம்பித்துவிட்டார் பிஜாய் நம்பியார்.

இந்தப்படத்தில் அக்ஷய் ஒபராய் நாயகனாக நடிக்க அவருக்கு ஜோடியாக நடிக்கிறார் முன்னாள் இந்திய அழகியான பார்வதி ஓமனக்குட்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



K

# லய நடனம்

ப் பின்னர் விஷால் தயாரித்து நடித்து வரும் படம் நான் தில் விஷால், லட்சுமி மேனன் நடிக்கும் இதன் படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது.படத்தின் முக்கியத்துவம் வாய்ந்ததாக டி உருவாக்கியுள்ளார்.வெள்ளை, மஞ்சள், கறுப்பு, நீலம், பச்சை நா.முத்துக்குமார் இந்தப்பாடலை எழுதியுள்ளார்.இதற்காக ணி சூழ்ந்துள்ள இடத்தில் சுமார் 30 லட்சம் ரூபாய் செலவில் கட்டடம் ஒன்று போடப்பட்டது.

களில் பணிபுரிந்த ஜாக்கி இதை உருவாக்கியுள்ளார்.

ான இந்த தேவாலயத்தை பார்க்க அக்கம் பக்கத்து ஊர் மக்கள் . எனவே இந்தப் பாடல் முடிந்தும் அதை புதுவருடம் வரை ி விட படப்பிடிப்புக் குழுவினர் முடிவு செய்துள்ளார்கள்.ஷோபி க்க 250 நடனக் கலைஞர்களுடன் விஷால், ஜெகன், சுந்தர் ய முன்றலில் நடனம் ஆடினார்கள்.

# அமலாபால் அவுட்



விஜயகாந்த் நடித்த,'ரமணா' படத்தை 'கப்பார்' என்ற பெயரில் இந்தியில் மொழிபெயர்ப்பு செய்கின்றனர்.அக்ஷய் குமார் நாயகனாக நடிக்கும் இந்தப் படத்தை, 'வானம்' படத்தை இயக்கிய க்ரிஷ் இயக்குகிறார்.இதில், சிம்ரன் நடித்த வேடத்தில் நடிக்க, தென்னிந்திய சாயலில் முக அமைப்பு கொண்ட நடிகையைத் தேடி வந்தனர்.

விஜயகாந்த் நடித்த,'ரமணா' படத்தை 'கப்பார்' என்ற பெயரில் இந்தியில் மொழிபெயர்ப்பு செய்கின்றனர்.அக்ஷய் குமார் நாயகனாக நடிக்கும் இந்தப் படத்தை, 'வானம்' படத்தை இயக்கிய க்ரிஷ் இயக்குகிறார்.இதில், சிம்ரன் நடித்த வேடத்தில் நடிக்க, தென்னிந்திய சாயலில் முக அமைப்பு கொண்ட நடிகையைத் தேடி வந்தனர். முதலில், ஸ்ருதிஹாசனைத் தான் ஒப்பந்தம் செய்து, புகைப்படத் தெரிவும் நடத்தினர். ஆனால், அவரது முகம் தென்னிந்திய சாயலில் இல்லை என நிராகரித்தனர் அதற்குப் பின், அமலாபாலை அழைத்து ஒப்பனைச் சோதனை நடத்தினர். இதனால், உற்சாகத்தில் இருந்தார் அமலாபால்.ஆனால், திடீரென அவரையும் நிராகரித்த, 'கப்பார்' படக்குழு, மறுபடியும் ஸ்ருதிஹாசனையே நடிக்க வைக்க முடிவு செய்துள்ளனர்.ஹிந்தியில் ஸ்ருதியின் மார்க்கெட் உச்சத்தில் இருப்பதே, இந்த மாற்றத்திற்கு முக்கிய காரணமாம்.

# ள்ளி மாணவி கல்லூரி ாணவியானார்?



வருத்தப்படாத வாலிபர் சங்கம்' படத்தில் பள்ளி மாணவியாக நடித்திருந்தார் ஸ்ரீதிவ்யா. அந்தப் படம் பிரபலமானதால், அடுத்து உடனடியாக ஜி.வி.பிரகாஷ் குமார் நடிக்கும், 'பென்சில்' படத்திற்கும், பள்ளி மாணவியாக ஒப்பந்தமானார். இதைஅடுத்து, மேலும் சில இயக்குநர்களும், அதேபோன்ற பள்ளிக்கூட கதையை ஸ்ரீதிவ்யாவிடம் சொல்லிவிட்டு, அவரது பதிலுக்காக காத்திருக்கின்றனர். ஆனால் அவருக்கோ, தொடர்ந்து, பள்ளி மாணவியாக நடிப்பதில் உடன்பாடில்லையாம். இதிலிருந்து விடுபட்டு, கல்லூரி மாணவியானால் தானே, முன்னணி நாயகர்களுடன் நடிக்க முடியும் என்று, அந்த மாதிரியான கதைகளை தேடி வந்தார்.

இப்போது அதர்வாவுடன் நடிக்கும், ஈட்டி படத்தில் கல்லூரி மாணவி வேடம் கிடைத்துள்ளதாம். அதனால், தான் எதிர்பார்த்தது போன்றே உயர்வுகிடைத்து விட்டது என்றுகுஷியடைந்துள்ளார் ஸ்ரீதிவ்யா.

# ராஜமரியாதையில் டாப்ஸி



பஞ்சாப்பில் ராஜமரியாதை கிடைத்த சந்தோஷத்தில் இருக்கிறார் ராம் டாப்சி. 'ரன்னிங் ஷாதி. காம்' என்ற திரைப்படத்தின் படப் பிடிப்பு பஞ்சாப்பில் இருக்கிற பழமை வாய்ந்த கோட்டைகளில் நடைபெற்றது.இதில் கலந்துகொண்ட டாப்ஸிக்கு, அந்த கோட்டைகளில் வசிக்கும் ராஜ வம்சத்தினரின் ராஜ உபசாரமும் கிடைத்திருக்கிறது. ஒவ்வொரு நாளும் படப்பிடிப்பு முடிந்த பின், அவர்கள் அளித்த விருந்தில் பஞ்சாப்பின் சிறப்பு வாய்ந்த உணவு வகைகளை எல்லாம் ஒரு பிடிபிடித்திருக்கிறாராம் டாப்ஸி.

அத்தோடு படப்பிடிப்புக் குழுவினரை விழுந்து விழுந்து கவனித்த ராஜவம்சத்தினர் மிகவும் எளிமையாக பழகியதை பெருமையுடன் கூறியுள்ளார் டாப்ஸி.

# சமீராவுக்கு டும் டும்



இரண்டு வருட காதலரை மணக்க உள்ளார் சமீரா ரெட்டி. வாரணம் ஆயிரம், அசல், வேட்டை, வெடி, நடுநிசி நாய்கள் உள்ளிட்ட படங்களில் நடித்திருப்பவர் சமீரா ரெட்டி.

மோட்டார் பைக் நிறுவன அதிபர் அக்ஷய் வர்தேவுடன் கடந்த 2 வருடங்களுக்கு முன் சமீராவுக்கு நட்பு ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து இவர்களது நட்பு காதலாக மாறியது. தற்போது அவரது காதல் அம்பலத்துக்கு வந்துள்ளது.

கடந்த வாரம் சமீரா, அக்ஷய் திருமண நிச்சயதார்த்தம் பாந்தராவில் உள்ள சமீராவின் வீட்டில் ரகசியமாக நடந்தது.

இதில் நெருங்கிய நண்பர்கள் மட்டும் கலந்துகொண்டனர். இதுகுறித்து சமீரா கூறுகையில், எங்களுக்கு நிச்சயதார்த்தம் நடந்தது உண்மைதான் என்றும் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் திருமணம் நடக்க உள்ளது எனவும் கூறியுள்ளார்.

# கலக்கும் கண்டாங்கி

'ஜில்லா' படத்திற்காக பாடல் ஒன்றை ஸ்ரேயா கோஷலுடன் இணைந்து பாடியுள்ளார் விஜய்.

ஆர்.பி.சௌத்ரி தயாரிப்பில் நேசன் இயக்கும் ஜில்லா திரைப்படம் பொங்கல் ஜல்லிக்கட்டில் களமிறங்கத் தயாராக உள்ளது.

ரசிகர்கள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கும் இந்தப்படத்துக்கு டி இமான் இசையமைத்திருக்கிறார்.

தான் நடிக்கும் படத்தில் பாடல்களையும் பாடி வரவேற்பை பெற்று வரும் விஜய் ஜில்லாவுக்காக வைரமுத்து எழுதிய 'கண்டாங்கி கண்டாங்கி' என்ற பாடலை பாடியுள்ளார்.

இந்தப்பாடல் விஜய் ரசிகர்களுக்கு 2014ம் ஆண்டின் தித்திக்கும் சர்க்கரை பொங்கலாக அமைந்துள்ளது. ஜில்லா படப்பாடல்களில் கண்டாங்கி பாடலே ரசிகர்களை அதிகம் கவர்ந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூக்குத்தி என்பது 'பஷனா' பண்பாடா?



மூக்குகுத்துவது, காது குத்துவது துளையிடுவது உடலில் உள்ள வாயுவை ,காற்றை வெளியேற்றுவதற்கு. கைரேகை, ஜோசியம் பார்ப்பவர்கள் ஆண்களுக்கு வலது கையும் பெண்களுக்கு இடது கையும் பார்த்துப் பலன் கூறுவது வழக்கம். ஆண்களுக்கு வலப் புறமும் பெண்களுக்கு இடப் புறமும் பலமான, வலுவான பகுதிகளாகும். ஞானிகளும் ரிஷிகளும் தியானம் செய்துபோது வலது காலை மடக்கி இடது தொடை மீது போட்டு தியானம் செய்வார்கள். இதற்குக் காரணம் இடது காலை மடக்கிக் தியானம் செய்யும் போது வலது பக்கமாக சுவாசம்போகும் வலதுஎன்றால்தமிழில் வெற்றி என்று பொருள். வலது பக்கமாக சுவாசம் செல்லும்போது தியானம், பிரார்த்தனை எல்லாம் கண்டிப்பாக பலன் தரும். அதனால் இந்த நாடியை அடக்குவதாக இருந்தால் வலது பக்க சுவாசத்திற்கு மாற்ற வேண்டும். அதே மாதிரி ஒரு அமைப்புத்தான் மூக்குத்தி. நமது மூளைப் பக்கத்தில் ஹிப்போதலாமஸ் என்ற பகுதி இருக்கிறது. நரம்பு மண்டலங்களை கட்டுப்படுத்தக் கூடிய, செயல்படக் கூடிய அளவு சில பகுதிகள் உள்ளன. அந்தப் பகுதியில் சில உணர்ச்சி பிரவாகங்கள் உள்ளன. இதனைச் செயல் படுத்துவதற்கு அந்தப் பகுதி துணையாக இருக்கிறது. இப்படி இந்தப் பகுதியை அதிகமாக செயல்படுத்து வதற்கும் பெண்ணின் மூக்கில் இடது பக்கத்தில் குத்தக்கூடிய மூக்குத்தி வலது பக்க மூளையை நன்றாகச் செயல்பட வைக்கும். இடது பக்கத்தில் மூளை அடைப்பு என்றால் வலது பக்கத்தில் நன்கு வேலை செய்யும். வலது பக்கம் அடைத்தால் இடது பக்கம் உள்ள மூளை அதிகமாக இயங்கும். இன்றைய நம்முடைய மனித வாழ்க்கைக்கு அதிகமாக இந்த இடது பக்க மூளையை அடைத்துவலது பக்கமாக வேலை செய்ய வைக்கிறோம். அதனால் வலது கை, வலது கால் எல்லாமே பலமாக உள்ளது.

பெண்கள் முக்குத்தி அணியும் போது, முன் நெற்றிப் பகுதியில் இருந்து ஆலம் விழுதுகள் போல் சில நரம்புகள் நாசி துவாரத்தில் இறங்கி கீழே வரும். இப்படி விழுதுகள் மூக்குப் பகுதியிலும், ஜவ்வு போல மெல்லிய துவாரங்களாக இருக்கும். ஆலம் விழுதுகள் போல உள்ள மூக்குப் பகுதியில் ஒரு துவாரத்தை ஏற்படுத்தி அந்த துவாரத்தில் தங்க முக்குத்தி அணிந்தால், அந்தத் தங்கம் உடலில் உள்ள வெப்பத்தை கிரகித்து தன்னுள்ளே ஈர்த்து வைத்துக்கொள்ளும்சக்தியைப் பெறும். அதுமட்டுமல்ல, மூக்கின் மடல் பகுதியில் ஒரு துவாரம் ஏற்பட்டால் அதன் மூலம் நரம்பு மண்டலத்தில் உள்ள கெட்ட வாயு அகலும்.

சிறுமிகளுக்கு மூக்குத்தி அணிவிப்பது கிடையாது. பருவப் பெண்களுகே மூக்குத்தி அணிவிக்கப் படுகிறது. பருவ வயதை அடைந்த பெண்களுக்கு கபாலப் பகுதியில் அதாவது, தலைப்பகுதியில் சில விதமான வாயுக்கள் இருக்கும். இந்த வாயுக்களை வெளிக் கொண்டு வருவதற்கு ஏற்படுத்தப்பட்டது தான் இந்த மூக்கு குத்துவது. மூக்கு குத்துவதால் பெண்களுக்கு ஏற்படக் கூடிய சளி, ஒற்றைத் தலைவலி, மூக்கு சம்பந்தமான தொந்தரவுகள், பார்வைக் கோளாறு சரி செய்யப் படுகின்றன. இன்றைக்கு நாகரிகம் வளர்ந்து விட்டதால் சில பெண்கள் வலதுப் பக்கம் மூக்குத்தி அணிகி றார்கள். ஆனால், சாஸ்திர ரீதியாக இடப்பக்கம்தான் பெண்கள் மூக்குத்தி அணிய வேண்டும். இடது பக்கம் குத்துவதால் சில மாற்றங்கள் ஏற்படும். சிந்தனா சக்தியை ஒரு நிலைப் படுத்துகிறது. மனதை அமைதிப்படுத்துகிறது. தியானம், பிராத்தனையில் ஈடுபட உதவுகிறது.

ஒற்றைத்தலைவலி, நரம்பு சம்பந்தமான நோய்கள், மனத்தடுமாற்றம் ஏற்படாமல் இருக்க மூக்குத்தி உதவுகிறது என்று ஞானிகளும் ரிஷிகளும் கூறியிருக்கின்றனர். உடலிலுள்ள வெப்பத்தைக் கிரகித்து நீண்ட நேரம் தன்னுள்ளே வைத்திருக் கூடிய ஆற்றல் தங்கத்துக்கு இருக்கிறது. தங்க நகைகளைப் பெண்கள் அணிவதன் மூலம் உடலில் ஏற்படும் அதிக வெப்பம் உணர்ச்சியாக மாறுவதிலிருந்து தடைப்பட்டுப்போகும். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, ஆகிய நால்வகைப் பண்புகள் உடையவர்களாகத் திகழ முடியும். தங்க நகைகள் அணிவதால் உணர்ச்சிப் பிரவாகம் தடைப்பட்டு பெண்களின் உடல் வெப்பம் சம நிலையடைகிறது. இதனால் அவர்களது வாழ்க்கை தர்ம நெறிகளுக்கு உட்பட்டு சீராக அமையும்

## புதுயுகத்தைத் தேடி......

**மகளிர் பக்கம்**

தொகுப்பு: ஸ்ருதி

*(எம் ஆர் ஸோபனாவின் ஆணுக்கு எதிரானதா பெண்ணியம் கட்டுரையின் இறுதிப் பகுதி..)*

## ஆண்களுக்கு எதிரானதா பெண்ணியம்...?

திருமணம் செய்துகொண்டு 'வேறு வீட்டுக்கு'ச் சென்றுவிடும் பெண்ணுக்குச் சொத்துரிமை கிடையாது என்ற விதியும் ஏற்படுத்தப்பட்டது. பெண்ணுக்குச் சொத்தில் பங்கு கிடையாது. அவள் ஆணின் சொத்து. அவளைப் பணம் கொடுத்து. வாங்கிக் கைமாற்றிக்கொள்ளலாம்.

பொர்ருளாதார ரீதியில் குடும்பத்தைக் காக்க ஓர் ஆண் மகன் வேலைக்குச் சென்றால். அந்தக் குடும்பம் தலை யெடுத்து விட்டது என்கிறது சமுதாயம். அதே குடும்பப் பொருளாதார நிலையைச் சமாளிக்க ஒரு பெண் வேலைக்குச் சென்றால், அது சமுதா யத்தால் 'பரிதாபத்திற்குரிய' நிலையாகப் பார்க்கப்படுகிறது. சமயத் தலைவர்கள் சிலர் ஒரு படி மேலே போய் 'வேலைக்குப் போகும் பெண்கள் ஒழுக்கம் கெட்டவர்கள்' என விஷம் கக்குகின்றனர்.

19ஆம் நூற்றாண்டுவரை பெண்கள் கல்வி கற்பதே மிகப் பெரிய விஷயமாக இருந்தது. மகாத்மா ஃபுலே, ராம் மோஹன் ராய், காந்தியடிகள், தந்தை பெரியார் போன்றோ ரின் செயல்பாடுகளால் இன்று மாற்றங்கள் சாத்தியமாகியுள்ளன. இன்று ஓரளவு கல்வியும் வேலைவாய்ப்பும் பெண்க ளுக்குக் கிடைத்துள்ளன. இந்த மாற்றங் களைப் பலர் எரிச்சலோடும், சிலர் நிறை வோடும் பார்க்கிறார்கள். ஆனால் பெண்கள் போக வேண்டிய தூரமோ ஒளி வேகப் பயணத்தைக் கோருகிறது. பெண்ணு ரிமை பேசும் சில பெண்கள், ஆண்களுக்கும் பொதுச் சமூகத்துக்கும் எதிராக முன்வைக்கும் விமர்சனங்களில் சமநிலை தவறியிருக்கலாம். அதை வைத்துக்கொண்டு ஒட்டுமொத்த பெண்ணுரிமைக் கோரிக்கைகளையும் சிறுமைப்படுத்த முயல்வதும் பெண்ணை அடிமைப்படுத்தும் செயலாகவே அமையும்.

பெண்ணுரிமை, பெண்நிலைவாதம், பெண்ணியம் என்பவை அடிப்படையில் சம உரிமைக்கான குரல்கள்தான். இதைப் பெண்கள் மட்டும்தான் எழுப்ப வேண்டும் என்பதில்லை. கல்வி, வேலை, லட்சியம், பொழுதுபோக்கு, திருமணம், பாதுகாப்பு, நடமாட்டம் என அனைத்திலும் ஆணுக்குக் கிடைக்கும் உரிமைகளும் சுதந்திரமும் பெண்ணுக்கும் கிடைக்க வேண்டும். இது ஆண்களின் உரிமையைப் பறிக்கும் நோக்கம் கொண்டதல்ல. ஆணுக்கு எதிரானதுமல்ல.பெண்கள் தங்கள் உரிமை யை உணர்ந்து, சமுதாயத்தில் அதனைத் தக்க வைத்துக்கொள்ளவும், பால் சமத்துவத் திற்குப் போராடவும் உதவும் ஒரு வழிகாட்டியே பெண்ணியம். நியாய உணர்வும் சமத்துவத்தில் நம்பிக்கையும் கொண்ட ஆண்களும் இணைந்து பாடுபட வேண்டிய இலட்சியம் இது.

## கூட்டுக்குடும்பம்

திருமணம் செய்துகொண்டு 'வேறு வீட்டுக்கு'ச் சென்றுவிடும் பெண்ணுக்குச் சொத்துரிமை கிடையாது என்ற விதியும் ஏற்படுத்தப்பட்டது. பெண்ணுக்குச் சொத்தில் பங்கு கிடை யாது. அவள் ஆணின் சொத்து. அவளைப் பணம் கொடுத்து. வாங்கிக் கைமாற்றிக் கொள்லலாம். பொருளாதார ரீதியில் குடும்பத்தைக் காக்க ஓர் ஆண் மகன் வேலைக்குச் சென்றால், அந்தக் குடும்பம் தலையெடுத்துவிட்டது என்கிறது சமு தாயம். அதே குடும்பப் பொருளாதார நிலையைச் சமாளிக்க ஒரு பெண் வேலைக் குச் சென்றால், அது சமுதாயத்தால் 'பரிதா பத்திற்குரிய' நிலையாகப் பார்க்கப் படுகி றது. சமயத் தலைவர்கள் சிலர் ஒரு படி மேலே போய் 'வேலைக்குப் போகும் பெண்கள் ஒழுக்கம் கெட்டவர்கள்' என விஷம் கக்குகின்றனர்.

19ஆம் நூற்றாண்டுவரை பெண்கள் கல்வி கற்பதே மிகப் பெரிய விஷயமாக இருந்தது. மகாத்மா ஃபுலே, ராம் மோஹன் ராய், காந்தியடிகள், தந்தை பெரியார் போன்றோரின் செயல் பாடுக ளால் இன்று மாற்றங்கள் சாத்திய மாகியுள் ளன. இன்று ஓரளவு கல்வியும் வேலை வாய்ப்பும் பெண்களுக்குக் கிடைத்துள் ளன. இந்த மாற்றங்களைப் பலர் எரிச்சலோடும், சிலர் நிறைவோடும் பார்க்கிறார்கள். ஆனால் பெண்கள் போக வேண்டிய தூரமோ ஒளி வேகப் பயணத்தைக் கோருகிறது.

பெண்ணுரிமை பேசும் சில பெண்கள், ஆண்களுக்கும் பொதுச் சமூகத்துக்கும் எதிராக முன்வைக்கும் விமர்சனங்களில் சமநிலை தவறியிருக்கலாம். அதை வைத்துக் கொண்டு ஒட்டுமொத்த பெண்ணுரிமைக் கோரிக்கைகளையும் சிறுமைப்படுத்த முயல்வதும் பெண்ணை அடிமைப்படுத்தும் செயலாகவே அமையும்.

பெண்ணுரிமை, பெண்நிலைவாதம், பெண்ணியம் என்பவை அடிப்படையில் சம உரிமைக்கான குரல்கள்தான். இதைப் பெண்கள் மட்டும்தான் எழுப்ப வேண்டும் என்பதில்லை. கல்வி, வேலை, லட்சியம், பொழுதுபோக்கு, திருமணம், பாதுகாப்பு, நடமாட்டம் என அனைத்திலும் ஆணுக்குக் கிடைக்கும் உரிமைகளும் சுதந்திரமும் பெண்ணுக்கும் கிடைக்க வேண்டும். இது ஆண்களின் உரிமையைப் பறிக்கும் நோக்கம் கொண்டதல்ல. ஆணுக்கு எதிரானதுமல்ல.

பெண்கள் தங்கள் உரிமையை உணர்ந்து, சமுதாயத்தில் அதனைத் தக்க வைத்துக்கொள்ளவும், பால் சமத்துவத்திற்குப் போராடவும் உதவும் ஒரு வழிகாட்டியே பெண்ணியம். நியாய உணர்வும் சமத்துவத்தில் நம்பிக்கையும் கொண்ட ஆண்களும் இணைந்து பாடுபட வேண்டிய இலட்சியம் இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறிந்த காதலுக்கு மருந்து

**கா**தல் முறிவு என்பது உங்கள் வாழ்க்கையை பாழாக்கும் ஒரு காலமாகும். இப்படிக் காதல் முறிவுகள் ஏற்பட்டவுடன் பொது வாக அனைவரும் செய்யும் தவறான செயலாகும். இத னால் மன அழுத்தம் அதி கரிக்கவே செய்யும். எனவே வருங்காலத்தை பற்றி மட்டும் சிந்தியுங்கள்.



முக்கியமான தவறுகள் சில உள்ளன. காதல் முறிவு ஏற்பட்டால் சில விடயங்களைப் பின்பற்றி னால், உங்கள் வாழ்வில் நிம்மதி குடியேறும். காதல் முறி வுக்கு பின் செய்யக்கூடாத சில விஷயங் களைப் பார்க்கலாம்...

**காதல் முறிவால் தேங்கி விடாமல் வாழ்க்கையை தொடர, எப்போதும் சந்தோச மாக இருக்கும் நபர்களைச் சந்தியுங்கள். ஆனால் பழைய உறவை மறக்க வேண்டி மனம் போன போக்கில் எதிர்ப்பாலாருடன் புதிய நட்புகளை உருவாக்க விரும்பு கிறீகளா? அது கண் டிப்பாக கூடாது. அது இன்னும் குழப்பத்தை ஏற்படுத்தி உறவு களில் பல சிக்கல்களை ஏற் படுத்தி விடும்.**

காதல் முறிவால் தேங்கி விடாமல் வாழ்க்கையை தொடர , எப்போதும் சந்தோசமாக இருக்கும் நபர்களைச் சந்தியுங்கள். ஆனால் பழைய உறவை மறக்க வேண்டி மனம் போன போக்கில் எதிர்ப் பாலாருடன் புதிய நட்புகளை உருவாக்க விரும்புகிறீகளா? அது கண்டிப்பாக கூடாது. அது இன் னும் குழப்பத்தை ஏற்படுத்தி உறவு களில் பல சிக்கல்களை ஏற்படுத்தி விடும்.

அவனைப் பற்றி நினைப்பது, அவன் சொன்னதையெல்லாம் நினைவு கூருவது, இருவரும் சேர்ந்து செய் தது மற்றும் இருவர் சம்பந்தப்பட்ட விசேஷ தருணங்கள் என இவை யனைத்தையும் நினைப்பது

உங்கள் காதலரின் தொலைபேசி எண் உங்களிடம் இருக்கும். அத னால் முறிவு ஏற்பட்டாலும் கூட, அவரைத் தொடர்பு கொள்ள உங்களை தூண் டும். அப்படி ஆகாமல் தடுக்க அவரின் தொலை பேசி எண்ணை முதலில் உங்கள் தொலைபேசி யில் இருந்து அழித்து விடுங்கள்.

தனிமையில் சில நேரம் கழிப்பதும் நல்ல யோசனை தான். நடந்த தவறை பற்றிச்சிந்திக்க வும், உங்களை நீங்களே புரிந்து கொள்ளவும் இந்தத் தனிமை உங் களுக்கு கை கொடுக் கும். ஆனால் நீண்ட நேரம் தனிமையில் இருப்பது ஆபத்து. அது உங்களை மிகவும் தனி மைப்படுத்திவிடும். அத னால் நண்பர்கள் மற் றும் குடும்ப உறுப்பினர்களை சந்தித்து நேரத்தை செலவிடுங்கள்.

காதல் முறிவு ஏற்பட்ட பின் மற்றொரு ஆணின் இனிமையான பேச்சுக்கும், மயக்கும் செயலுக்கும், அவர்களின் மீது காதல் பிறக்கலாம். ஆனால் இது செய்யக்கூடாத ஒன்றாகும். மீண்டும் ஒரு முறை காதலில் விழுவது, முக்கியமாக காதல் முறிவு ஏற்பட்ட உடனேயே என்பது செய்யக்கூடாத தவறாகும்.

காதல் முறிவால் எப்போதும் தனிமையில் நேரத்தை கழித்தால், அது பிரச்சினையைத் தான் உண் டாக்கும். அவனை நினைப்பது மட்டுமல்லாது, அவனை கூப்பிட முயற்சி செய்வீர்கள், அவன் நினைவை தரும் பொருட்களைப் பார்ப்பீர் கள்; இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். அதனால் தனிமையை தவிர்ப்பது மிகவும் நல்லது.

**இளையோருக்கான புதிய பகுதி!**

சுபிதி

# காதலர் மட்டும்...


## காதல் வந்தவுடன் வண்ணத்துப்பூச்சி

**கா**தல் ஒரு போதை என்று சில கவிஞர்களும் காதலை எதிர்ப்பவர் களும் கூறியிருக்கின்றனர். ஆனால், இப்போது விஞ்ஞானிகளும் அதையே கூறுகின்றனர். காதலில் விழுவது, கொக்கேய்ன் போதைப் பொருள் ஏற்படுத்துவதற்கு சமனான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என காதல் தொடர்பாக மூளையில் ஏற்படும் மாற்றங்களை ஆராய்ந்த அமெரிக்க விஞ்ஞானிகள் கூறுகின் றனர்.

இந்த ஆய்வின்படி, பார்த்தவு டனே காதல் என்பது சாத்தியமாம். மனிதர்கள் தாங்கள் காதல் கொண்டவர்களைக் கண்ணால் காணும்போது மூளையில் 12 இடங்களில் தூண்டல்கள் இடம் பெறுகின்றனவாம். இந்தநிகழ்வின் போது திடீரென சிறப்பாக உணரச் செய்யும் டோபைன், ஒக்ஸிடோ ஸின், அட்ரனலின் போன்ற இரசாய னங்களை உடலில் சுரக்கச் செய் வதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். கொக்கேயின் போதைப் பொருளி னாலும் இந்த இரசாயனங்கள் தூண்டப்படுவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இந்த ஆய்வு முடிவுகள் மூலம் காதலுக்கு விஞ்ஞான அடிப்படை உள்ளது என்பது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது என்கிறார் தலைமை ஆய்வாளரான பேராசிரியர் ஸ்டெ பானி ஓர்டிக். அவர் நியூயோர்க் சிராகஸ் பல்கலைக்கழக பேராசிரி யர்.

பேராசிரியர் ஓர்டிக்கும் அவரின் குழுவினரும் மேற்கு வேர்ஜீனியா பல்கலைக்கழகம், மற்றும் சுவிட் ஸர்லாந்திலுள்ள பல்கலைக்கழக வைத்தியசாலை ஆகியவற்றைச் சேர்ந்த ஆய்வாளர்களுடன் இணைந்து மேற்படி ஆய்வை மேற்கொண் டனர். இந்தக்கண்டுபிடிப்புகளின் மூலம் நரம்பியல் விஞ்ஞானத்திலும் உளவியல் மருத்துவத்திலும் பாரிய மாற்றங்கள் ஏற்படலாம் என ஸ்டெபானி ஓர்டிக் கூறுகிறார்.



சரி, காதலில் விழுவது இதயமா அல்லது மூளையா என்ற பெரிய கேள்விக்கு என்ன பதில்?

அது மூளையென்றுதான் நான் கூறுவேன். ஆனால் இதயத்துக்கும் தொடர்புள்ளது. உதாரணமாக, மூளையின் சில பகுதிகள் செயற் படும்போது இதயத்தில் தூண்டுதல் கள் ஏற்பட முடியும். வயிற்றில் வண்ணத்துப்பூச்சி பறப்பது போன்ற உணர்வு இதனாலேயே ஏற்படு கிறது என்கிறார் பேராசிரியர் ஓர்டிக்.

## காதல் பரிசு:

## உங்களுக்கும் பரிசு

உங்கள் வாழ்வில் அல்லது உங் களுக்குத் தெரிந்தவர்களின் வாழ்வில் காதல் பரிசுகள் பற்றிய சுவாரசியமான சம்பவங்கள் நடந்திருக்கலாம். அவற்றை 100 சொற்களுக்கு மேற்படாமல் எமக்கு எழுதி அனுப்புங்கள்.

தரமானவை வாரந் தோறும் இந்தப் பகுதியில் பிரசுரமாவதோடு. உங்களுக்கு ஆச்சரியமளிக்கும் பரிசுகளும் காத்திருக்கின்றன.



**அனுப்ப வேண்டிய முகவரி:**
**காதல் பரிசு: உங்களுக்கும் பரிசு**
**சுடர் ஒளி**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**பரிசு பெற்றவர்கள் வாரநாள்களில் 021 567 7609 என்ற எமது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு துரிதமாக பரிசினைப் பெற்றுக்கொள்ளலாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைச்சம்பவம் ■ ஜெகன்

# கடவுளின் தண்டனை

மாத்தறை, கும்புறுபிட்டிய மாஸ்முல்ல பிரதேசத்தைச் சேர்ந்த ஹேவா பத்திரனகே பியசேன மற்றும் ஹேமா தென்னக்கோன் மாலினி தம்பதியினருக்கு மூன்றாவது பிள்ளையாக 1977 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி பிறந்தவன்தான் கெட் டயம் சிந்தக்க.

இவனுக்கு பெற்றோர் வைத்த பெயர் ஹேவா பத்திரனகே சிந்தக்க வசந்தகுமார என்பதுதான். ஓ.எல். வரை கல்வி கற்ற இவன் பிற்காலத்தில் தச்சுத் தொழிலைத் தேர்ந்தெடுத்தான். சிறந்த முறையில் தனது வேலையைச் செய்து வந்த அவனைக் கிராமத்தவர்கள் கெட்டயம் சிந்தக்க' என்று அழைக்கத் தொடங்கினர். எனவே, அவனுக்கு அந்தப் பெயரே நிரந்தரமானது.

கெட்டயம் சிந்தக்கவின் தந்தை ஒரு சாரதி. அவர் சிந்தக்கவுக்கு ஆறு வயதாக இருக்கும் போது விபத்தொன்றில் சிக்கி உயிரிழந்தார். அதன் பின்னர் தயாரின் அரவணைப்பிலேயே வாழ்ந்து வந்தான் சிந்தக்க.

தச்சுவேலை செய்து வந்த சிந்தக்கவின் வாழ்வில் 2000ஆம் ஆண்டில் ஒரு அதிர்ச்சிச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதாவது அவனது மூத்த சகோதரி படுகொலை செய்யப்பட்டாள். அன்று முதலே கெட்டயம் சிந்தக்கவின் வாழ்வியல் பாதையும், பயணமும் மாறத் தொடங்கி விட்டது.

தனது சகோதரியைக் கொலை செய்த சந்தேக நபரை சிந்தக்க கொலை செய்து பழி வாங்கினான். அதன் பின்னர் ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரையும் சிந்தக்க கொலை செய்துள்ளான். இந்தக் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் சிறையில் இருந்து •பிணையில் வெளியில் வந்தான்.

2000 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆம் திகதி வரை கெட்டயம் சிந்தக்க பல்வேறு குற்றச் செயல்களைப் புரிந்துள்ளதுடன் அவனுக்கெதிரான ஏராளமான முறைப்பாடுகள் பொலிஸ் புத்தகத்தில் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதனடிப்படையில் 2000 ஆம் ஆண்டு தொடக்கம் மோட்டார் சைக்கிள் கொள்ளை, பல தடவைகளில் ஆயுதம் காட்டி மிரட்டிப் பணம் கொள்ளையடித்தமை, ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தரைக் கொலை செய்தமை என கெட்டயம் சிந்தக்கவின் குற்றப்படலம் தொடர்ந்துள்ளது. இவ்வாறு சட்டத்தை தன் கையிலெடுத்துக் கொண்டு கும்புறுப்பிட்டிய பகுதியை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தான் சிந்தக்க.

கொள்ளை, கொலையென பல்வேறு குற்றச் செயல்களைப் புரிந்து கொண்டு கெட்டயம் சிந்தக்க சுகபோக வாழ்க்கை வாழ்ந்து வந்த சந்தர்ப்பத்தில்தான் அந்தப் பகுதிக்கு பொலிஸ் கான்ஸ்டபிள் சுனில் வந்து சேர்ந்தார்.

மாரவில பொலிஸ் நிலையத்திலிருந்து மாத்தறை வலயத்தின் குற்றத்தடுப்புப்பிரிவில் இணைந்து கொண்ட கான்ஸ்டபிள் சுனில் நேர்மையான செயற்பாட்டினைக் கொண்டவர். மாத்தறைப் பகுதியில் மூலை முடுக்கில் காணப்பட்ட குற்றச் செயல்களைப் புரியும் குற்றவாளிகளை வேட்டையாடப்புறப்பட்டார். ஹெரோயின், கஞ்சா மற்றும் சட்டவிரோத மதுபானம் போன்றவற்றை விற்பனை செய்வோரைக் கைது செய்தார். சுனிலின் நேர்மையான செயற்பாட்டினால் சிந்தக்கவுக்கு தனது சட்டவிரோத செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டன. இதனால் கெட்டயம் சிந்தக்கவுக்கும், சுனிலுக்கும் இடையில் விரிசல் தொடங்கியது. இதனால் என்றாவது ஒரு நாள் சுனிலைத் தீர்த்துக் கட்டுவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தான் சிந்தக்க.

கான்ஸ்டபிள் சுனிலைத் தீர்த்துக் கட்ட வேண்டும் என்ற முடிவுக்கு வந்த சிந்தக்க கொலைக் குற்றத்திற்காக சிறைச்சாலையில் இருந்த போது அங்கிருந்த பல பாதாள உலக குழு உறுப்பினர்களுடன் நெருங்கிப் பழகியுள்ளான். அவ்வாறு பழகியவர்களில் ஒருவன் தான் ஹக்மன மீஎல்ல பிரதேசத்தைச் சேர்ந்த கொமாண்டோ அமித். இந்த அமித் இராணுவத்திலிருந்து தப்பி வந்து குற்றச் செயல்கள் பலவற்றுடன் தொடர்பு பட்டவன்.

இந்த நிலையில் கடந்த நவம்பர் மாதம் கொமாண்டோ அமித்துக்கு தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்திய கெட்டயம் சிந்தக்க தனக்கு பெரும் பிரச்சினைக்குரிய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் இருப்பதாகவும் அவருக்கு நல்ல பாடம் புகட்ட வேண்டும் எனவும், அதற்கு உதவுமாறும் கூறியுள்ளான். எனவே கொமாண்டோ அமித் மேலும் இரு நண்பர் களையும் அழைத்துக் கொண்டு முச்சக்கர வண்டி யொன்றில் சிந்தக்கவின் வீட்டுக்கு வந்துள்ளான்.

கடந்த நவம்பர் மாதம் 16ஆம் திகதி தன் வீட்டுக்கு வந்த கொமாண்டோ அமித் அடங்கலான மூவருக்கும் சிந்தக்க மதுபானங்களைக் கொடுத்து உபசரித்து தனக்குப் பெரும் சிக்கலாக இருக்கும் சுனிலைப்பற்றிக் கூறியுள்ளான்.

கான்ஸ்டபிள் சுனில் வீட்டுக்கும் கெட்டயம் சிந்தக்கவின் வீட்டிற்கும் இடையில் சுமார் 500 மீற்றர் தூரமே இருந்தது. சுனில் தனது மனைவியுடனும் இரண்டு பிள்ளைகளுடனும் அவரது வீட்டில் வசித்து வந்தார். எனவே, கூடிக் குடித்துத் திட்டமிட்ட கெட்டயம் சிந்



தக்க அடங்கலான குழுவினர். கிராமத்து அயலவர்களின் வீடுகளின் மின் விளக்குகள் அணைக்கப்படும் வரை காத்திருந்தனர். விளக்குகள் அணைக்கப்பட்டுக் கிராமத்தவர் உறங்கச் சென்றதும் கிராமமே அமைதியாக இருந்தது.

கெட்டயம் சிந்தக்க தனது வீட்டில் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்துக் கொண்டு, மேலும் வாள் மற்றும் பொல்லுகளை கொமாண்டோ அமித்துக்கும் ஏனைய நண்பர்களுக்கும் கொடுத்தான். பின்னர் நால்வருமாக முச்சக்கர வண்டியில் ஏறி கான்ஸ்டபிள் சுனிலின் வீட்டிற்குச் சென்றனர். கதவை உடைத்துக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்த போது சுனில் விழித்துக் கொண்டார். மனைவி தனது இரண்டு வயதுக் குழந்தையைத் தூக்கிக் கொண்டாள். நான்கு வயதான மூத்த மகன் பீதியில் கட்டில் மெத்தை ஓரமாக ஒளிந்து கொண்டான்.

உள்ளே நுழைந்த நால்வருமாகச் சுனிலைச் சரமாரியாகத் தாக்கத் தொடங்கினார்கள். சுனிலும் தன்னால் முடிந்தளவு எதிர்த்துப் போராடினார். அப்போது மனைவி ஐயோ என் கணவரைக் கொல்லாதீர்கள்" எனக் கெஞ்சியுள்ளார். எனினும் அதற்குச் சிறிதும் செவிசாய்க்காது அவர்கள் சுனிலின் மனைவியையும் தாக்கினர். அவள் அப்படியே கீழே விழுந்து விட்டாள். பின்னர் தாக்குண்டு கீழே கிடந்த சுனில் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு அங்கிருந்து முச்சக்கர வண்டியில் தப்பிச் சென்றனர்.

அதன் பின்னரே, கட்டில் ஓரமாக மறைந்திருந்த சிறுவன் வெளியில் வந்து ஐயோ, அம்மாவையும் அப்பாவையும் அடித்துப் போட்டுள்ளார்கள் வந்து பாருங்கள்" என்று கூக்குரலிட்டான். இதையடுத்து அக்கம் பக்கம் உள்ளவர்கள் உடனடியாக அவ்விடத்துக்கு வந்து பார்த்த போது சுனிலும், மனைவியும் அவர்களது இரண்டு வயதுக் குழந்தையும் இரத்த வெள்ளத்தில் கிடந்துள்ளனர். உடனடியாக கிராமவாசிகள் இது குறித்து பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த பொலிஸார் மக்கள் உதவியுடன் மூவரையும் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். ஆனாலும் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் சுனிலும் மனைவியும் உயிரிழந்தனர். குழந்தை மாத்திரம் உயிர் தப்பியது.

கிடைத்த தகவல்களின் அடிப்படையில் சம்பவம் இடம்பெற்ற சில தினங்களில் சந்தேக நபர்களில் ஒருவரான கொமாண்டோ அமித் கைது செய்யப்பட்டார். பொலிஸார் அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் அவன் மறைத்து வைத்திருந்த ஆயுதங்களை மீட்பதற்காக அழைத்துச் சென்றனர். அப்போது மாஸ்முல்ல பகுதியில் வைத்து அவன் தப்பிச் செல்ல முயன்றான் எனப் பொலிஸார் கூறுகின்றனர். இதன்போது பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கொமாண்டோ அமித் உயிரிழந்தான். அதன் பின்னர் நவம்பர் 27 ஆம் திகதி சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவர் பொலிஸாரல் கைது செய்யப்பட்டனர்.

இரண்டாவதாகக் கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களையும் மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்களை மீட்பதற்காக பொலிஸார் அழைத்துச் சென்ற வேளையில் அவர்களும் தப்பியோடும் நோக்கில் ஆற்றில் குதித் போது நீரில் மூழ்கி உயிரிழந்ததாகப் பொலிஸார் சொல்கிறார்கள்.

எனவே, மாத்தறை மோசடித் தவிர்ப்புப் பிரிவு கான்ஸ்டபிள் சுனில் மற்றும் அவரது மனைவி கொலை தொடப்பான நான்கு சந்தேக நபர்களில் மூவர் கொல்லப்பட்ட நிலையில் பிரதான சந்தேக நபரான கெட்டயம் சிந்த்க்க மாத்திரமே தலைமறைவாகியிருந்தார்.

இந்தக் காலகட்டத்தில் இனந்தெரியாத சடலமொன்று ஆற்றில் மிதந்து வந்த நிலையில் மீட்கப்பட்டது. அந்தச்சடலம் பிரதான சந்தேக நபரான சிந்தக்கவினுடையதாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகப்பட்டனர். ஆனால் சிந்தக்க சாகவில்லை அவன் காட்டில் மறைந்திருக்கிறான் என மற்றுமொரு தகவல் பொலிஸாருக்குக் கிடைத்தது.

தகவலின் அடிப்படையில் பெரும் எண்ணிக்கையிலான பொலிஸ் அதிரடிப்படையினர் தைகல காட்டுப்பகுதியில் பல மணி நேரம் தேடுதல் நடத்தினர். அந்த வேளையில் பதுங்கியிருந்த கெட்டயம் சிந்தக்க பொலிஸாரை நோக்கிக் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளான். இதனால் இரு அதிரடிப்படை வீரர்கள் காயமுற்றனர். இதையடுத்து அதிரடிப்படையின் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கெட்டயம் சிந்தக்க உயிரிழந்தான். இச்சம்பவம் கடந்த டிசெம்பர் மூன்றாம் திகதி நடைபெற்றது.

எனவே, இரட்டைக் கொலைகளுடன் தொடர்புடைய நான்கு சந்தேக நபர்களுக்கும் நீதி மன்றத்தில் தண்டனை வழங்கப்படுவதற்கு முன்னரே கடவுளின் தண்டனை (பொலிஸாரின் தண்டனையென்றும் சொல்லலாம்) அவர்களுக்கு வழங்கப்பட்டு விட்டது.

மக்களை அச்சுறுத்திக் கொலை கொள்ளைகள் புரிந்து சுகபோக வாழ்க்கை வாழ்ந்து வந்த கெட்டயம் சிந்தக்க மடிந்த செய்தியறிந்து கும்றுபிட்டிய மக்கள் பட்டாசு கொளுத்தி பாற்சோறு சமைத்துக் கொண்டாடி மகிழ்ந்தனர். அவனின் சடலத்தை அடக்கம் செய்வதற்குக் கூட எவரும் செல்லவில்லை. அவனின் வீடு மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன கிராமவாசிகளால் தீக்கிரையாக்கப்பட்டன.

எனவே, மற்றவர்களுக்கு தீங்கிழைத்து அதில் சந்தோசமாக வாழலாம் என நினைப்பவர்களுக்கு இது தான் கடைசிக் கதி என்பதை இச்சம்பவம் உணர்த்துகிறது. அத்துடன் குற்றங்களைப் புரிந்து விட்டு நிரந்தரமாக மறைக்கவும் முடியாது. நிம்மதியாக வாழவும் முடியாது என்ற விடயமும் இதன் மூலம் நிரூபணமாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● ஒளண்யன்

# இருளின் கதவைத் திறந்தவன்

33



என்னதான் உலக அக்கிரமங்களை வெளிப்படுத்துவதே தன்னுடைய நோக்காகக் கொண்டு யூலியன் அலைந்தாலும் பெண்கள் விஷயத்தில் அவனது மனம் எப்போதுமே அலை பாய்ந்தபடியே இருந்தது. இந்தப் பலவீனத்தை தனக்கு சாதகமாகப் பயன் படுத்த் அமெரிக்கா தீர்மானித்தது. ஒரு மாங்காயை வீழ்த்த ஒரே நேரத்தில் இரண்டு கற்களை அமெ ரிக்கா யூலியனின் சுவீடன் விஜயத்தின் போது பலமாக வீசியது.

முதலாவது கல் - அன்னா.

இரண்டாவது கல் 26 வயதே நிரம் பிய சோபியா. சுவீடன் நாட்டு மங்கை ஊடகத்துக்கு எந்த வித சம்பந்தமுமில்லாத அவள் யூலியனின் உரையை முன் வரிசையில் உட்காந் திருந்தபடியே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது கண்களின் [illegible]தில் எடுத்த எடுப்பிலேயே யூலியன் சரிந்து விட்டான். நிகழ்ச்சிக்குப் பின் நடந்த விருந்தின் போது சோபியாவின் தொலைபேசி எண்ணை யூலியன் கேட்க அவளும் இதையே எதிர் பார்த்திருந்தது போன்று உடனேயே கொடுத்தாள். அன்றிரவு அன்னாவுக்கு அல்வா கொடுத்து விட்டுசோபியாவின் வீட்டில் யூலியனின் உல்லாசம் நிகழ்ந்தது. எல்லாம் முடிந்தாயிற்று. பாராட்டு மழையில்நனைந்தபடி யூலியன் சுவீடனில் இருந்து புறப்பட்டான். அதற்குப் [illegible]துதான் வெடித்தன அமெரிக்கா புதைத்திருந்த கன்னி வெடிகள். சுவீடனில் இருந்து வெளியேறிய கையோடு நடந்தவற்றையெல்லாம் மறந்தவனாக விக்கிலீக்ஸ் தளத்தின் அடுத்த வெளியீட்டுக்கான வேலைகளில் யூலியன் ஆழ்ந்தான். அந்தவேளையில் தான் ஒரு நாள் சுவீடன் நீதிமன்றத்தில் இருந்து யூலியனுக்கு அழைப்பாணை வந்திருந்தது. முதலில் அந்த வழக்கை யூலியன் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் சிறிது நாள்களில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்படும் உத்தரவை சுவீடன் நீதி மன்றம் விடுத்த செய்திகள் வெளிவந்த பின்னர்தான் தான் மீளமுடியாத சதிவலை ஒன்றில் சிக்கவைக்கப் பட்டிருப்பதை உணர்ந்து கொண்டான். அப்படி என்னதான் வழக்கு? ஊடகச் சுதந்திரத்துக்கு சுவீடன் எந்தளவு வசதிகளை வழங்கியுள்ளதோ அதை விடவும் பெண்ணுரிமைக்குக் கட்டற்ற சுதந்திரமும், செல்லமும் கொடுத்து வருகின்றது. அதனால்தான் கணவன் குறட்டை விடுவதாகக் குற்றம் சாட்டிக் கூட பெண்கள் விவாகரத்தை அங்கு வாங்க முடிகின்றது. அத்தோடு பெண்களின் சம்மதத் துடன் ஓர் ஆண் உறவு கொண்டாலும் கூட அவன் மீது வழக்குப்பதிவு செய்வதற்கான வழிகளும் அங்கு இருக்கின்றன. பெண்ணுக்குக் கூறமால் ஆணுறை இல்லாமல் உறவு கொண்டாலோ அல்லது வேண்டுமென்றே ஆணுறையைச் சேதப்படுத்தினாலோ அந்த ஆண் மீது பெண்கள் வழக்குத் தொடர முடியும். (சுவீடனுக்குச் செல்லும் ஆண்களே உஷார்! யூலியனுடன் உறவு கொண்ட அன்னா, சோபியா இருவரும் இத்தகைய குற்றச் சாட்டின் பேரிலேயே யூலியன் மீது சுவீடன் நீதிமன்றத்தில் வழக்கைத் தொடர்ந் தனர். இந்த இரண்டு பெண்களும் சம்பந்தப் பட்ட நிகழ்வுகள் தங்கள் சம்மதத் துடன்தான் நடந்தேறின என்பதை மறுக்கவில்லை. ஆனால் தமக்குத் தெரியாமல் வேண்டுமென்றே ஆணுறையைச் சேதமாக்கி யூலியன் உறவு கொண்டார் என்ற சிறுபிள்ளைத் தனமான குற்றச்சாட்டே இவர்க ளுடையது. வழமையாக இத்த கைய குற்றங்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை அபராதமாக விதிப்பதுடன்

நீதிமன்றம் அடங்கி விடும். முதலில் இந்த வழக்கை விசாரித்த நீதிபதி தகுந்த ஆதாரங்கள் இல்லாததால் வழக்கைத் தள்ளுபடி செய்திருந்தார். ஆனால் இதை விட்டால் யூலியனை மடக்க வேறு சந்தர்ப்பம் கிடையாது என்பதால் மேன்முறையீடு செய்யப்பட்டு அது பிடி விறாந்து என்ப[தை]யும் தாண்டியது. அமெரிக்காவின் இடைவிடாத நச்சரிப்பாலேயே இவ் விதம் நிகழ்ந்தது. ஆயினும் இந்த வழக்கே அரசியல் பின்னணி வாய்ந்தது என்ற யூலியனின் வாதத்தை மெய்ப்பிப்பது போன்று அன்னா, சோபியா இருவரைப் பற்றியும் சில திடுக்கிடும் இரகசியங்கள் அம்பலமாகின. கூடவே கொலைவெற்றியோடு அமெரிக்காவின் துரத்துதலும்யூலியனைத் தொடர்ந்தது.

(திரைகள் இன்னும் திறக்கும்)

## ஹாய்! செல்லப்பா!!

**எழுதுவது......**

என்ன செய்வதென்று தெரியாது திணறிய பரிமளம், கடைசியில் தேனுகாவிடம் சென்றாள்

அவளுக்கு "ரவுணுக்கை" ரெண்டு மூன்று மருந்துக் கடையும் வேறை கடைக்காரரும் பழக்கம். ஏதோ ஒரு நம்பிக்கையுடன் அவளையும் அழைத்துக் கொண்டு சில கடைகள் படிப்படியாக ஏறி இறங்கினர். ஏமாற்றம் தான் மிச்சம். ஒரு கடைக்காரரிடம் சென்று இரகசியமாகக் கேட்டாள். அவர் உள்ளே சென்று தனது முதலாளியிடம் கதைத்து விட்டு உதட்டைப் பிதுக்கியவாறு வெளியே வந்தார். மீண்டும் ஒரு கடைவாசல். அங்கு பணி புரியும் ஒருவரை அழைத்து இரகசியப் பேச்சு வார்த்தை. அவளது முகம் மலர்ந்த போதே தெரிந்தது காரியம் சக்ஸஸ் என்று. தனது பேஸை எடுத்து காசை எடுத்தாள். பணம் கை மாறியது. அந்த கடையில் வேலை செய்பவர் மீண்டும் உள்ளே சென்றார். வெளியே வந்து அங்கும் இங்கும் நோட்டம் விட்டார். ஏதோ ஒரு பெரிய சரையைப் பக்குவமாக, புதினத்தாளில் எடுத்து வந்தார். பொதி கை மாறியது. அப்பாடா என்று வீடு திரும்பினார். ரெண்டு மூன்று நாளைக்குப் பிள்ளையைச் சமாளிக்கலாம்.. சுடுதண்ணியைக் கொதிக்கவைக்கச் சொல்லி தான் கஸ்டப்பட்டு வாங்கி வந்த பால்மா பைக்கற்றைத் தாயிடம் கொடுத்தாள் பரிமளம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றங்களை சமாளிக்க கற்றுக் கொள்ளுங்கள்



**01. மா**ற்றம் என்பது தவிர்க்க முடியா தது என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள். அதை எதிர் நோக்குங்கள். நம்பிக்கையுடன் மாறுதலுக்கு தயார் செய்து கொள்ளுங்கள்.

02. எந்தக் கோணத்தில் , எந்த முறையில் மாற்றம் ஏற்படும் என்பதை முன்னதாக ஊகித்து உணர்ந்து அதன் மூலம் பயன் அடையுங்கள்.

03.மாற்றங்களை சமாளிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.மாற்றங்களை சமாளிக்க வேண்டும் என்றால் அது வரும் திசை மற்றும் வகை இவற்றை ஊகித்து உணர்ந்து கொள்ள வேண்டும். மாற்றம் என்பது இது வரை ஏற்படாத ஒன்று.ஆக அதை உருவகப்படுத்திக் கொண்டு உங்கள் கற்பனா சக்தியைக் கொண்டு அந்த மாற்றத்தைச் சமாளிக்க வேண்டும். துணிவாகக் கற்பனை செய்ய வேண்டும். "பயங்கர துணிச்சல் மிக்க அடாவடியான ஒரு கற்பனை வாயிலாகத்தான் விஞ்ஞானத்தின் மாபெரும் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன" என்று ஜான் தீவி கூறினார். ஆக நடக்க முடியாததைக் கற்பனை செய்யுங்கள். நடக்கவே முடியாது என்பதன் எல்லையை உங்கள் கற்பனை எட்ட வேண்டும் அதையும் தாண்டிய நிலையில் தான் எதிர்காலம் உங்களால் கண்டுபிடிக்கப்படுவதற்காகக் காத்து நிற்கிறது. என்றாலும் வெற்றிக்கான நிரூபிக்கப் பட்ட வழிமுறைகளை எந்த அளவு அழுத்தமாகக் கூறமுடியுமோ அந்த அளவு கூறவிரும்புகின்றேன். நாற் பதாண்டுகளாக நான் ஆராய்ந்து சோதனை செய்து வெற்றிக்கான நிரூபிக்கப்பட்ட வழி முறைகளைக் கண்டுபிடித்து தந்துள்ளேன். சரித்திரத்தில் இடம்பெற்ற மகத்தான மனிதர்கள் மாபெரும் வெற்றிபெறுவதற்கும், தலைவர்களாவதற் கும், பணம் , புகழ், சக்தி இவற்றைப் பெறுவதற்கும், எந்தவழியைக் கையாண்டார்களோ, அந்த வழி முறைகளை நாமும் கையாள வேண்டும். இவ்வாறான வெற்றி வழிகள் ஆயிரத்துக்கும் மேற்பட்டவை. ஒவ்வொன்றும் தனித்தனியானவை. வெற்றி பெற வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்களுக்கு அந்த வழி முறைகளை நான் கற்றுக் கொடுக்க விரும்புகின்றேன்.

இந்த விளக்கத்தை நான் ஏன் அளிக்கின் றேன் என்றால் சுருக்கமாகக் கூறப்படுவதன் காரணமாக- வெற்றிக்கான நிரூபிக்கப்பட்ட எந்த ஒரு வழி முறையையும் முக்கியத்துவம் அற்றது என்று நீங்கள் கருதி விடக் கூடாது. அதிக அளவு நீண்ட விளக்கங்கள் வாயிலாக உங்களுக்குக் கூறப்படும் வழி முறைகளை விட , சுருக்கமாகக் கூறப்படும் இந்த வழி முறையானது அதிக முக்கியத் துவமும் அதிக மதிப்பும் வாய்ந்ததாகும்.

வெற்றிபெற்ற பல ஆண்களும் பெண்களும் இந்த வழிமுறைகளைக் கையாண்டு தான் தலைவர்களாகவும் சக்திமிக்கவர் களாகவும் ஆனார்கள்.புகழும் பொருளும் சேர்த்தார்கள். ஆக இந்த வழி முறைகளின் நோக்கம் வெறும் பணம் சம்பாதிப்பது மட்டும் அல்ல. இவை வெற்றிகரமான வழி முறைகள். இந்த வழி முறைகளை நீங்கள் உங்களை வளர்த்துக் கொள்ளவும்- பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளவும்- தடைகளைத் தாண்டவும்- குறைபாடுகளை வென்றிடவும்- பயன்படுத்தித் கொள்ளலாம். விரும்புகின்ற எல்லாவற் றையும் அடைவது என்கிற உங்களது வாழ்க்கையின் மிக உயர்ந்த குறிக்கோளை எய்திட இந்த வழி முறைகளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மேலே சொன்ன சாதனைகளுடன் இந்த வழி முறைகள் உங்களை சீக்கிரம் செல்வந்தர் ஆக்கிவிடும்.

இதில் முக்கியமான அம்சம் என்னவென்றால், இதில் கூறப்பட்டுள்ள வழிமுறைகள் வெறும் பணம் பண்ணுவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டது அல்ல. அவை உங்களை முழுக்க முழுக்க வெற்றிகரமான மனிதராக உருவாக்கும். நகைச்சுவை எழுத்தாளர் ஜோஷ்பில்லிங்ஸ் என்பவர் ஒரு முறை எழுதினார் "இல்லை- முடியாது" என்று சொல்வதற்குப் பதிலாக "சரி;ஆம்" என்று உடனே சொல்லி விடுவது தான் வாழ்க்கையின் பாதி தொல்லைகளுக்குக் காரணம்" என்று. இது நகைச்சுவை என்பதை விட அறிவுரை என்பதே பொருந்தும்.

ஆக உங்களுக்கு ஒன்று தெரிந்து விட்டது. உங்களுடைய தொல்லைகளில் பாதியை எப்படி அகற்றுவது? இது பற்றி ஜோஷ் பில்லிங்க்ஸ் சொல்வது ஒன்றும் விளையாட்டு அல்ல. அவர் சொல்வதும் வெற்றிக்கான நிரூபிக்கப்பட்ட வழிமுறைகளில் ஒன்றுதான். அது இரு பகுதிகளாக வருகிறது.

01. எதற்கும் 'சரி' 'ஆம்' என்று அவசரப்பட்டுச் சொல்லிவிடாதீர்கள்.

02. 'இல்லை' 'முடியாது' என்று சொல்வதற்கு அதிக தாமதம் செய்யாதீர்கள். இவையே அந்த இரு பகுதிகள்.

இதைச் சற்று ஆழமாகக் காண்போம். மிகவும் விரைவாகச் 'ஆம்' 'சரி' என்று சொல்லிவிடுவது கணக்கற்ற தவறுகளுக்கு வழிவகுத்து விடுகிறது. (அ) முதலில் சம்பந்தப்பட்ட எல்லா விபரங்களையும் ஆராயத் தவறி விடுவது.(ஆ) மாற்று வழிகளைப் பற்றி அறிவு பூர்வமாக சிந்திக்கத் தவறிவிடுவது. (இ) இவ்வாறு சொல்வதன் இறுதி விளைவு அல்லது முடிவு எப்படி இருக்கும் என்று தொடக்கத்திலேயே கருதிப் பார்க்கத் தவறிவிடுவது.

மிகவிரைவில் 'ஆம்' 'சரி' என்று சொல்லி விடுகின்ற ஆவல்மிக்க- வேகமான இளைஞன்- தொல்லைகளில் வேகமாக சிக்கிக் கொள்கிறான். 'எல்லாரும் செய்கிறார்களே' என்கிற காரணம் அனுபவமில்லாத இளைஞர்களை எளிதில் ஆட் கொண்டு விடுகிறது. அந்த உணர்வில் இருந்து இளைஞர்கள் தப்பமுடிவதில்லை. இளைஞர்கள் மட்டுமல்ல; சிந்திக்காத- எளிதில் ஏமாறக்கூடிய - வயதானவர்களின் விஷயமும் இத்தகையது தான்.

உங்கள் முன் ஒருயோசனை வைக்கப் படுகிறது. அது பற்றிய உண்மைகளை -விவரங்களை-மாற்று வழிகளை- விளைவுகளை ஆழ்ந்து பரிசீலனை செய்யப் போதுமான நேரம் கொடுக்க வேண்டும். அப்படி நேரம் கொடுக்கவில்லை யென்றால், அது பற்றி சந்தேகப்படுவது தான் வெற்றிக்கான நிரூபிக்கப்பட்ட வழிகளில் ஒன்று.

உங்கள் முன் ஒரு பரிந்துரை வைக்கப் படுகிறது. ஆனால் அது பற்றி பரிசீலனை செய்யப் போதுமான நேரம் கொடுக்காமல் உடனடியாக 'சரி' என்று சொல்லுமாறு உங்களைக் கட்டாயப் படுத்தினால், அப்படிப்பட்ட விஷயத்தை நீங்கள் ஒரேயடியாக மறுத்துவிடலாம்.

உங்களுடைய ' உள் மனதில் ஏதோ ஒன்று சொல்கிறது' என்று கூறிப்பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டாம். உண்மையான விவரங்களின் அடிப் படையில் தர்க்க ரீதியாக ஆராய்ந்து தீர்மானிப் பதற்குப் பதிலாக-'உள்மனம்', 'பட்சி சொல்லியது' என்று கூறுவது உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்வதாகும். உணர்ச்சியை எழுப்பக்கூடிய சில வார்த்தைகளைப் பிரயோகித்து, உங்களை நன்கு தெரிந்த எந்த ஒரு தந்திரசாலியும் உங்கள் உள் மனத்தை அவனுக்கு சாதகமாக எழுப்ப முடியும்.

01.'ஆம்' என்றோ 'சரி' என்றோ உடனடியாக சொல்லிவிடாதீர்கள்.

02.'இல்லை' 'முடியாது' என்று சொல்வதை தமாதப்படுத்தாதீர்கள். இப்படிச் சொல்வதால் நீங்கள் எதையும் மறுக்கும் ஆசாமி ஆக வேண்டும் என்பது பொருள் அல்ல. விஷயம் தெரிந்தவராக நீங்கள் இருக்கவேண்டும். இது தான் அதன் பொருள்.

விவரம் தெரிந்த மனிதர் என்பதற்கு என்ன அர்த்தம்என்றால்- எந்த ஒருவிஷயத்தையும் சரி என்றோ இல்லை என்றோ சொல்வதற்கு முன்பு (அ) அது சம்பந்தப்பட்ட எல்லா விவரங்களையும்; சேகரியுங்கள். (ஆ) எல்லா மாற்றுவழிகளையும் அறிவைச் செலுத்தி ஆழமாகப் பரிசீலனை செய்யுங்கள். (இ) உங்கள் முன்பு வைக்கப்பட்டுள்ள யோசனை செயல் பட்டால் அதன் இறுதி விளைவு என்னவாக இருக்கும் என்று தர்க்க ரீதியாக அலசிப்பாருங்கள்.

விவரம் தெரிந்த மனிதராக இருப்பது வெற்றிக்கான நிரூபிக்கப்பட்ட வழிகளில் ஒன்று. அந்த அடிப்படையை நீங்கள் பரிசீலனை செய்தால் விளைவுகளைப் பற்றி கவலை கொள்ளாமல் ஒரு தீர்மானத்துக்கு வரமுடியும்.

பெரும் மனோதத்துவ நிபுணரான வில்லியம் ஜேம்ஸ் பின்வருமாறு பரிந்துரைத்தார். "ஒரு தீர்மானத்துக்கு நீங்கள் வந்து விட்டீர்கள் என்றால் பிறகு அதைச் செயல்படுத்துவது தான் இன்றைய விதி. பின்னர் அதன் விளைவுகளைப் பற்றிய கவலையெல்லாம் மூட்டை கட்டி வைத்துவிடுங்கள்"

விவரம் தெரிந்த மனிதராக நின்று நீங்கள் ஒரு தீர்மானத்துக்கு வந்த பிறகு , நீங்கள் பின்னால் திரும்பிப் பார்க்க வேண்டியதில்லை.


சுடர் ஒளி வாசகர்களே
குடத்துள் இட்ட விளக்காக
உங்களுக்குள் மறைந்து கிடக்கும்
படைப்புத் திறன்களைக் குன்றின்
மேல் தீபமாக்கிட சுடர் ஒளி
காத்திருக்கிறது.
சிறுகதை, கவிதை, கட்டுரை,
துணுக்குகள், எதுவானாலும்
அனுப்பிவையுங்கள்.
தரமானவை பிரசுரிக்கப்படும்.
படைப்புக்களை அனுப்பவேண்டிய
முகவரி: சுடர் ஒளி,
இல.361 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் உலகம்




இளவரசர்கள் இருவரும் சிரித்தபடியே கீழ்நோக்கிப் பார்ப்பதைக் கண்ணுற்ற மணிமொழியும் அத்திசை வழியே தன் பார்வையை ஓடவிட்டாள். அங்கே 'டமார்' ஒலி எழுந்த மூலைப் பக்கமாக வளையத்தோடு கூடிய கதவொன்று தென்பட்டது. அதைப் பார்க்கும்போது அது ஒரு சுரங்க வாயில் என்பது புலனாகியது.

"இனியும் தாமதிக்க முடியாது. மந்திரக் கிழவி தன் பரிவாரங்களோடு நம்மை நெருங்கிவிட்டாள். நாம் தப்பிக்க இந்த இரகசிய வழி ஒன்றுதான் கதி" என்று கூறிவிட்டு வளையத்தைப் பிடித்திழுத்தான் இந்திரவர்மன்.

மற்றைய இருவரும் எதுவும் சொல்லாது அவனைப் பின்தொடர்ந்தனர். மூவரும் உள்ளே இறங்கிய பின்னர் பழையபடியே சுரங்க வாசலை இறுக மூடினர். பின்னர் இருண்டு கிடந்த குகையினுள்ளே மெதுவாக நடக்க ஆரம்பித்தனர். அப்போது அறையின் மேற்புறத்தில் பலர் நடமாடும் காலடி ஓசை கேட்டது. அதைக் கேட்ட மாத்திரத்தில் தமது நடையின் வேகத்தை மூவரும் அதிகரித்தனர். அறையின் இருளைப் போக்க தன் இடுப்பிலிருந்த இரத்தினக் கல்லை எடுப்பதற்காக இந்திரவர்மன் முயற்சித்தபோது, அவனுக்கு தூக்கிவாரிப் போட்டது. "சந்திரவர்மா! நமது இரத்தினக் கல்லை அறையிலேயே விட்டுவிட்டு வந்துவிட்டோம்'' என்று தன்னையும் அறியாமல் கூவினான் அவன்.

*(மந்திரக் கிழவி வருவாள்...)*

# அறிந்துகொள்வோம்

- தொழிற்சாலையில் நொதித்தல் நிகழ்ச்சியில் பயன்படுவது--ஈஸ்ட்.
- தமிழகத்தில் குறைந்த மழை பெறும் மாவட்டம்--ஈரோடு.
- உலோகங்களை உருக்கி இணைக்கப் பயன்படுவது--ஆக்சிஅசிட்டிலின்.
- பட்டு நெசவில் முதலிடம் வகிக்கும் மாவட்டம்--காஞ்சிபுரம்.
- காய்களை பழங்களாக்க பயன்படுவது--எத்திலின்.
- எவர்சில்வர் தகடுகள் தயாரிக்கப்படும் இடம்--சேலம்.
- விண்வெளியில் உணவாகப் பயன்படுவது--குளோரெல்லா.
- முட்டை அதிகமாக உற்பத்தி செய்யப்படுவது--நாமக்கல்
- முடிச்சாயம் தயாரிக்கபயன்படுவது--வெள்ளிநைட்ரேட்.
- வளையாமல் நேராகச் செல்லும் நீளமான ரெயில் பாதை உள்ள நாடு--ஆஸ்திரேலியா-478 கி.மீ
- முதல் பருத்தி ஆலை தோன்றிய இடம்--சென்னை1878
- குடி நீரில் நோய் கிருமிகளை அழிக்க பயன்படுவது--குளோரின்.
- புலிகள் பதுகாப்பு மையம் உள்ள இடம் --களக்காடு
- விவாகரத்துக்கு அனுமதி இல்லத நாடு--அயர்லாந்து.
- பட்டாசு தயாரிப்பில் பயன்படுவது--பொட்டாசியம் நைட்ரேட்.
- நிலக்கரி கிடைக்கும் இடம்--நெய்வேலி
- துணியில் செய்தித்தாள் வெளியிடும் நாடு--ஸ்பெயின்.
- தீப்பெட்டி தயரிப்பில் பயன்படுவது--பொட்டாசியம் குளோரைட்.
- வெடிமருந்து தயாரிப்பு நிலையம் உள்ள இடம்--அரவங்காடு.
- ஐந்தாண்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்திய நாடு--ரஷ்யா.
- மரச்சிற்பங்கள் உருவாக்கப்படும் இடம்--அரும்பாவூர்.
- இறந்த உடலை பாதுகாக்க பயன்படுவது--பார்மால்டிகைடு.
- மிகப்பெரிய தங்கச்சந்தை உள்ள இடம்--லண்டன்.
- வேரு எந்த மொழிகளிலும் இல்லாத சிற்ப்புக்குரிய இரு தமிழ் எழுத்துக்கள்--ற,ழ.
- ஈர்ப்புவிசை மிகக்குறைவன கோள்--புதன்.
- ஒளி புகக்கூடிய உலோகம்--மைக்கா.
- இலைகலளை உதிர்ப்பது போன்று கிளைகளை உதிர்க்கும் தாவரம்--செரி.
- பச்சையம் இல்லாத தாவரம் --காளான்.
- எந்தவிலங்கின் மூளை அதிக எடை கொண்டது--யானை.
- நீரில் நீந்திக்கொண்டே உறங்கும் உயிரினம்--வாத்து.
- 50 அடிக்கு மேல் வளரும் புல் இனத் தாவரம்--மூங்கில்.
- சிலந்தி வகைகளில் அதிக விசமுள்ளது--தி பிளாக் விடோ.

## குட்டிக் கதை

முன்னொரு காலத்தில் புத்திசாலியான ஒரு மனிதன் வாழ்ந்து வந்தான். ஆனால் அவன் பரம ஏழையாக இருந்தான்.

ஒருநாள் உள்ளூர் நிலப்பிரபுகள் களவு போய்விட்டன. என்ன முயற்சி செய்தும் திருடனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. நிலப் பிரபு பெரிய பெரிய மந்திரவாதிகளையும் சூனியக்காரர்களையும் அழைத்துக் கேட்டான். எனினும் பயனில்லை. பிறகு ஏழை மனிதனை அழைத்துக் கலந்தா லோசிக்கும்படி யாரோ யோசனை தெரிவித்தார்கள்.

அவ்வாறே ஏழை வரவழைக்கப்பட்டான். திருட்டுப்போன தன்னுடைய விலை உயர்ந்த பொருள்களைக் கண்டுபிடித்துக் கூறும்படி பணக்காரன் சொன்னான். திருடனைக் கண்டுபிடிப்பதில் சிரமம் ஏதுமில்லை. ஆனால் இதற்குத் தனக்கு என்ன பரிசாகக் கிடைக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளஏழை மனிதன்விரும்பினான்.

உனக்கு ஒரு குதிரை மந்தையைத் தருகிறேன்" என்றான் நிலப்பிரபு.

நல்லது. மங்கோலியக் கான் உங்களுக்குப் பரிசளித்த சேவலைக் கொண்டு வரும்படி உங்கள் வேலைக்காரர்களுக்குக் கூறுங்கள்" என்றான் ஏழை.

அவ்விதமே நிலப்பிரபு சேவலை கொண்டுவரும்படி கட்டளையிட்டான். ஏழை மனிதன் மற்றவர்களுக்குத் தெரியாமல் சேவலின் தலையிலும் கழுத்திலும் புகைக் கரியைத் தடவி விட்டான்; பிறகு சேவலை ஒரு காலியான, இருள் கவிந்த கூடாரத்தில் வைத்தான்.

இப்போது ஒவ்வொருவராகக் கூடாரத்திற்குள் செல்லுங்கள். சேவலின் தலையைத் தட்டிக் கொடுங்கள். இது ஒரு சாதாரண சேவலல்ல, மங்கோலிய மந்திரச் சேவல் என்பதை மறந்துவிடாதீர்கள். திருடன் தொட்ட உடனேயே அது கூவ ஆரம்பிக்கும். சரி, இப்போது நீங்கள் உள்ளே சென்று சேவலின் தலையில் உங்கள் இடது கைகளால் தட்டிவிட்டு வாருங்கள்'' என்று ஏழை மனிதன் நிலப்பிரபுவின் வேலைக்காரர்களிடம் கூறினான்.

வேலைக்காரர்கள் பயத்தோடு ஒருவர் பின் ஒருவராகக் கூடாரத்துக்குள் நுழைந்தனர். நிலப்பிரபு காதைக் கூர்மையாக்கிக் கொண்டு சேவல் கூவுகிறதா என்று உற்றுக் கேட்டான். எல்லா வேலைக்காரர்களுமே கூடாரத்துக்குள் சென்றுவிட்டு வெளியே வந்தனர். ஆனால் சேவல் ஒருமுறைகூடக் கூவவில்லை.

என்னை ஏமாற்றப் பார்க்கிறாயா, பயலே?" என்று நிலப்பிரபு கோபத் தோடு கத்தினான்.

சற்றுப் பொறுங்கள். இன்னும் எல்லாம் முடிந்துவிடவில்லை..." என்றான் ஏழை. பிறகு வேலைக்காரர்களைப் பார்த்து அவன் இவ்வாறு கூறினான்:

எங்கே இப்போது உங்கள் இடது கைகளை எல்லாம் தூக்கிக் காண்பியுங்கள்..."

அனைவரும் கைகளை உயர்த்தினர். ஒருவனது உள்ளங்கை மட்டும் மிகவும் சுத்தமாக இருந்தது. அவன்தான் நிலப்பிரபுவின் தலைமை வேலைக் காரன். மற்றவர்களின் கைகளிலெல்லாம் கரி படிந்திருந்தது.

நீதான்திருடன்!" என்று ஏழை கூச்சலிட்டான்.

நிலப்பிரபு அந்த வேலைக்காரனைத் தக்கபடி தண்டிக்கும்படி உத்தர விட்டான்; பின்னர் தான் வாக்க ளித்தபடி ஏழைக்கு ஒரு மந்தைக் குதிரைகளை அளித்தான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆம் ஆத்மி: வென்றது எப்படி?

ஜெயக்குமார்

ஆம் ஆத்மி கட்சியின் வரவால் டில்லி தேர்தல் முன்னெப்போதும் இல்லாத வகையில் மிகப் பெரிய அதிர்வை இந்தியாவில் ஏற்படுத்தியுள்ளது. அதுவும் வெறும் ஒரு வருடத்துக்கு முன் உருவாக்கப்பட்ட ஒரு கட்சி, நேர்மையான முறையில் மக்களிடமிருந்து நன்கொடை பெற்று, ஓட்டு வங்கி அரசியலை பின்பற்றாமல், ஊழல் ஒழிப்பு, அதிகாரப் பரவலாக்கல், நேர்மையான ஆட்சி ஆகிய கொள்கைகளை முன்னிறுத்தி தேர்தலைச் சந்தித்து இவ்வளவு வாக்காளர்களின் ஆதரவை பெற்றிருப்பது தேசத்தையே திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது. அரசியல் தரம் வெகு வேகமாக சரிவடைந்து கொண்டிருக்கும் இந்தச்சமயத்தில் நேர்மையான அரசியல் இயக்கங்களுக்கு இது புத்துணர்வை பாய்ச்சியுள்ளது. ஆம் ஆத்மி கட்சியின் இந்த வளர்ச்சியின் பின்னணியில் உள்ள சில முக்கிய காரணிகளை கூர்மையாக அவதானிப்பது அரசியல் ஆய்வாளர்களுக்கு இன்றியமையாததாகிறது.

ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் இரண்டாவது ஆட்சியின் தொடக்கத்தில் வெளியான ஏராளமான ஊழல் குற்றச்சாட்டுகள் நடுத்தட்டு மக்களின் மத்தியில் பெரிய அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தன. 2011ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அன்னா ஹசாரே தலைமையில் ஊழலை ஒழிப்பதற்காக தன்னாட்சி அதிகாரம் கொண்ட ஜன் லோக்பால் அமைப்பை உருவாக்கக் கோரி நடைபெற்ற போராட்டத்துக்கு மிகப்பெரிய ஆதரவு மக்களிடையே கிடைத்தது. ஆனால் மத்திய அரசு முற்றிலும் தன்னாட்சி அதிகாரம் கொண்ட ஜன் லோக்பால் அமைப்பை உருவாக்கும் சட்டத்தை இயற்ற முழு மனதுடன் உழைக்கவில்லை. மத்திய அரசு கொண்டு வந்த நீர்த்துப் போன லோக்பால் மசோதாவும் மேலவையில் தோற்கடிக்கப்பட்டது. போராட்டத்துக்கான பயன் கிட்டாததன் பின்னணியில் மக்களிடையேயான ஆர்வம் குறையத் தொடங்கியது. போராட்டக் குழுவில் முக்கிய பங்காற்றிய அரவிந்த் கெஜ்ரிவால், அரசியலில் இறங்கி தேர்தலில் போட்டியிடுவதன் மூலமே ஊழல் ஒழிப்பு இயக்கத்தை அடுத்த கட்டத்துக்கு எடுத்து செல்ல முடியும் என்ற கருத்துடன் புதிய அரசியல் கட்சி தொடங்குவதாக அறிவித்தார். ஆனால் அன்னா ஹசாரே, தமக்கு அரசியலில் நுழைவதில் விருப்பம் இல்லையென்றும், கெஜ்ரிவாலின் பாதை வேறு, தமது பாதை வேறு என்றும் அறிவித்தார். முன்னாள் ஐ.பி.எஸ் அதிகாரி கிரண்பேடி உட்பட பலர் அன்னா ஹசாரேயின் பின் நின்றனர். மனிஷ் சிசோதியா, பிரஷாந்த் பூஷன், யோகேந்திரா யாதவ் போன்றவர்கள் அரவிந்த் கெஜ்ரிவாலுடன் சேர்ந்து 2012 ஒக்ரோபர் மாதம் ஆம் ஆத்மி கட்சியைத் தொடங்கினார்கள்.

புதிய கட்சிக்கு ஆம் ஆத்மி கட்சி (சாதாரண மனிதனின் கட்சி) என்று பெயரிடப்பட்டமை, துடைப்பம் (விளக்குமாறு) சின்னத்தை தேர்வு செய்தமை, நான் சாதாரண மனிதன் என எழுதப்பட்ட வெள்ளை நிற காந்தி குல்லாவை எல்லா உறுப்பினர்களும் அணிந்து கொள்ளச் செய்தமை என மிக நுணுக்கமான முறையில் கட்சியின் அடையாளத்தை கட்சி உறுப்பினர்கள் மத்தியிலும், பொதுமக்கள் மத்தியிலும் உறுதி செய்தனர் கெஜ்ரிவால் குழுவினர்.

சமூக வலைத்தளங்களைத் திறன்பட பயன்படுத்தியதன் மூலம் இணையத்தை பயன்படுத்தும் இந்தியர்கள் மத்தியிலும் ஆம் ஆத்மி கட்சி பரவலாக எடுத்துச் செல்லப்பட்டது. இது பல வகையில் ஆம் ஆத்மி கட்சியின் தொடர்ந்த வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியது. கட்சி அறிவிக்கப்பட்ட தொடக்கத்தில் ராபர்ட் வதேரா, நிதின் காட்கரி மற்றும் சல்மான் குர்ஷித் ஆகியோர் மீது ஆதாரப்பூர்வமான ஊழல் குற்றச்சாட்டுக்களை ஆம் ஆத்மி கட்சியினர் முன் வைத்த பொழுது ஊடகத்தில் மிக அதிகமான கவனம் பெற்றனர். அதனைத் தொடர்ந்து அம்பானி சகோதரர்கள் மீது கறுப்புப் பண குற்றச்சாட்டுக்களை அவர்கள் வைத்தனர். இதனால் பலமிக்க அம்பானி சகோதரர்கள் கொடுத்த அழுத்தத்தினால் ஊடகத்துறையினர் ஆம் ஆத்மி கட்சிக்கு கவனம் தருவதை நிறுத்தினர். வேறொரு கட்சியாக இருந்திருந்தால் ஊடகங்களின் துணையின்றி மெல்ல மெல்ல வலுவிழந்திருக்கும். ஆனால் ஆம் ஆத்மி கட்சியினர் சமூக வலைத்தளங்களில் பிரபலமாக இருந்ததால், ஊடகங்களின் துணையின்றியும் பலரிடம் செல்ல முடிந்தது. இது அவர்களது உறுப்பினர்கள், செயல் வீரர்கள் மற்றும் ஆதரவாளர்களின் எண்ணிக்கையை உயர்த்த உதவியது. இவர்கள் அனைவரும் களத்தில் இறங்கிப் பணியாற்றத் தொடங்கினார்கள். மின்சார கட்டண உயர்வு மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்களை எதிர்த்து அவர்கள் நடத்திய போராட்டங்கள் ஆம் ஆத்மி கட்சியை எல்லா மக்களிடமும் எடுத்துச் சென்றது.

இணையத்தையும் குறிப்பாக சமூக வலைத்தளங்களையும் சிறப்பாக பயன்படுத்தியதன் மூலம் தேர்தல் நிதியை நேர்மையாக மக்களிடமிருந்து வசூலித்தார்கள். தேர்தல் நிதிக்கான அவர்களின் இலக்கான 20 கோடி ரூபாயை தேர்தலுக்கு ஒரு மாதத்துக்கு முன்னரே எட்டி விட்டனர். இலக்கை அடைந்தவுடன் இதற்கு மேல் நன் கொடை தேவையில்லை என்ற அறிவிப்பும், வெளிப்படையாக எல்லா நன்கொடையாளர்களின் பட்டியலை வெளியிட்டதும் ஆம் ஆத்மி கட்சியினரின் நேர்மை மற்றும் கொள்கை



குறித்த பலரது நம்பிக்கையை அதிகப்படுத்தியது.

தொடக்கத்தில் ஆம் ஆத்மி கட்சியினரை பெரிய சவாலாக கருதாத காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. அவர்களின் அபரிமித வளர்ச்சியை கண்டபின் நேரடியாக இல்லாவிட்டாலும் மறைமுகமாக ஆம் ஆத்மி கட்சியை தாக்கத் தொடங்கினார்கள். ஆம் ஆத்மி கட்சியினரின் நிதி ஆதாரத்தின் மீது உள்துறை அமைச்சகம் விசாரணை தொடங்கியது. அரவிந்த் கெஜ்ரிவால் ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் நிதியைத் தவறாக பயன்படுத்தினார் என அன்னா ஹசாரே குறை சொல்வதைப் போன்ற பழைய ஒளிப்படம் வெளியிடப்பட்டது. ஆம் ஆத்மி கட்சி வேட்பாளர்கள் கறுப்புப் பணத்தை நன்கொடையாக பெறத் தயாராக இருப்பது போன்ற வலிந்த ஒளிப்படங்கள் வெளியிடப்பட்டன. ஆனால் இது போன்ற அழுக்கை வாரி வீசும் செயல்களை எல்லாம் ஆம் ஆத்மி கட்சியினர் தமது வெளிப்படையான செயற்பாட்டால் எதிர்கொண்டனர். நேர்மையான அரசியல் இயக்கங்கள் எப்படிப்பட்ட மூன்றாம் தரத் தாக்குதல்களை சந்திக்க வேண்டியிருக்கும் என்பதற்கும் அவற்றை எப்படி எதிர்கொள்வது என்பதற்கும் இவை ஒரு முன் மாதிரி.

ஆட்சிக்கு வந்தால் தமது செயற்திட்டம் என்ன என்பதை ஆழமாக ஆராய்ந்து எழுதப்பட்ட தேர்தல் அறிக்கையினை வெளியிட்டனர். டில்லியில் மாநிலத்துக்கான பொதுவான அறிக்கை மட்டுமின்றி ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு தேர்தல் அறிக்கையென மொத்தம் 71 தேர்தல் அறிக்கைகளை அவர்கள் வெளியிட்டனர். தொகுதிக்கான தேர்தல் அறிக்கையில் உள்ளூர்ப் பிரச்சனைகளுக்கான தீர்வுகள் முன்வைக்கப்பட்டன. பொது அறிக்கையில் வலுவான டில்லி ஜன் லோக்பால் அமைப்பு, மொஹல்லா (தொகுதி) அளவிலான மக்கள் சபைக்கு அதிகாரப் பரவலாக்கம், அரசு வழங்கும் பள்ளிக் கல்வி மற்றும் சுகாதாரத்தின் தரம் உயர்த்தப்படுதல், எல்லா வீடுகளுக்கும் குடிநீர், எல்லா வீடுகளுக்கும் கழிவு நீர் வடிகால்வாய் இணைப்பு, கழிவு நீர் சுத்திகரிப்பு வசதி போன்ற மிக முக்கியமான பிரச்சினைகள் இடம் பெற்றிருந்தன. மின்சாரக் கட்டணத்தை 50% குறைப்போம் போன்ற அறிவிப்புகள் விவாதத்திற்கும், சவாலுக்கும் உரியவை என்றாலும் ஆம் ஆத்மி கட்சியின் தேர்தல்அறிக்கையின் பெரும்பகுதி மக்கள் பிரச்சினைகள் சார்ந்து இருந்தது வரவேற்பைப் பெற்றது.

அரசியல் பின்புலமற்ற ஒரு குழு ஒரு வருடத்துக்குள் ஒரு கட்சியை தொடங்கி, கட்சியின் கட்டமைப்பை நிர்மாணித்து, ஒரு மாநிலத் தேர்தலைச் சந்தித்து இவ்வளவு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பது இந்திய வரலாறு இதுவரை காணாதது. இது ஆம் ஆத்மி கட்சியைப் பற்றி சொல்வதை விட, நேர்மையான மாற்று அரசியலுக்கு மக்கள் எவ்வளவு ஏங்கி போயிருக்கிறார்கள் என்பதையே காட்டுகிறது. இந்த வெற்றியை ஒரு தேசிய இயக்கமாக எல்லா நேர்மையான அரசியல் சக்திகளும் ஒருங்கிணைந்து எடுத்துச் செல்ல வேண்டும். அப்போதுதான் உண்மையான கலப்படமற்ற அரசியலின் தூய ஒளியை மக்கள் தரிசிக்க முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்பலமானது கடத்தல் நாடகம்

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பயம், கவலை என்பனவெல்லாம் அமுதனின் தந்தையிடம் இருக்க வில்லை. அவர் வழமையைப் போலவே நிதானமாகவே இருந் தார். எந்தவொரு அசம்பாவிதமும் நிகழ்ந்தமைக்கான அறிகுறி அவரி டம் இருக்கவில்லை. ஏற்கனவே மனப்பாடம் செய்து வைத்ததை போன்று தனது மகன் கடத்தப் பட்ட சம்பவத்தை மிகத் தெளி வாக விளக்கிக் கொண்டிருந்தார். ஒரு இடத்தில் கூட அவரது குர லில் மகன் காணாமல் போன கவலை தென்படவே இல்லை. இது பொலி ஸாருக்கு பெரிய சந்தேகத்தை ஏற் படுத்தியது.

அடுத்து சந்தேகம் வருவதற்கு பிரதான காரணம் அமுதன் அனுப் பிய எஸ்.எம். எஸ். தான். ஏனெ னில் துப்பாக்கி முனை யில் கடத் தப்படும் ஒருவர் இவ்வளவு தெளி வாகவும் விரை வாகவும் குறுஞ் செய்தியை பதிவு செய்து அனுப்ப முடியாது. அதுவும் இவ்வளவு கஷ்டப்பட்டு ஒரு வரைக் கடத்தி விட்டு அவரிடம் தங்களுடைய கைபேசியைக் கொடுத்து வீட் டுக்கு தகவல் கொடுக்கச் சொல்லு மளவுக்கு எந்தவொரு முட்டாளும் இருக்க முடியாது. அதன் பின்ன ரும் தொலைபேசியைக் கொடுத்து பொலிஸோடும் கதைக்க விடுபவர் கள் கடத்தல்செய்வதற்கு மட்டு மல்ல கச்சான் விற்பதற்குக் கூட லாயக்கற்றவர்கள். தன் ஊரவர் களையும், பொலிஸாரையும், ஊட கங்களையும், மனித உரிமைகள் ஆணைக்குழுவையும் முட்டாள் களாக்கி விட்டு யாருக்கும் தெரி யாமல் வெளிநாட்டுக்குச் செல் வதே அமுதனின் திட்டம். திட் டத்தை சரிவர போட்ட அமுதன் பதற்றத்தில் அதைச் செயற்படுத் தும் போது மற்றவர்களுக்கும் மூளை இருக்கிறது என்பதை மறந்து விட்டார்.

ஆனால் அவர் திட்டத்தில் இருந்த ஓட்டைகளும், வீட்டில் இருந்தவர்களின் செயற்பாடுகளும் அவரை இலகுவாகவே நாடக மாடுகிறார் என்று வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டன. பொலி ஸார் தமக்குக் கிடைத்த தகவல் களின் அடிப்படையில் அமுதன் பதுங்கியிருந்த இடத்தை நெருங் கியிருந்தார்கள். அமுதனுக் கும் தான் பிடிபடப் போகிறோம் என்பது தெரிந்து விட்டது. உட னேயே பிடிபடுவதை விடவும் சரணடைவது புத்திசாலித்தனம் என்றெண்ணி அதனையே செயற் படுத்திவிட்டார். முள்ளியவளைப் பொலிஸில் அவர் தானாகவே சென்று சரணடைந்து, “ நான் கடத்தப்பட வில்லை. கடத்தப்பட்டதாக ஒரு நாடகமே ஆடினேன்” என்று உண்மையை ஒத்துக் கொண்டார்.

## ஒருவரின் தவறு; இனத்துக்கு இழுக்கு

கிட்டத்தட்ட நான்கு நாள்கள் நீடித்த இந்தக் கடத்தல் நாடகம் முடிவுக்கு வந்த போதும் இதன் மூலம் சில சிக்கல்கள் ஒட்டு மொத்த தமிழ்ச் சமூகத்திற்கும் ஏற்படவே செய்துள்ளன. ஏனெனில் இது நாள் வரையும்

கடத்தல்கள் காணாமல் போதல் என்பனவெல்லாம் நிகழ்ந்த போது அது படையினராலேயே மேற் கொள்ளப்பட்டதென்றும் அனை வரும் குற்றம் சாட்டினர். உண்மை யும் அதுதான். ஆனால் அப்போ தெல்லாம் இந்தக் கடத்தல் களுக் கும் தங்களுக்கும் எந்த சம்பந்த மும் இல்லையென்று நாக்கூசாமல் இராணுவமும் அரசும் சாதித்து வந் தன. சீருடையணிந்தவர்களே தங் கள் பிள்ளைகளைக் கவர்ந்து போனார் கள் என்று கண்ணீரோடு தாய் மார் இன்னும் சொல்கிறார்கள். இந்தக் கண்ணீரையும், உண்மை யையும் அர்த்தமற்றதாக்க அமுத னின் கடத்தல் நாடகத்தை இனி வரும் காலங்களில் படைத்தரப் பும் பயன்படுத்தக் கூடும். உண் மையிலேயே சீருடையினர் தங் கள் பிள்ளைகள் கடத்தப்பட்டதை பெற்றோர் முறையிடச் செல்லும் போதோ அல்லது அந்தக் கடத் தல் குறித்து ஊடகங்களோ, சர்வதேசமோ கேள்வியெழுப்பும் போதோ “அவர்கள் தமிழமுத னைப் போல வெளிநாட்டு குடியு ரிமை பெறுவதற்காகவே இப்படி கடத்தல் நாடகம் ஆடுகிறார்கள்.” என்று உண்மையின் கண்ணீரை அதிகாரம் காலில் போட்டு நசுக் கக் கூடும். ஒரு இளைஞர் தன்னு டைய சுயநலத்துக்காக ஆடிய நாடகம் ஒரு இனம் வருடக் கணக்காக சுமந்து கொண்டிருந்த கண்ணீரை அர்த்தமற்றதாக்கி விட் டது.

## சொற்சிலம்பம் போட்டி இல. 602

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | | ■ | | | ■ | |
| | ■ | | ■ | 10 | | 11 | ■ |
| ■ | 12 | | 13 | | ■ | 14 | 15 |
| 16 | | ■ | | ■ | 17 | | |
| 18 | | | ■ | 19 | | ■ | |
| 20 | | ■ | 21 | | | | |

**மேலிருந்து கீழ்**

1. விருந்துகளில் படைப்பர்.
2. பத்து என்பதைக் குறிக்கும்.
3. நில விரிப்பு.
4. பரந்த.
5. ஒரு திசையின் சுருக்கம்.
6. பூட்டான் தலைநகரம்.
8. நூறு செய்யுள் கொண்ட ஒரு பிரபந்தம்.
11. ஒரு தமிழ் மாதம்.
12. பெரியது அல்ல.
13. சந்திரன்.
15. ஒரு கோள்.
16. முன்னிலையில்.
17. நஞ்சு.
19. தாண்டு.

**இடமிருந்து வலம்**

1. சாதனம் அல்ல.
4. பதற்றம்.
7. பிச்சை.
8. ஒரு யோகம்.
10. பசுவை இப்படியும் அழைப்பர்.
12. அரி.
14. தூக்கிச் செல்பவன்.
16. பட்டயம்.
17. ஒரு கண்டம்.
18. கெண்டை மீன்.
19. சேர்.
20. எலும்பு.
21. இது திரண்டால் மிடுக்கு

அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### சொற்சிலம்பம் போட்டி இல. 602

**சொற்சிலம்பம் போட்டி 602 ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2014 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரங்கள் முறையே 2014 ஆம் ஆண்டு ஜனவரி 22ஆம் மற்றும் ஜனவரி 29ம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.**

**முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.**

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### சொற்சிலம்பம் போட்டி இல. 600க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.ஐந்தொகை, 2.பகுப்பு,3.தும்பு, 4.கால்கட்டு, 5.திருடு,8.குப்பம், 10. படை, 12.அறம், 13.குளம்பு,14.உடும்பு, 15.சந்தி, 16. பதம்,17.பல,19.பால்,

**இடமிருந்து வலம்**

1.ஐம்பது, 4.காந்தி, 6.கும்பல், 7.தொகுப்பு, 9.கபடு, 11.கைப்பு, 12. அட்டை, 13.குறடு, 15.சம்பளம், 17.படு, 18.தம், 19.பாலம், 20.திரும்புதல்,

### போட்டி இல. 599இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1ஆம் பரிசு | முருக- நடராசன், 1ம் வட்டாரம்,கைவேலி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. |
| 2ஆம் பரிசு | எஸ்.கிர்சோத், இல: 29/1,வெல்ஹேன, 2ஆம் அவெனியு, வெலிசறை, ராகமை. |
| 3ஆம் பரிசு | பி.ஆன்தர்சியா, செபஸ்தியார் வீதி,சில்லாலை, பண்டத்தரிப்பு. |

### பாராட்டுப் பெறுவோர்

(1) கோ.பிறேமாவதி,
பாக்கியம் மருந்தகம், பிரதான வீதி,
ஊர்காவற்றுறை.

(2) த.கிரிதரன்,
இல;43,கலைவாணி வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.

(3) கா. சுகிர்தமணி,
விபுலாநந்தர் வீதி, வாழைச்சேனை.

(4) உசனார் ஷல்மா,
இல; 233/ஏ, பாடசாலை வீதி,
பிறைந்துரைச்சேனை, மட்டக்களப்பு.

(5) எஸ்.யோகராஜ்,
மத்திய மருந்தகம்,களுதாவளை.

(6) எஸ். செல்வநாயகம்,
இல;344, சித்திரகூடம், களுவாஞ்கிக்குடி.

(7) எஸ்.பீ. நாதன்,
1ஆம் டிவிசன், டெமேரியா குறுப், பசறை.

(8) வே.சரஸ்வதி,
அம்பன், குடத்தனை.

(9) ச. நவரத்தினம்,
இல7 1/19, காலி வீதி, வெள்ளவத்தை.

(10) எஸ்.ஜீவா,
இல: 15/4,கல்லூரி ஒழுங்கை,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

> விஸ்வநாதனின் இந்த நிலைக்குக் காரணம் அவனது மனைவி தான் என ஊர்ச்சமூகம் கூறியது. அத்துடன் விஸ்வநாதனின் தாயும் "என் மகனின் இந்நிலைக்குக் காரணம் என் மருமகள் தான்" என வீதியில் நின்று கத்தினாள். இதனால் பெரிதும் மனம் உடைந்தாள் அவனது மனைவி. அவளுக்கு வாழ்க்கை வெறுத்தது. இந்த நிலையில் விஸ்வநாதனின் தங்கை தமையனைக் இந்தியாவில் உள்ள மருத்துவமனைக்கு கூட்டிக் கொண்டு சென்றாள்.

சிறுகதை

# இலட்சிய விழிகள்

அதிகாலையில் கோவில் மணி கேட்கும் சத்தம் கேட்டு எழுந்தான் காசி. எழுந்தவன் உடனே நேரத்தை அறிய விரும்பியவனாய் தனது கைக்கடிகாரத்தை எடுத்துப் பார்த்தான். நேரமே அதிகாலை நாலரை மணியைக் காட்டியது. ஒரு குவளை தண்ணீர் குடித்துவிட்டு தெரு விளக்கினை அணைக்கச் சென்றான். அவன் திரும்பி வருவதற்குள் வீட்டிலுள்ளவர்களும் விழித்துக் கொண்டார்கள். தனது கடைமைகளை முடித்து விட்டு தாயை வணங்கிக் கொண்டு சாமி அறைக்குச் சென்று இறைவனைத் தொழுது விட்டு புத்தகத்தை எடுத்து படித்தான் காசி. "காசி" இவன் குடும்பத்தில் மூத்த பிள்ளை. இவனுக்கு ஒரு தம்பியும் இரு தங்கைகளும் உள்ள ஒரு சிறிய குடும்பமாக இருந்தனர். இவர்களது அப்பாவோ வாகனச்சாரதியாக வேலை பார்ப்பவர். இவன் குடிகாரன். ஒரு நாளை உழைப்பில் அரைப்பங்கிற்கு மேல் குடித்து விட்டே மீதியை வீட்டில் கொண்டு வந்து கொடுப்பார். சில வேளைகளில் அதுவும் கிடையாது.

அவன் குடித்து விட்டு வாகனம் செலுத்தியதில் ஒரு நாள் வாகனத்தை பெரிய குழிக்குள் விழுத்தி வாகனத்தை பெரும் சேதப்படுத்தினான். இதனால் உரிமையாளர் அவனுக்கு வேலை தர மறுத்தான். அவன் குடும்பம் பட்டினியால் வாடியது. அவனுக்கு வேலை கொடுக்க முதலாளிமார் யாருமே முன்வரவில்லை. சிறிது நாட்களின் பின் ஒரு கூலி வேலை கிடைத்தது. ஆனால் அவனோ அதில் வருகின்ற வருமானத்தையும் குடித்துக் குடித்து அழித்தான். கடைசியில் வீட்டிலுள்ள நகைகள் ஒவ்வொன்றாகப் விற்றுக் குடிக்கத் தொடங்கினான்.

இவனது இவ்வாறான நிலைக்குக் காரணம் அவனது நண்பர்கள் தான். இவர்களது கூட்டம் சேர்ந்தால் வெறியாட்டம் போடாமல் கலையாது என்னுமளவுக்கு குடிகாரக் கூட்டம். இவர்களது கூட்டம் சமூகத்தில் பல பிரச்சினைகளையும் தேடிய பெருமைக்குரிய கூட்டம். குடியை மட்டுமல்ல பல போதை வஸ்துக்களையும் பயன்படுத்தி வந்தது. இவை எல்லாவற்றுக்கும் விஸ்வநாதனும் அடிமையானார். காலப் போக்கில் இதிலிருந்து மீள முடியாத நிலைக்கு ஆளானார் விஸ்வநாதன். வீட்டில் மனைவி பிள்ளைகளுக்கு தினமும் அடி, உதை. அவருக்கு காசியைப் பிடிக்காது காசிக்கும் அவனைப் பிடிக்காது. அடிக்கடி அவனுக்கு அடிப்பதாலேயேயும் விஸ்வநாதனின் போதைவஸ்துப் பழக்கத்தினாலுமே விஸ்வநாதனை காசிக்குப் பிடிக்க முடியாமல் போனது. எனினும் இத்திய பழக்க வழக்கங்களினால் காலப்போக்கில் விஸ்வநாதன் மனநோயாளியானார்.

விஸ்வநாதனின் இந்த நிலைக்குக் காரணம் அவனது மனைவி தான் என ஊர்ச்சமூகம் கூறியது. அத்துடன் விஸ்வநாதனின் தாயும் "என் மகனின் இந்நிலைக்குக் காரணம் என் மருமகள் தான்" என வீதியில் நின்று கத்தினாள். இதனால் பெரிதும் மனம் உடைந்தாள் அவனது மனைவி . அவளுக்கு வாழ்க்கை வெறுத்தது. இந்த நிலையில் விஸ்வநாதனின் தங்கை தமையனைக் இந்தியாவில் உள்ள மருத்துவமனைக்கு கூட்டிக் கொண்டு சென்றாள். அப்போது விஸ்வநாதனின் மனைவியைப் பார்த்து "எங்க அண்ணன் வாழ்க்கையை நாசமாக்கிட்டாய்.இது மாதிரி உன் பிள்ளைகளையும் நாசமாக்குவாய்" என்று திட்டிவிட்டுச் சென்றாள். அமைதியான சுபாவம் கொண்ட அவள் அனைவரது கதைகளையும் கேட்டு மனம் உடைந்து போனாள். ஆனாலும் கோழைப்பெண் போல விபரீத முடிவை எடுக்காமல் அவர்கள் கூறியதற்கு மாறாக தன் பிள்ளைகளை தான் முன்னேற்ற வேண்டும் என்று மன உறுதி கொண்டவளாக விழித்துக் கொண்டாள்.

அன்றிலிருந்து அவள் ஒளி மயமிக்க எதிர் காலத்தை நோக்கிப் பயணிக்கத் தொடங்கினாள். ஆனால் அவளின் முன்னேற்றத்திற்கோ பணம் பெரும் முட்டுக் கட்டையாக இருந்தது. அது கிடைப்பதற்கான வழி இல்லாது தவித்தாள். இந்நிலையில் அவளுடைய நண்பி ஒருத்தி சுய வேலைக் கடன்திட்டத்தில் பணம் பெற்றுக் கொடுத்தாள். அதனைக் கொண்டு சுய வேலைகளினைச் செய்து குடும்பத்தினைக் காப்பாற்றினாள். அப்போது காசிக்கு பத்து வயது. அம்மாவின் முன்னேற்றமான ஊக்கத்தினாலும் தனது இலட்சியத்திற்காகவும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தான். அன்றிலிருந்து தனது தாயின் கனவை நிறைவேற்றுவதற்காக ஒரு இலட்சியப் பாதையில் நடக்க ஆரம்பித்தான். அவனுடைய சகோதரர்களும் இவன் வழி பின் தொடர்ந்தார்கள்.

தொடர்ந்து கல்வி கற்று வரும் சூழ்நிலையில் அவன் பல்கலைக் கழகத்துக்கு தெரிவானான். இன்று இவன் ஒரு பல்கலைக்கழக மூன்றாம் வருட மாணவன். விழிகளில் இலட்சியத்தைக் கொண்டவன் ஒழுக்கமாகவும் ,அமைதியா னவனாகவும் இருப்பதாக ஊரவர்கள் கூறியதைக் கேட்ட தாய் அளப்பிலா ஆனந்தம் கொண்டாள். தாயானாவள் பிள்ளையைப் பேறும் போது உள்ள சந்தோசத்தை விட அவனை ஒரு பெரிய மனிதராக்கிப் பார்க்கும் போது ஏற்படும் மகிழ்வே உலகத்திலேயே பெரிய மகிழ்வாகும் என்பதனையே வள்ளுவன் " ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை சான் றோன் எனக் கேட்ட தாய்" எனக் கூறினான். அந்நிலையிலேயே தான் காசியின் தாய் தன் மகனைக் காண்கின்றாள்.

அவர்களது வாழ்வு நன்முறையில் சென்றுகொண்டிருக்கும் போது தாய்க்கு திடீரென நெஞ்சுநோ என ஆஸ்பத்திரியில் காட்டிய போது எக்ஸ்றே படம் எடுத்துப் பார்த்தனர். அப்போது அவளுக்கு புற்று நோய் ஏற்பட்டிருப்பதற்கான அறிகுறி இருந்தது. இனி மேல் கவனமாக இருக்க வேண்டும் வைத்தியர் கூறினார். இச்செய்தியைக் கேட்ட காசி அதிர்ந்து போனான். இந்த விடயத்தை தன் தாயிடம் தெரிவிக்க வேண்டாம் அவள் மிகவும் வேதனையில் துடித்து விடுவாள் என்று மருத்துவரிடம் கெஞ்சிக் கேட்டான். அது போல தானும் தாயிடம் கூறாமல் விட்டு விட்டான். ஆனால் தாயை மிகவும் அன்போடு , மிகுந்த கவனத்தோடும் பராமரித்து வந்தான். எதிர்காலத்தில் ஒரு வைத்தியராக வந்து தானே தனத தாய்க்கு மருத்துவம் செய்ய வேண் டும் என மனதுக்குள் எண்ணி யவனாக தொடர்ந்தும் ஊக்கத்தோடு கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றான் காசி.



குணசேகரம் சுரேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகைச்சுவை நாடகங்கள்

நினைக்கவே பரவசமாக இருக்குது. இன்னும் இரண்டு மாதங்களில் அதாவது எண்ணிப் பத்து வாரங்களில் (இரண்டு மாதங்களில் பத்து வாரங்களா?) பரமசிவம் செஞ்சரி அடிக்கப் போகின்றார் ஓமோம்.. பம்பல் பரமசிவம் உங்களைச் சந்திக்கத் தொடங்கிய காலத்திலிருந்து, நூறாவது வாரம் வந்துவிடும்.

இதுக்குள்ளை பரமசிவம் சில பதிவுகளை மேற்கொள்ள விரும்புகின்றார். கடந்த மாரச் மாதம் காலத்தை வென்றவன் நாடகம் பற்றிச் சொல்லியிருந்தன். நான் நானே இந்த நாடகத்தை எழுதினேன் என்று தருமி பாணியில் நடுங்கி நடுங்கிச் சொல்லாமல், என்னால் எழுதப்பட்ட 'ஸ்கிரிப்' என்பதனை ஆணித் தரமாகச் சொல்லிக் கொண்டு, மகா ஜனங்களே! விடயத்திற்கு வருகின்றேன். இந்த முறை காலத்தை வென்றவன் நாடகப் பிரதியை தங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். காரணம் இன்னொரு மாரச் மாதம் எட்டிப் பார்க்குது. மார்ச் மாதத்திலை தான், உலக காச நோய் தினம் கொண்டாடப் படுகின்றது. அல்லாமலும் காச நோய் மீண்டும் ஒரு பயங்கர யுத்தத்தைத் தொடங்கியுள்ளது- யுத்தம் என்றால் தாக்குதலைத் தொடங்கி யிருக்குது. இந்த நாடகப் பிரதி மூலம் - 'ஸ்கிரிப்' மூலம் ஒரு பரப்புரையைத் தொடங்கலாம் என்பதுதான் எனது எண்ணம். நாடகத் தயாரிப்பாளர் இருப்பின் காச நோய்க் கெதிராக ஒரு பிரசாரத்திற்கு இந்த 'ஸ்கிரிப்' பயன்படும் என்பது இன்னொரு சிந்தனை.



அல்லாமலும், வாசகர்களுக்கு ஒரு விடயத்தைப் பற்றிச் சுவையாகச் சொல்கின்ற ஒரு உத்தியாகவும் இதனைக் கொள்ளலாம்.

"டட்டடங்"

திரைச் சீலை விலகுகின்றது. அதற்கு வசதியில்லாவிட்டால், உயர்ந்த மேடையில், பக்க வாட்டிலிருந்தும் பாத்திரம் பிரவேசிக் கலாம். மேடை, திரை என்று பார்த்தால் நாடகம் மேடையேறாமலே போய்விடலாம் இல்லையா?

"டொட்டடங்"

(இயமன் மேடையில் பிரவேசிக்கின்றார் பாட்டுடன்.)

இயமன்:- (பாட்டு)

**ஆதி சிவனின் ஆணைக்கடங்கி**
**ஐயன் விதித்த விதிக்கு இணங்கி**
**மேதினி மீதினில் உயிர்களைக்**
**கவர்ந்திடும் நானே எம ராசனே -**
**எந்த நாட்ட வரும் பெயர்**
**கேட்டிட நடுங்கிடும்**
**நானே எம ராசனே.**

(எட! பரமசிவம் இப்பிடியெல்லாம் பாட்டு எழுதுகிறாரே என்று நீங்கள் ஆச்சரியப்படுவது புரிகின்றது. உண்மையில் காலத்தை வென்றவன் நாடகத்திற்காக இந்த வரவுப் பாட்டினை எழுதிப் பாடிக் காட்டியவர் கவிஞர் வே.ஐயாத்துரை என்பதனை பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன். மேடையில் பாடுபவர் இயம தர்ம ராசனாகத் தோன்றும் நண்பர் ச.புஸ்பராசா).

(இனி நாடகத்திற்கு வருவோம்

பாட்டு நிறைவுற சித்திரபுத்திரனைச் சுமந்தவாறு இரண்டு யம கிங்கிரரகள் மேடையில் பிரவேசித்தல். தோளால் இறக்கி விட சித்திரபுத்திரன் இயமனை வணங்கி)

சித்திரபுத்திரன்:- பிரபோ! காலையி லெழுந்து, காலக் கணக்குகளைப் பார்த்து இங்கு வரும் போது கால தாமதமாகிவிட்டது மன்னிக்கவும் பிரபோ! (சித்திரபுத்தினாக நடித்தவர் க.தங்கராசா. இதற்கு மேலாக தமது சொந்த வசனங்களைப் பொருத்தமாகச் சேர்த்து, மிக அற்புதமாக நடிப்பார். புராணங்கள், இதிகாசங்கள் பற்றி மிகப் பரந்த அறிவு இருப்பதனால் அவரால் கையால் மடியால் வசனங்கள் போடப்பட்டு மிக அற்புதமாக அவரது பாத்திரம் உயிர் பெறும்.)

இயமன்:- நன்று! நன்று!! சித்திரபுத்திரா!!! இன்றைய காலக் கணக்கினை எடுத்துவிடும்.

சித்திரபுத்திரன்:- (சித்திரபுத்திரன் ஏட்டைப் புரட்டி படித்தவாறு) அது சரி அதுவும் சரி. அது நேற்றைய கணக்கு.ம்.. இன்றுஅட கிங்கிரரகளே!! அதோ முழிசிக் கொண்டு நிற்கின்றானே அந்தப் பாவி அவனை இழுத்து வாருங்கள்

(பாவி ஒருத்தனை இரண்டு கிங்கிரரகள் இழுத்து வருதல்)

இயமன்:- இவன் செய்த குற்றம் என்ன?

சித்திரபுத்திரன்:- குழந்தைகட்குக் கிடைக்க வேண்டிய பால்மா வகைகளை பதுக்கி வைத்த பாவி இவன். (இது இந்தக் காலத்திற்குப் பொருத்தமானதாகக் கருதிப் புகுத்தப்பட்ட தல்ல. 1970களின் மூலப்பிரதியிலுள்ளது. அப்பவும் அப்படித்தான். இப்பவும் அப்படித் தான். காலம் மாறியும், காட்சி மாறவில்லை.)

இயமன்:- என்ன? அவ்வளவு அட்டூழியம் செய்தானா? மன்னிக்க முடியாத குற்றமல்லவா? பதுக்குதல் விலை கூட்டுதல் பெரும் சமூகப் பொறுப்பற்ற செயல்.ம். இவனை கொதிக்கும் எண்ணையுள் தான் தள்ள வேண்டும்ம்.




கொண்டு செல்லுங்கள். (பாவியை இழுத்துச் செல்லல்.)

{இதற்கான ஊற்று, இப்படியான காட்சியும் கருத்தும், எங்களது மரபு வழி நாடகமான சத்தியவான் சாவித்திரி நாடகம் என்பதனை மறைக்க நான் விரும்பவில்லை.}

(இதே போன்று மேலும் இரண்டு மூன்று பாவிகள் இழுத்து வரப்படுதலும், அவர்



களுக்குத் தண்டனை வழங்குதலும் இடம் பெறும்.) இத்தகைய பாவிகளை நாடகம் இடம் பெறும் இடங்களிலிருந்து, அவர்கள் நாடகம் பார்க்கவரும், சிவில் உடுப்புடனேயே மேடை ஏற வைக்கப்படுவர். நாடகம் நீட்டப்பட வேண்டும், அல்லது பாவிகள் வந்து தங்களுக்கும் மேடையேற ஒரு சார்ந்தர்ப்பம் தரச் சொல்லிக் கேட்பதனைப் பொறுத்து, பாவிகள், அவர்கள் செய்த பாவங்கள், அதற்கான தண்டனைகள், சித்திரபுத்தினின் கற்பனையில் ஊற்றெடுக்கும். அத்தகைய வல்லமை படைத்த கற்பனையாளர் சித்திர புத்திரனாக நடித்தவர் என்பது இவ்விடத்தில் குறிப்பிடப்பட வேண்டும். பாவியாக நடிக்க ஒருவரும் முன் வராத விடத்து எமது கார் சாரதியே இரண்டு மூன்று தடவைகள் இழுத்து வரப்படும் பரிதாப நிலையும் ஏற்பட்டதுண்டு. ஐயோ பாவம். இனி விடயத்திற்கு வருவோம்.)

சித்திரபுத்திரன்:-மகா பிரபோ! ஒரு அவசர எச்சரிக்கைக் குறிப்பு இந்தக் கணக்கு களைப் பார்க்கும் போது குறித்து வைத்திருந் தேன்.ம். இந்தப் பக்கம் (துரிதமாக ஏட்டைப் புரட்டியவாறு, பரபரப்புடன்) ம்.. இங்க இருக்கு இங்க இந்தப் பக்கத்தில.

இயமன்:-உனது பரபரப்பிற்குக் காரண மென்ன சித்திரபுத்திரா?

சித்திரபுத்திரன்:-ஓ! அதுவா? இன்னும் இரண்டு வருடங்களில் பூலோகத்திலுள்ள பூபாலசிங்கம் என்பவர் இங்கு வந்து சேர வேண்டும்.

யமன்:- ம். அதற்கு?

சித்திரபுத்திரன்: அதற்கு இப்பொழுதே வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டும்.

யமன்:- என்ன? புதினமாக இருக்கிறதே?...இங்கு வந்து சேர வேண்டுமென்றால், கார் லொறி ஒன்றை அனுப்பி, அவன் மீது மோதி அவனது உயிரைக் கவர்ந்து வர வேண்டியதுதானே?

சித்திரபுத்திரன்:- அவனின் சாதகப்படி அவனுக்கு விபத்துச் சாவிற்குச் சார்ந்தர்ப்பமே இல்லை.

யமன்:- அப்ப மலேரியா?

சித்திரபுத்திரன்:- அதுவும் சாத்தியப்படாது. அவன் இருமி இருமி கஸ்ரப் பட்டுச் சாக வேண்டும்

யமன்:- அவன் என்ன சத்தியவான், மார்க்கண்டேயன் இவர்களைவிட விசேச மானவனா? அதற்கு என்ன செய்யலாம்?

**(அடுத்தவாரம் பார்ப்போம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொஞ்சம் சிரியுங்கோ புகைப்படக் கலாட்டா













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை கொழும்பு -17, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2014 ஜனவரி 01 ஆம் திகதி வெளியிடப்பட்டது.